# கத்தோலிக்க திருமறை

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 10

(2015இல் இருந்து நடைமுறைப்படுத்தப்படும்.)



சமயங்கள் மற்றும் விழுமியக் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீலங்கா

இணையத்தளம் : www.nie.lk

மின்னஞ்சல் : info@nie.lk

# கத்தோலிக்க திருமறை

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 10

சமயங்கள் மற்றும் விழுமியக் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீ லங்கா

இணையத்தளம் : www.nie.lk

மின்னஞ்சல் : info@nie.lk

கத்தோலிக்க திருமறை

தரம் 10

ஆசிரியர் வழிகாட்டி

முதற் பதிப்பு 2015

C தேசிய கல்வி நிறுவகம்

ISBN

சமயங்கள் மற்றும் விழுமியக் கல்வித் துறை.

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீ லங்கா

இணையத்தளம் : www.nie.lk

மின்னஞ்சல் : info@nie.lk

பதிப்பு :
பதிப்பகம்
தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2015ஆம் ஆண்டிலிருந்து தரம் 1, 6, 10 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர் களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்து பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும்,அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.
ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

# பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை நடைமுறைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

## கலைத்திட்டக் குழு

**ஆலோசனையும் வழிகாட்டலும்** : கல்விசார் அலுவல்கள் சபை,
தேசிய கல்வி நிறுவகம்

**பாட இணைப்பாளர்** : அருட்பணி. கால்டன் டி சில்வா
(விரிவுரையாளர் - தேசிய கல்வி நிறுவகம்)

அருட்பணி. றெக்ஸ் கொன்ஸ்ற்றன்ரயின்
(உதவி செயற்திட்ட அதிகாரி - தேசிய கல்வி நிறுவகம்)

**எழுத்தாளர் குழு** :

- முதுமாணி அருட்பணி. ஜூட் தஸநாயக்க
விரிவுரையாளர்,
கல்வியியற் கல்லூரி, பிங்கிரியா.

- முதுமாணி திரு. எஸ். ஜீ. கே. டி. எல். சீ. பிரசாத்
ஆசிரிய ஆலோசகர், கல்வி வலயம், ஹோமாகம.

- செல்வி துஷ்மந்தி டி சில்வா
ஆசிரிய ஆலோசகர், கல்வி வலயம்,
மிநுவன்கொடை.

- செல்வி. டி. ஐ. ஜோசப்
ஆசிரிய ஆலோசகர், கல்வி வலயம், கொழும்பு.

- கலைமாணி திரு. ரீ. ஐ. இரங்கநாயகம்
ஆசிரியர், புனித அந்தோனியார் மகளீர் மகா
வித்தியாலயம், கொழும்பு 03.

- செல்வி. ஏஞ்சல் மேரி
ஆசிரியை, புனித அந்தோனியார் மகளீர் மகா வித்தியாலயம்,
கொழும்பு 13.

- திருமதி. டப்ளியு. கே. எம். ஐ. எஸ். கே. பர்னாந்து
ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர்.

- கலைமாணி திருமதி. தி. ஜே. போல் அன்ரனி
ஓய்வு பெற்ற அதிபர்.

- கலைமாணி செல்வி. நா. பி. இராஜயோகினி
ஆசிரியை, சகல புனிதர்களின் மகளீர் மகா வித்தியாலயம்,
கொழும்பு 10.

## கத்தோலிக்க ஆலோசகர் குழு

- அதிமேதகு மெக்ஸ்வெல் சில்வா ஆண்டகை
  தலைவர்,
  கல்வி, மறைக்கல்வி, திருவிவிலிய கல்வி பற்றிய ஆயர்களின் ஆணைக்குழு

- அதிமேதகு ஜோசப் பொன்னையா ஆண்டகை
  உபதலைவர்,
  கல்வி, மறைக்கல்வி, திருவிவிலிய கல்வி பற்றிய ஆயர்களின் ஆணைக்குழு

- அதிவண. ஐவன் பெரேரா
  தேசிய பணிப்பாளர் - கத்தோலிக்க பாடசாலை

- அருட்பணி. பியல் ஜானக பெரேரா
  தேசிய பணிப்பாளர்- திருவிவிலிய, மறைக்கல்வி ஆணைக்குழு

- கலாநிதி அருட்பணி. ஹென்றி சில்வா
  விரிவுரையாளர், களனி பல்கலைக்கழகம்

- கலாநிதி. அருட்பணி. ஞானமுத்து ஹெக்ரர் பிலேந்திரன்
  தலைவர்,
  மேற்கத்தேய கலாசாரம் மற்றும் கிறிஸ்தவ, இஸ்லாம் கலாசார பீடம்,
  யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

- அருட்பணி. கிறெகறி எல். பர்னாந்து
  உதவி பணிப்பாளர்,
  சமய பிரிவு – கல்வி அமைச்சு.

## ஆசிரியர் வழிகாட்டியை பயன்படுத்துவற்கான அறிவுரைகள்

கத்தோலிக்க நெறிக்கு ஏற்ப வளமான வாழ்வுக்கு அவசியமான தேர்ச்சிகளின் அடிப்படையில் பாடசாலைக் கல்வியுடன் தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்கு இடமளித்து ஆசிரியர் வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

அறிவு மையம் சார்ந்த பரீட்சை முறைகளின் கீழ் சிறந்த பெறுபேறுகளையும் அறிவையும் ஊட்டுகின்ற கல்வி முறையானது சிறந்தது அல்ல என்பதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். கல்வியின் மூலம் உள்ளமும் கைகளும் ஊட்டம் பெற வேண்டும். இந்த இலக்கை நிறைவேற்றிக்கொள்ளும் முயற்சியில் இவ் ஆசிரியர் வழிகாட்டி நூலானது தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் வழிகாட்டியானது பாட நூலுக்கும் பாடத்திட்டத்திற்கும் ஏற்ப எழுதப்பட்டுள்ளது. எனவே கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளை இந்த வரையறைக்குள் ஒழுங்கமைத்துக் கொள்வது எமது கடமையாகும்.

- பாட பிரவேசமானது மிக முக்கியமானதாகையால் மாணவரின் ஆர்வத்தை தூண்டும் வகையில் பாடத்தை ஆரம்பியுங்கள்.
- பாட பிரவேசத்திற்கும் பாட விருத்திக்கும் அவசியமான தர உள்ளீடுகளை பயன்படுத்துங்கள்.
- மாணவரை சிறு குழுக்களாக பிரித்து குழு செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளுக்கு உசிதமான இடத்தினை தெரிவு செய்யுங்கள்.
- கற்றல் பேறுகளில் மாணவரின் வாழ்வை வளப்படுத்தும் வகையில் செயற்படுங்கள்.
- மாணவரின் விசுவாசத்தை விருத்திசெய்வதற்கு உறுதுணையாக இருங்கள்.

இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள் கட்டாயமானதல்ல. அதற்கு வேறு முறைகளையும் பொருத்தமான வகையில் பாவிக்கலாம். இருப்பினும் தேர்ச்சி, தேர்ச்சி மட்டங்கள் முக்கியமானதாகும். கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் கிறிஸ்தவ மத விழுமியங்களை வளர்ப்பதிலும் பிரயோகிப்பதிலும் அதிக கவனத்தை செலுத்துங்கள்.

பாட ஆரம்பம் முதல் இறுதிவரை கணிப்பீடு செய்வதுடன் ஆற்றல், ஆற்றலற்ற நிலைக்கேற்ப பின்னூட்டல் மற்றும் முன்னூட்டலை பெற்றுக்கொடுக்க வேண்டும். நேர அட்டவணை தயாரிக்கும் போது இரண்டு பாடவேளைகளும் அடுத்தடுத்து அமையாது பாடத்தை நெறிப்படுத்துவது உங்களுடைய பொறுப்பாகும். பாடத்திற்கு எதிர்ப்பார்க்கப்படும் மதிப்பீட்டு கணிப்பீட்டு நியதிகளுக்கு ஏற்றவாறு பாடத்தை தயார்செய்யுங்கள். மதிப்பீட்டின்போது புள்ளி வழங்கும் முறைகளை மாணவருக்கு முன்னரே அறிவியுங்கள். நீங்கள் மாணவருக்கு வழங்கும் பயிற்சிகளை பிழையின்றி பரிசீலனை செய்துகொள்ளுங்கள்.

பாடங்களின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள வீட்டுச்சூழல் என்ற பகுதியானது பெற்றோர் முதியோரின் பங்களிப்புடன் நிறைவேற்றப்படுதல் உகந்தது. அதற்கான அறிவுரைகளை அதிபர், பாட ஆசிரியர் மூலமாக பெற்றோர்களுக்கும் முதியோருக்கும் வழங்குதல் வேண்டும்.

**அருட்தந்தை கார்ல்டன் டி ஜோசப் சில்வா**

**விரிவுரையாளர்**

**தேசிய கல்வி நிறுவகம்.**

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iii |
| பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iv |
| கலைத்திட்டக் குழு | v |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் | vii |
| பாடத்திட்டம் | ix-xxv |
| கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டிற்கான வழிகாட்டல் | 1-80 |

## பாட அறிமுகம்

சமயம் என்பது வாழ்க்கை. எனவே சமயத்தை வாழ்க்கையிலிருந்து பிரிக்கமுடியாது. அனைத்து சமயங்களினதும் நோக்கம் ஒழுக்க விழுமியங்கள் நிறைந்த ஒரு சமூகத்தை உருவாக்குவதே ஆகும். இக் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டே இக் கலைத் திட்டம் திருத்தியமைக்கப் பட்டுள்ளது. இதற்கேற்ப இப் புதிய கலைத் திட்டத்தில் உள்ள தேர்ச்சிகளை மாணவரிடையே உருவாக்குவதே இதன் அடிப்படை நோக்கமாக அமைந்துள்ளது.

தேர்ச்சி என்பது அறிவு, மனப்பாங்கு, திறன், ஆளிடைத்திறன் என்பவற்றை ஒன்றிணைத்த ஒரு வாழ்க்கை முறையாகும்.

கிறிஸ்தவராகிய நாம் ஏற்றுக்கொள்ளும் அன்பை மையமாகக் கொண்ட இயேசுவின் படிப்பினையையே, கல்வித்தத்துவவியலாளர்கள் ஆளிடைத்திறன் என விளக்குகின்றார்கள். எனவே உன்னத ஆசிரியரான நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் படிப்பினைகளை நன்கு அறிந்து, கிறிஸ்தவ மனப்பாங்கை விருத்தியடையச் செய்து திறமை மிக்க அன்பு நிறைந்த ஓரு வாழ்வை கட்டியெழுப்புவதே இப் புதிய கலைத்திட்டத்தின் அடிப்படை அம்சமாகும்.

கிறிஸ்தவ படிப்பினைகள் திருவிவிலியத்தை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளன. ஏனைனில் கிறிஸ்தவ நம்பிக்கை, எதிர் நோக்கு, அன்பு என்பன திருவிவிலியத்தையே மையமாகக் கொண்டுள்ளது. ஆகையால் இக் கத்தோலிக்க கலைத்திட்டமும் திருவிவிலியத்துடனே ஆரம்பிக்கின்றது. மேலும் திருத்தந்தை தூய இரண்டாம் யோண் பவுலினால் குறிப்பிட்ட விசேட குழுவினரால் வடிவமைக்கப்பட்ட “ கத்தோலிக்க திருமறைக்கல்வி” (Catechism of the Catholic Church) எனும் நூலின் தலைப்பிற்கேற்ப ஏனைய தலைப்புகள் நான்கும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. அதற்கேற்ப பின்வரும் ஐந்து தலைப்புகள் இக் கலைத்திட்டத்தில் உள்ளடங்கி உள்ளது.

1. திருவிவிலியம்
2. விசுவாசம்
3. அருளடையாளம்
4. பத்துக்கட்டளை
5. செபவாழ்வு

மேற்கூறப்பட்ட தலைப்புகள் ஐந்துக்கேற்ப அமைக்கப்பட்ட ஐந்து தேர்ச்சிகளுடாக, 6-11 வகுப்பு வரையிலான மாணவர் உச்ச பயன் அடைவதை எதிர்ப்பார்க்கப் படுகின்றது. இதன் வழியாக திறமைமிக்க, முதிர்ச்சியடைந்த, செயல்திறன்மிக்க ஒரு கத்தோலிக்க பிரஜையை உருவாக்குவதே நோக்கமாகக் கருதப்படுகின்றது.

அதற்காக 6-9 வகுப்புகளில் அடிப்படை வாழ்க்கை முறையையும், 10-11 வகுப்புகளில் ஒரு முதிர்ச்சி பெற்ற கத்தோலிக்க மாணவனாக செயல்படவும் தேவையான தேர்ச்சிகளை உருவாக்குவது இதன் எதிர்ப்பார்ப்பாகும்.

ஏனெனில் உயர்தர வகுப்புகளில் மிகக் குறைந்தளவு மாணவர்களே கிறிஸ்தவம், கிறிஸ்தவ நாகரிகம் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்கின்றார்கள். எனவே பெரும்பாலான மாணவர்களினது கிறிஸ்தவ கல்வி அறிவு க.பொ.த. (சா/த) கலைத்திட்டத்துடன் வரையறுக்கப்படுகின்றது.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள செயற்திட்டங்களை மேலும் விருத்தி செய்து, உரிய தேர்ச்சிகளை மாணவர்களிடம் உருவாக்க மாணவர் மைய கல்விச் செயற்பாடுகளை அமைக்க வளவாளராகச் செயற்படுவதே ஆசிரியர்களது கடமையாகும்.

கிறிஸ்தவ விழுமியங்கள் கத்தோலிக்க ஆசிரியரது வாழ்வில் பிரதிபலிக்கப்படுவதை மாணவர்கள் கண்டுணர வேண்டும். எனவே சமயக் கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் சிறந்த ஒழுக்காற்றல் கொண்டவர்களாக் திகழ்வது சாலச் சிறந்தது.

## தேசிய குறிக்கோள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலானகல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கரு திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலம் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தி.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### 1. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

| | |
|---|---|
| எழுத்தறிவு: | கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம் |
| எண்ணறிவு: | பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல் |
| சித்திர அறிவு: | கோடு, உருவம் என்பவற்றின் கருமத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும் |
| தகவல் தொழினுட்பத் தகைமை: | கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல். |

2. **ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்**

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

3. **சூழல் தொடர்பான தேர்ச்சிகள்**

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை.

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

4. **வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்

அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்

அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்

பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

5. **சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

6. **ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்

7. **“கற்றலுக்குக் கற்றல்” தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை **முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.**

மேற்குறிப்பிட்ட தேசிய கல்விக் குறிக்கோள்களும், அடிப்படைத் தேர்ச்சிகளும் இலங்கையின் கல்வி தொடர்பாக தேசிய கொள்கைகள், மற்றும் பிரேரணைகளை உள்ளடங்கிய தேசிய கல்வி ஆணைக்குழுவின் 2003 ஆம் ஆண்டு மார்கழி மாத அறிக்கையிலிருந்து பெறப்பட்டதாகும்.

## விடயக் குறிக்கோள்

1. தமது வாழ்வை உருவாக்க திருவிவிலியத்தை ஆதாரமாகக் கொள்வர்.
2. படைப்பிலே மிக உன்னத படைப்பான மனிதனை படைத்தவரை அறிந்துக் கொள்வர்.
3. கிறிஸ்துவினுடைய தூதுப் பணியையும் அவருடைய அனுபவங்களையும் ஏற்றுக் கொண்டு முழுமையான கிறிஸ்தவராக வாழ்வர்.
4. இறைவார்த்தை, அருளடையாளங்கள், பொதுவழிபாடுகள் வழியாக ஊட்டம் பெற்று கிறிஸ்தவ வாழ்வுக்கு சான்றுபகர்வர்.
5. மறையைக் கற்றலும் வாழ்தலும் ஒரே செயன்முறை என்பதை விளங்கிக் கொள்வர்.
6. இறைகட்டளைகளையும், மலைப்பொழிவின் படிப்பினைகளையும் அடிப்படையாகக் கொண்டு கிறிஸ்தவ விழுமியங்களை தமது வாழ்வில் வாழக் கற்றுக் கொள்வர்.
7. செபத்தின் வல்லமையால் ஊட்டப்பெற்று இறை வரப்பிரசாதங்களை அனுபவிப்பர்.
8. தமது சமூகத்தில் பல்வேறு செயற்பாடுகளால் கிறிஸ்துவின் அளவு கடந்த அன்பை பரப்புவர்.
9. தம்மைச் சுற்றியுள்ள இயற்கைச் சூழலானது இறைவனால் வழங்கப்பட்ட கொடை என்பதை உணர்ந்து, அதனை பாதுகாத்து, விருத்தி செய்வதற்கான ஆற்றலையும் அறிவையும் பெறுவர்.
10. ஒழுக்க விழுமியங்களையும், மனிதமாண்பையும் பேணிக்காத்து கிறிஸ்துவுக்குரிய பண்புகளோடு உயிருள்ள ஒரு சமூகத்தை உருவாக்கும் பணியில் ஈடுபடுவர்.
11. கிறிஸ்தவ விசுவாசத்தைப் பாதுகாப்பதோடு, ஏனைய மதங்களையும் மதித்து வாழப் பழகுவர்.
12. இலங்கை பிரஜை என்ற வகையில் தமது நாட்டின் மீது பற்றையும், மதிப்பையும் வளர்த்துக்கொள்வர்.

## விடயத்திற்குரிய தேர்ச்சிகள்

1. திருவிவிலியம் தொடர்பான முழுமையான விளக்கத்தைப் பெற்று அன்றாட வாழ்க்கையில் பயனுள்ள முறையில் பயன்படுத்துவர்.
2. இறைவெளிப்பாட்டை தமது வாழ்வில் செயற்படுத்தும் முகமாக விசுவாச வாழ்வு வாழ்வர்.
3. அருளடையாளங்கள் வழியாக கிறிஸ்துவுடன் ஒன்றித்து முழுமையான கிறிஸ்தவ வாழ்வுக்கு சான்றுபகர்வர்.
4. இறைவனின் கட்டளைகளைக் கடைப்பிடித்து அன்பு வாழ்வு வாழ்வர்.
5. செபத்தின் மூலம் ஊட்டம் பெற்று இறைவனுடனும், மனிதனுடனும் ஆழமான உறவை வளர்த்துக் கொள்வர்.

## பாடத்திட்டம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 1.0 திருவிவிலியம் தொடர்பான விளக்கத்தைப் பெற்று அன்றாட வாழ்க்கையில் பலன் பெறுவர். | 10.1.1 அன்றாட வாழ்க்கை அனுபவங்களை நம்பிக்கையுடன் ஏற்றுக்கொள்வர். | **பாடம்1 : பழைய ஏற்பாட்டு நூல்களின் வகைகள்**<br>• உயிருள்ள பாரம்பரியம்<br>• பழைய ஏற்பாட்டு நூல்கள் 46. அவற்றை ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கலாம்.<br>**1. சட்ட நூல்கள் - 5**<br>**(தோரா, ஐந்நூல், மோசேயின் சட்டம்)**<br>1. தொடக்க நூல்<br>2. விடுதலைப் பயணம்<br>3. லேவியர்<br>4. எண்ணிக்கை<br>5. இணைச்சட்டம்<br>**2. வரலாற்று நூல்கள் - 16**<br>1. யோசுவா<br>2. நீதித்தலைவர்கள்<br>3. ரூத்<br>4. 1 சாமுவேல்<br>5. 2 சாமுவேல்<br>6. 1 அரசர்கள்<br>7. 2 அரசர்கள்<br>8. 1 குறிப்பேடு<br>9. 2 குறிப்பேடு<br>10.எஸ்ரா<br>11.நெகேமியா<br>12.எஸ்தர்<br>13.தோபித்து<br>14.யூதித்<br>15.1 மக்கபேயர்<br>16.2 மக்கபேயர்<br>**3. ஞான நூல்கள் - 7**<br>1. யோபு<br>2. திருப்பாடல்கள்<br>3. நீதிமொழிகள்<br>4. சபை உரையாளர்<br>5. இனிமைமிகு பாடல்<br>6. சாலமோனின் ஞானம்<br>7. சீராக்கின் ஞானம் | • பழைய ஏற்பாட்டு நூல்களைப் பிழையின்றி வகைப்படுத்துவர்.<br>• பத்துக் கட்டளைக்கேற்ப வாழ வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வர்.<br>• பழைய ஏற்பாட்டிலுள்ள வரலாற்று நூல்களைப் பற்றிய ஆக்கமொன்றை முன்வைப்பர்.<br>• அன்றாட வாழ்க்கைச் சம்பவங்களினூடாக இறைவனைக் கட்டுணர்வர்.<br>• குழுச் செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்குவர். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | | **4. இறைவாக்கினர் நூல்கள் - 17**<br>1. எசாயா<br>2. எரேமியா<br>3. புலம்பல்<br>4. எசேக்கியேல்<br>5. பாரூக்<br>6. ஓசேயா<br>7. யோவேல்<br>8. ஆமோஸ்<br>9. ஒபதியா<br>10. யோனா<br>11. மீக்கா<br>12. நாகூம்<br>13. அபகூக்கு<br>செப்பனியா<br>15. ஆகாய்<br>16. செக்கரியா<br>17. மலாக்கி<br><br>**5. திருவெளிப்பாடு - 1-தானியேல்**<br>• வரலாற்று நூல்கள்<br>- வரலாற்று நூல்களில்<br>- மீட்பு<br>- சமய வரலாறு<br>• சமய வரலாறு என்றால் என்ன?<br>• உடன்படிக்கையைக் கடைப்பிடிப்பதால் இறையாசீரை மீறும்பொழுது வீழ்ச்சி அல்லது எழுச்சி (தனிநபரில் அல்லது இனத்தில்)<br>• ரூத், எஸ்தர் - பெண்களின் பெயர்களைக் கொண்ட நூல்கள். | | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 10.1.2 திருத்தூதர்களின் சபையின் பண்புகளைப் பின்பற்றுவர். | **பாடம் 2 : புதிய ஏற்பாட்டு நூல்கள்**<br>• நூல்கள் 27, 3 பிரிவுகள்<br>**1. நற்செய்திகளும் திருத்தூதர் பணிகளும் - 5**<br>1. மத்தேயு 2. மாற்கு<br>3. லூக்கா 4. யோவான்<br>5. திருத்தூதர் பணிகள்<br>**2. திருமுகங்கள் - 21**<br>(பெயர்களைக் குறிப்பிடுதல்)<br>**3. திருவெளிப்பாடு - 1**<br>(திருவெளிப்பாட்டு நூல்)<br>• திருத்தூதர் பணி நூல் - அறிமுகம், ஆசிரியர், அர்ப்பணம், காலம், இடம், அமைப்பு, நோக்கம். | • புதிய ஏற்பாட்டு நூல்களை பிழையின்றி வகைப்படுத்துவர்.<br>• இறைவனுடைய நண்பராக வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• திருத்துாதர் பணி நூல் பற்றிய முன் வைப்பு ஒன்றைச் செய்வர்.<br>• நற்செய்தியை ஏனையவர்க்கும் கொண்டு செல்வர்.<br>• குழுக்ளுக்கிடையே அன்பாகச் செயற்படுவர். | 02 |
| | 10.1.3 ஏனையோருக்கு நற்செய்தி கொண்டு செல்ல தனது எழுதுந் திறனைப் பயன்படுத்துவார். | **பாடம் 3 : திருமுகங்கள்**<br>• திருமுகங்கள் 2 வகை<br>1. தூய பவுல் எழுதிய திருமுகங்கள்<br>2. பொதுத் திருமுகங்கள்.<br>• பவுலின் திருமுகங்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன.<br>**1. தூய பவுல் எழுதிய திருமுகங்கள் 7**<br>தெசலோனிக்கர், கலாத்தியர், பிலிப்பியர், 1, 2 கொரிந்தியர், உரோமையர், பிலமோன்<br>**2. தூய பவுலின் இணைத் திருமுகங்கள**<br>கொலோசையர், எபேசியர்<br>**3. தூய பவுலின் எழுத்தமைவைக் கொண்டுள்ள திருமுகங்கள்**<br>2 தெசலோனிக்கேயர், 1, 2 திமோத்தேயு, தீத்து<br>(வகைப்படுத்தல் போதுமானது) | • புதிய ஏற்பாட்டிலுள்ள திருமுகங்களை வகைப்படுத்துவர்.<br>• புனித பவுலின் எழுத்தார்வப் பங்களிப்பை பாராட்டுவர்.<br>• திருமுகங்கள் பற்றிய ஆக்கமொன்றை முன்வைப்பார்.<br>• தமது எழுத்தாற்றலை பயன்படுத்தி ஏனையோருக்கு நற்செய்தியைக் கொண்டு செல்வர்.<br>• குழுப்பங்களிப்போடு செயற்பாடுகளில் ஈடுபடுவர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 10.1.4 கிறிஸ்தவ அடையாளங்களின் மகிமையை மதிப்பர். | **பாடம் 4 : திருவெளிப்பாடு இலக்கியம்**<br>• திருவெளிப்பாடு என்றால் என்ன?<br>• பண்புகள் - சிறு விளக்கம்<br>1. இரட்டைக் கோட்பாடு<br>2. மறு உலக வாழ்வுக் கொள்கை<br>3. அடையாளங்களின் பயன்பாடு<br>4. காட்சி ஊடாக செய்திகளை முன்வைத்தல்<br>• நோக்கமும் ஆன்மீகமும்<br>(சிறு குறிப்புக்கள் போதுமானது) | • திருவெளிப்பாட்டு இலக்கியம் பற்றிய தகவல்களைக் கோவைப்படுத்துவர்.<br>• தொடர்பாடலின் போது அடையாளங்களின் முக்கியத்துவத்தை பாராட்டுவர்.<br>• கோவைப்படுத்திய கருத்துக்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.<br>• சமய அடையாளங்களை மரியாதையோடு பயன்படுத்துவர்.<br>• குழுக்களின் பங்களிப்போடு செயற்பாடுகளில் ஈடுபடுவர். | 02 |
| | 10.1.5 ஞானமும் நீதியும் நிறைந்தவர்களாய் வாழ்வர். | **பாடம் 5 : ஞான இலக்கியம்**<br>• ஞான இலக்கியம் என்றால் என்ன?<br>• ஞானத்தின் பிரிவுகள்<br>• முன்வைக்கப்பட்டுள்ள முறை<br>• இலக்கிய வடிவம்<br>• நோக்கமும் ஆன்மீகமும் | • எபிரேய ஞானத்தைப் பற்றி தகவல்களைக் கோவைப்படுத்துக.<br>• நன்மையானவற்றை தெரிவு செய்வதில் ஞானமுள்ளவர்களாக செயலாற்ற வேண்டுமெனவிவாதிப்பர்.<br>• கோவையைப் பயன்படுத்தி தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.<br>• ஞானமுள்ளவர்களாக செயற்படுவர்.<br>• ஞானமுள்ளவர்களாக குழுவினரின் பங்களிப்போடு செயற்பாடுகளில் ஈடுபடுவர். | 01 |
| 2.0 இறை வெளிப்பாட்டுக்குப் பதில் அளித்து நம்பிக்கையோடு வாழ்வர். | 10.2.1 அன்றாட வாழ்க்கையில் பாஸ்கா மறைபொருளை அனுபவமாக்கி புதிய வானம் புதிய பூமியை உருவாக்க செயற்படுவர். | **பாடம் 6 : பாஸ்கா மறைபொருள்**<br>• இயேசுவின் பாடுகள் (லூக். 22:54 - 23:25)<br>• இயேசுவின் மரணம் (லூக். 23:26 - 56)<br>• இயேசுவின் உயிர்ப்பு (யோவா.20:1 - 18)<br>• உயிர்த்த பின் இயேசு காட்சி கொடுத்தல்<br>- சீடர்களுக்கு (யோவா. 20:19 - 29)<br>- எம்மாவுஸ் பயணம்<br>(லூக். 24:13 - 35)<br>(க.தி.ம. 571 - 573, 595 - 597)<br>(க.தி.ம. 624 - 628, 631 - 635)<br>• புதிய வானமும் புதிய பூமியும் (தொ.நூ. 1:1, தி.வெ. 21:1, தி.வெ. 22:1 - 3, க.தி.ம. 1042:1050) | • பாஸ்கா பற்றிய தகவல்களைத் திரட்டுவர்.<br>• கிறிஸ்துவைப் போல் நாமும் உயிர்ப்போம் என்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• எம்மாவுஸ் பயணம் தொடர்பான தகவல்களைத திரட்டி ஆக்க பூர்வமான செயற்பாடொன்றை முன்வைப்பர்.<br>• அன்றாட வாழ்வில் பாஸ்கா மறைபொருளில் பங்குதாரராவர்.<br>• பிறர் துன்பங்களில் பங்கெடுப்பர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 10.2.2 தூய ஆவியினால் நிரப்பப்பட்டு கிறிஸ்தவ வாழ்வுக்குச் சான்று பகர்வர். | **பாடம் 7 : தொடக்க கிறிஸ்தவ சமூகம்**<br>• பெந்தக்கோஸ்து தினம்<br>- தி.ப. 2:1 - 13 (யூத இனத் திருத்தூதர்களுக்கு தூய ஆவியின் வரங்கள் கிடைத்தமை)<br>• பேதுருவானவரின் அருளுரையும் அதன் பயன்களும் தி.ப. 2:14 - 41<br>- கொர்னேலியு வீட்டில் தி.ப.10:1-18, 44- 48<br>- புறவினத்தார் பரிசுத்த ஆவியைப் பெறுதல்.<br>• நம்பிக்கை கொண்டோரின் வாழ்க்கை முறை தி.ப. 2:42 - 47<br>- பொது உடமை தி.ப. 4:32 - 37<br>• திருத்தொண்டர்களை நியமித்தல் தி.ப. 6:1 - 7<br>- (முதல் வேதசாட்சி) ஸ்தேவானின் சாட்சி தி.ப. 6:8 - 15, 7:54 - 60<br>• திருத்தூதர்களின் முதல் வேதசாட்சி பெரிய யாக்கோபு தி.ப. 12:1 - 2 | • தொடக்க கிறிஸ்தவர்களின் பண்புகளை விளக்கமாக எழுதுவர்.<br>• தூய ஆவியானவர் எம்மை சரியான பாதையில் வழி நடத்துவார் என்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• ''உயிர்த்த கிறிஸ்துவுக்கு சான்று பகர்ந்த முதல் வேதசாட்சி ஸ்தேவான்'' என்ற தலைப்பில் ஆக்க பூர்வமான செயற்பாடொன்றை முன்வைப்பர்.<br>• கிறிஸ்தவ வாழ்விற்கு சான்று பகர்வர்.<br>• தம்மிடம் உள்ளவற்றை இல்லாதவரோடு பகிர்ந்து கொள்வர். | 03 |
| | 10.2.3 உண்மையான மனமாற்றத்தின் ஊடாக நற்செய்தியின் தூதுவர்களாகச் செயற்படுவர். | **பாடம் 8 : தூய பவுல்**<br>• சவுல் திருச்சபையைத் துன்புறுத்தல் தி.ப. 8:1 - 3<br>• சவுல் அழைப்புப் பெறல் தி.ப. 9:1 - 19<br>• பவுலின் முதல் தூதுரைப் பயணம்<br>• இரண்டாம் தூதுரைப் பயணம்<br>• மூன்றாம் தூதுரைப் பயணம் (தூதுரைப் பயணங்களின்போது தரிசித்த நகர்களுக்கு)<br>• புனித பவுலின் இறுதிக்கால வாழ்வு (திருச்சபை உலகிற்கு ஒளி) | • தூய பவுல் பற்றிய தகவல்களைப் பட்டியல் படுத்துவர்.<br>• நற்செய்தியின் தூதவராகச் செயற்பட உளமாற்றம் அவசியம் என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>• தூய பவுலின் தமஸ்கு நிகழ்வை நாடகமாக நடித்துக் காட்டுவர்.<br>• தமது பங்கில் குழு ஒற்றுமையை வளர்ப்பர்.<br>• தமது திறமைகளை திருச்சயைின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்துவர். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 10.2.4 கத்தோலிக்க திருச்சபையின் தலைமைத்து வத்திற்கு மதிப்பளிப்பர், கீழ்ப்படிவர். | **பாடம் 9 : தூய பேதுரு**<br>• அழைத்தல் லூக். 5:1 - 11<br>• இயேசுவைப் பற்றிய பேதுருவின் அறிக்கை மத். 16:13 - 20<br>• இயேசு பேதுருவிடம் பொறுப்புக்களைக் கையளித்தல். யோவா. 21:15 - 19<br>(க.தி.ம. 551 - 553, க.தி.ம. 765 - 816, 862)<br>• திருத்தந்தை பிரான்சிஸ் பற்றிய சிறு விளக்கம் | • திருச்சபையின் தலைமைத்துவம் தொடர்ந்து நடைபெற்று வருவது பற்றிய தகவல்களைத் திரட்டுவர்.<br>• இறை அழைத்தலுக்கு பதிலளிக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>• தொகுக்கப்பட்ட தகவலுக்கேற்ப ஆக்கப் பூர்வமான நாடகமொன்றை சமர்ப்பிப்பர்.<br>• திருச்சபையின் தலைமைத்துவத்திற்கு கீழ்ப்படிவர்.<br>• திருச்சபையின் தலைமைத்துவத்திற்கு மதிப்பளிப்பர். | 02 |
| | 10.2.5 திருத்தூதர் வழிவந்த ஒரே திருச்சபையின் செயலாக்கமுள்ள உறுப்பினராகச் செயற்படுவர். | **பாடம் 10 : திருச்சபையின் பண்புகள்**<br>• ஏகம், பரிசுத்தம், கத்தோலிக்கம், அப்போஸ்தலிக்கம்<br>- ஏகம் க.தி.ம. 813 - 822<br>- பரிசுத்தம் க.தி.ம. 823 - 829<br>- கத்தோலிக்கம் க.தி.ம. 830 - 831<br>- அப்போஸ்தலிக்கம் க.தி.ம. 857, 861, 862<br>• திருச்சபை - கிறிஸ்துவின் மறையுடல் 1கொரி. 12:12 - 30 | • திருச்சபையின் பண்புகளை தொகுப்பர்.<br>• திருச்சபை உறுப்பினரிடையே எந்தப் பாகுபாடும் காட்டாது வாழவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>• திருச்சபையை கிறிஸ்துவின் மறையுடல் என்பதை நாடமாக நடித்துக் காட்டுவர்.<br>• கிறிஸ்துவின் மறையுடலின் அங்கத்தவர் என்ற வகையில் தத்தமது பொறுப்புகளை நிறைவேற்றுவார்.<br>• அயலவரின் தேவைகளில் முன்னின்று உதவுவர். | 01 |
| | 10.2.6 இலங்கைக் கத்தோலிக்கத் திருச்சபையின் ஒருமைப் பாட்டினை வினைத்திறன்மிக்க வகையில் தேசிய பாதுகாப்பினையும் பிணைப்பினையும் ஒருமைப் பாட்டினையும் ஒற்றுமையையும் கட்டியெழுப்புவர். | **பாடம் 11 : இலங்கைத் திருச்சபை**<br>• போர்த்துக்கேயர் காலம்<br>• ஒல்லாந்தரின் காலம்<br>• முத். யோசவ்வாஸ் அடிகள்<br>• அருட்பணி கொன்சால்வே அடிகள்<br>• அவர் கிறிஸ்தவ இலக்கியத்திற்கு ஆற்றிய பணி<br>• பிரித்தானியர் காலம் மதச் சுதந்திரம்<br>• மறை மாவட்டங்களும் ஆயர்களும் | • இலங்கைத் திருச்சபையின் வரலாற்றுத் தகவல்களைத் திரட்டுவர்.<br>• எமது நாட்டு கத்தோலிக்கரின் தனித்துவத்தைப் பாதுகாக்க வேண்டு மென்பதை ஏற்றுக்கொள்வர்.<br>• தொகுத்த தகவல்களை ஆக்க பூர்வமாக முன் வைப்பர்.<br>• சவால்களை எதிர் கொண்டு கத்தோலிக்க விசுவாசத்தைப் பாதுகாப்பர்.<br>• தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்க உதவுவர். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 3.0 அருளடை யாளங்கள் வழியாக கிறிஸ்துவுடன் இணைந்து பெற்றுக் கொண்ட புதுவாழ்வுக்குச் சான்று பகர்வர். | 10.3.1 கிறிஸ்தவ வாழ்வில் ஊட்டம்பெற நிதமும் நற்கருணையை உட்கொள்வர். | **பாடம் 12 : நற்கருணை**<br>• நற்கருணையின் பண்புகள்<br>- அருட்சாதனம் உணவு யோவா. 6:53 - 56<br>- பலி லூக். 22:19 - 20<br>- உடன்படிக்கை எரே. 31:31 - 34, வி.ப. 24:4 - 8, 1கொரி. 11:25, எபி. 9:4 - 22<br>- நன்றிப் பலி லூக். 22:17<br>- நினைவுப் பலி லூக். 22:19, 1கொரி. 11: 24<br>• திருப்பலிக்கு புதிய ஏற்பாட்டில் கூறப்பட்ட பெயர்கள்<br>1. அப்பம் பிடுதல் லூக். 24:35, தி.ப. 2:42<br>2. இயேசுவின் இறுதி உணவு 1கொரி. 11:20<br>3. புதிய பாஸ்கா விழா 1கொரி. 5:8<br>4. இயேசுவின் உடலில் பங்கேற்றல் 1கொரி. 10:16<br>• நற்கருணை தொடர்பான முன் அடையாளங்கள்<br>1. மெல்கிசேதேக் அப்பமும் திராட்சை இரசமும் தொ.நூ. 1:4 - 20<br>2. புளிப்பற்ற அப்பமும் திராட்சை இரசமும் வி.ப. 12:15 - 20<br>3. மன்னா உணவு வி.ப. அதி. 16<br>4. அப்பம் பலுகச் செய்தல் லூக். 9:12 - 17<br>5. வாழ்வு தரும் உணவு பற்றிய படிப்பினைகள் யோவா. 6:26, 27, 35 | • நற்கருணையின் பண்புகளை விளக்குவர்.<br>• நற்கருணையில் கிறிஸ்து உயிருள்ள பிரசன்னமாக இருக்கிறார் என்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• நற்கருணையைப் பற்றிக் கோவைப் படுத்திய தகவல்களை ஆக்கங்களாக முன் வைப்பர்.<br>• திருப்பலியில் ஆர்வத்தோடு பங்கேற்பர்.<br>• நற்கருணையில் உயிரோடு உயிருள்ள பிரசன்னமாக இருக்கின்ற இயேசு கிறிஸ்துவிடம் தமது நண்பர்களோடு சேர்ந்து செபிப்பர். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 10.3.2 இயேசுவின் நற்கருணை உணவில் பங்கேற்று அன்பில் வாழ்வர். | **பாடம்13 : பாஸ்கா விருந்து**<br>• பாஸ்கா வி.ப. 12:1 - 14<br>• இறுதி இராவுணவும் நற்கருணை ஏற்படுத்துதலும்<br>1கொரி. 11:23 - 24 லூக். 22:19 - 20<br>• நற்கருணை பெறுவதற்கான ஆன்ம உடல் ஆயத்தங்கள் 1கொரி. 11:27 - 30<br>• பாதங் கழுவுதல் யோவா. 13:1 - 20<br>• அன்புக் கட்டளை யோவா. 13:34 | • பழைய ஏற்பாட்டில் பாஸ்கா உணவு<br>• முறையான முன்னாயத்தங்களோடு நற்கருணையைப் பெற வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• இறுதி இராவுணவு நிகழ்ச்சியை ஆக்கப்பூர்வமாக முன்வைப்பர்.<br>• பணிவான தலைவனாக வகுப்பில் செயற்படுவர்.<br>• ஆன்ம, உடல் ரிதியாக ஆயத்தமாகி நற்கருணையைப் பெறுவதற்கு நண்பர்களுக்கு உதவுவர். | 02 |
| | 10.3.3 அன்றாட வாழ்வில் பிறருக்காக எம்மைப் பலியாக்கி வாழ்வர். | **பாடம் 14 : கல்வாரி யாகம்**<br>• பழைய ஏற்பாட்டின் பல்வேறு பலிகள்<br>• பலியின் நோக்கம் பலியின் வகைகள்<br>எரி பலி நல்லுறவுப்பலி<br>1. முழுமையான பலி தானியம்<br>2. சாதாரண பலி திராட்சை ரசம்<br>3. பாவப்பரிகாரப் பலி எண்ணெய் வகைகள்<br>4. குற்ற நீக்கப் பலி அப்பம்<br>• எரி பலிகளுக்காகப் பயன்படுத்தப்படும் மிருகங்கள்<br>மாடு லேவி. 1:3 - 9, ஆடு லேவி. 1:10 - 13<br>பறவை லேவி. 1:14 - 17<br>• கல்வாரிப் பலி எபி. 9:23 - 10:11 | • பழைய ஏற்பாட்டில் பல்வேறு பலிகளை விபரிப்பர்.<br>• அன்றாட வாழ்வில் பலியாக வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• பழைய ஏற்பாட்டுப் பலிகளையும் கல்வாரிப் பலியையும் ஆக்கங்களாக முன்வைப்பர்.<br>• பாவம் செய்த போது தமது பிழைகளை ஏற்றுக்கொண்டு குற்ற நீக்கற் பலியாக பாவப்பரிகாரம் செய்வர்.<br>• பிறரின் துன்பங்களின் போது தாமும் கவலைப்படுவர். | 02 |
| | 10.3.4 தியாக வாழ்வின் முன் மாதிரிகையைத் தமது வாழ்வாக்கிக் கொள்வர். | **பாடம்15 : தியாக வாழ்வின் முன்மாதிரிகை**<br>• முத்திப்பேறுபெற்ற திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர்<br>• முத்திப்பேறுபெற்ற அன்னை திரேசா<br>• புனித மக்சி மில்லியன் கோல்பே<br>• அருட்பணி மைக்கல் றொட்றிக்கோ | • பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்களின் வாழ்க்கைக் கதை பற்றிய தகவல் அடங்கிய அறிக்கையொன்று தயாரிப்பர்.<br>• தமது பெற்றோரும் தியாக வாழ்வு வாழ்கின்றனரென்பதை ஏற்றுக்கொள்வர்.<br>• தயாரிக்கப்பட்ட அறிக்கையை ஆக்கபூர்வமாக முன்வைப்பர்.<br>• பிறரின் முன்னேற்றத்திற்காக தியாகத்துடன் செயற்படுவர்.<br>• எல்லோரையும் அன்பு செய்வர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 4.0 இறை கட்டளைகளைக் கடைப்பிடித்து அன்பாக வாழ்வர். | 10.4.1 முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் முழு ஆற்றலோடும் முழு மனதோடும் கடவுளாகிய ஆண்டவரை அன்பு செய்வர். | **பாடம் 16 : இறையன்பு**<br>• இறையன்பின் பண்புகள்<br>• விசுவாசம் எதிர்நோக்கு அன்பு (க.தி.ம. 2087 - 2094)<br>• இறைவனை அன்புசெய்ய கடைப்பிடிக்க வேண்டியவை<br>• ஆராதனை, செபம், பலி, வாக்குறுதி, நேர்ச்சி (க.தி.ம. 2095 - 2103)<br>• இறைவனின் பெயரை மரியாதையுடன் உச்சரிப்பதோடு கிறிஸ்தவ பெயர்களையும் பாவித்தல் (க.தி.ம. 2150 - 2159)<br>• ஞாயிறு திருப்பலியின் முக்கியத்துவம் (க.தி.ம. 2178 - 2179) | | 02 |
| | 10.4.2 ஒருவருக்கொருவர் ஆழ்ந்த முறிவுபடாத அக்கறை உணர்வுடன் அன்பின் சமூகத்தைக் கட்டியெழுப்புவர். | **பாடம் 17 : அன்பின் சமூகம்**<br>• பிள்ளைகளின் பொறுப்புக்கள் (க.தி.ம. 2214 - 2220)<br>• பெற்றோரின் பொறுப்புக்கள் (க.தி.ம. 2221 - 2232)<br>• அரச தலைவர்களின் பொறுப்புக்கள் (க.தி.ம. 2235 - 2237)<br>• நாட்டுப் பிரஜைகளின் பொறுப்புக்கள் (க.தி.ம. 2238 - 2243) | | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 10.4.3 இறை உருவாகவும் சாயலாகவும் படைக்கப்பட்ட மனிதன் உயிரைப் பாதுகாக்கத் தம்மை அர்ப்பணிப்பர். | **பாடம் 18 : மனித மாண்பினைப் பேணுவோம்**<br>• மனிதன் உன்னத படைப்பு, இறைசாயலாகப் படைக்கப்பட்டான், உயிர்மூச்சைப் பெற்றுள்ளான். தொ.நூ.1:27 - 28, தொ.நூ. 2:7<br>• உயிர்களை மதிப்பதன் முக்கியத்துவம் (க.தி.ம. 2259 - 2262)<br>• தனது உயிரைப் பாதுகாத்தல் (மது, போதை, புகைப்பிடித்தல்) (க.தி.ம. 2288 - 2291)<br>• 5ஆம் கட்டளைக்கு எதிரான செயல்கள்<br>- மனிதர்களைக் கொலை செய்தல்<br>- வெவ்வேறான சமுதாயக் கொலை<br>- உடல், உள வேதனை<br>- சிறையிலடைத்தல்<br>- நாடு கடத்தல்<br>- அடிமைத்தனம்<br>- விபசாரத் தொழில் செய்தல்<br>- குழந்தைகள், பெண்களை விற்றல்<br>- உழைப்பினைக் கொள்ளையடித்தல்<br>- நற்பெயரைக் கெடுத்தல்<br>- கருச்சிதைவு (க.தி.ம. 2270 - 2275)<br>- தற்கொலை செய்தல் (க.தி.ம. 2282 - 2283) | • ஐந்தாம் கட்டளைக்கு ஏற்ப நிறைவேற்ற வேண்டியனவும் அதற்கு எதிரானவற்றையும் அட்டவணைப் படுத்துவர்.<br>• மனித உயிர் இறைவனுக்கு மட்டும் சொந்தமானது என்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• ஐந்தாம் கட்டளைக்கேற்ப கோவைப் படுத்திய கருத்துக்களை ஆக்கங் களாக முன்வைப்பர்.<br>• மனித உயிரை மதிப்பர். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 10.4.4 உடலாலும் உள்ளத்தாலும் தூய்மையாக வாழ்வர். | **பாடம் 19 : தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர்**<br>• கற்பு (தூய்மை) (க.தி.ம. 2237 - 2364)<br>• தூய்மைக்கு எதிரான பாவங்கள் (செயல்கள்)<br>• மோகம் (க.தி.ம. 2351)<br>• ஓரினச் சேர்க்கை (க.தி.ம. 2352)<br>• நீலப்படங்கள் (க.தி.ம. 2353)<br>• பாலுணர்வைத் தூண்டக்கூடிய நூல்கள், பத்திரிகைகள் (க.தி.ம. 2354)<br>• இணையத்தளப் படங்கள், கெட்ட வார்த்தைகள்<br>• விபசாரம் (க.தி.ம. 2355)<br>• கற்பழிப்பு (க.தி.ம. 2356)<br>• சுய இன்பம் அனுபவித்தல் (க.தி.ம.2357 - 2359)<br>• திருமண உடன்படிக்கையைப் பாதுகாத்தல் (க.தி.ம. 2364 - 2365) | • 6ம், 9ம் கட்டளைகளின் படி எவ்வாறு வாழவேண்டுமென்பதை கோவைப் படுத்துவர்.<br>• 6ம், 9ம் கட்டளைகளைப் கடைப்பிடிக்க மனதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>• 6ம், 9ம் கட்டளைகளுக்கேற்ப வாழும் முறையை ஆக்கமொன்றினால் முன்வைப்பர்.<br>• தூய்மையாக வாழ்வர்.<br>• பிறர் தூய்மையான வாழ்வு வாழ உதவுவர். | 02 |
| | 10.4.5 தேசிய, சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக விளங்குகின்ற மனித வளங்களை அபிவிருத்தி யடையச் செய்யும்போது தனியார் சொத்துக்களைச் செயற்றிறன்மிக்க வகையில் பயன்படுத்துவர். | **பாடம் 20 : தனியார் உடமைகள் விண்ணரசுக்காக**<br>• தனியார் உடமைகள் பற்றிய திருச்சபையின் படிப்பினைகள் (க.தி.ம. 2402 - 2406)<br>• பிறர் உடமைகளைப் பாதுகாத்தல் (க.தி.ம. 2408 - 2414)<br>• ஏழைகளுக்கு உதவுதல் (க.தி.ம. 2443 - 2449)<br>1யோவா. 3:17, க.தி.ம. 2534 | • தனியார் உடமைகள் பற்றிய திருச்சபையின் படிப்பினைகளைக் கோவைப்படுத்துவர்.<br>• மனிதன் உடமைகளுக்காக அல்ல, மனிதனுக்குப் பணியாற்றவே இறைவன் இவற்றைப் பெற்றுக் கொடுத்துள்ளார் என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>• திருச்சபையின் படிப்பினைகளுக்கேற்ப தனியார் உடமைகளை உரிய முறையில் பயன்படுத்தலும் அவற்றின் தீய விளைவுகள் பற்றியும் ஆக்கமொன்றை முன்வைப்பர்.<br>• தனியார் உடமைகளைப் பயன்படுத்தும் போது, பொது நலத்தோடு செயற்படுவர்.<br>• தனியார் உடமைகளால் பிறருக்கு உதவி செய்வர். | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 10.4.6 உண்மைக்குச் சான்று பகர்ந்து நேர்மையான வாழ்வு வாழ்வர். | **பாடம் 21: நேர்மையான வாழ்வு**<br>• உண்மையுடன் வாழ்வர் க.தி.ம 2465 - 2470<br>• உண்மைக்குச் சான்று பகர்தல் க.தி.ம 2471 - 2474<br>• 8ஆம் கட்டளைக்கு எதிரானவை க.தி.ம 2475 - 2487<br>• இரகசியம் பேணல் க.தி.ம 2491 | • நிறை உண்மையுள்ள சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்காக பங்களிப்புச் செய்யக்கூடிய விதத்தினைப் பற்றி தகவல்களை கோவைப்படுத்துவர்.<br>• எப்பொழுதும் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• கோவைப்படுத்திய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.<br>• உண்மைக்குச் சான்று பகர்வர்.<br>• பிறருடைய இரகசியங்களைப் பேணுவர். | 01 |
| 5.0 செபத்தின் மூலம் ஊட்டம் பெற்று இறைவனுடனும் மனிதனுடனும் ஆழமான உறவை வளர்த்துக் கொள்வர். | 10.5.1 திருவழிபாட்டு ஆண்டினூடாக மறையுண்மைகளை நினைவு கூர்ந்து வாழ்வர். | **பாடம் 22 : திருவழிபாட்டு ஆண்டு**<br>• திருவழிபாட்டு ஆண்டில் காலங்களை விளக்குதல்.<br>• ஒவ்வொரு காலப்பகுதிகளுக்குரிய நிறங்கள் விளக்கங்களும் அதன் அர்த்தமும். | • திருவழிப்பாட்டு ஆண்டு பற்றிய தகவல்களை கோவைப்படுத்துவர்.<br>• திருவழிபாட்டு ஆண்டுச் சக்கரத்திலுள்ள திருநாட்களை பொருளுள்ள முறையில் நடாத்த வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வர்.<br>• திருவழிபாட்டு ஆண்டில் உள்ள திருநாட்களை அட்டவணைப்படுத்தி ஆக்கமாக முன்வைப்பர்.<br>• திருவழிபாட்டு ஆண்டிலுள்ள மறை உண்மைகளை பொருளுள்ள முறையில் கொண்டாடுவர்.<br>• குழுக்களுடன் அன்புடன் செயற்படுவர். | 01 |
| | 10.5.2 திருப்பலியை கிறிஸ்தவ வாழ்வின் மையமாக்கிக் கொள்வர். | **பாடம் 23 : திருப்பலி**<br>• திருப்பலிப் பகுதிகளை அர்த்தத்துடன் விளக்கிக் கூறல். | • திருப்பலியின் 4 பகுதிகளையும் கோவைப்படுத்துவர்.<br>• தகுந்த ஆயத்தத்தோடு திருப்பலியில் பங்கேற்க விருப்பத்தைத் தெரிவிப்பர்.<br>• திருப்பலியின் ஒவ்வொரு வழிபாட்டினதும் உப பிரிவுகள் பற்றி தயாரிக்கப்பட்ட அறிக்கையை ஆக்கங்களாக முன் வைப்பர்.<br>• திருப்பலியில் பக்தியோடு பற்கேற்பர்.<br>• குழுக்களின் பங்களிப்போடு செயற்பாடுகளில் ஈடுபடுவர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 10.5.3 கிறிஸ்தவ சபையின் ஒற்றுமைக்காகத் தம்மை அர்ப்பணிப்பர். | **பாடம் 24 : உன்னத குருவின் செபம்**<br>• உன்னத குருவின் செபம் யோவா. 17:1 - 5<br>– தனக்காக வேண்டுதல் 17:6 - 19<br>– திருத்தூதர்களுக்காக வேண்டுதல் 17:20 - 26<br>– திருச்சபையின் ஒற்றுமைக்காக<br>– கிறிஸ்தவ சபையின் ஒற்றுமைக்காக<br>• ஏற்றுக்கொள்ளப்பட்ட சபைகள்<br>• சங்க ஏடுகள் - பெயர்<br>• கிறிஸ்தவ ஒற்றுமை வாரம் (தை 18 25)<br>• கிறிஸ்தவராகிய எமது நோக்கம் ஒரே திருச்சபையைக் கட்டியெழுப்புதல். | • உன்னத குருவின் செபம் பற்றிய தகவல்களைக் கோவைப்படுத்துவர்.<br>• கிறிஸ்தவ சபைகளின் ஒருமைப் பாட்டிற்காகத் தம்மை அர்ப்பணிக்க வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வர்.<br>• கிறிஸ்தவ சபைகளின் ஒருமைப்பாடு பற்றிய ஆக்கமொன்றை முன்வைப்பர்.<br>• ஏற்றுக்கொள்ளப்பட்ட சபைகளின் ஒற்றுமைக்காக செயற்படுவர்.<br>• ஒரே சபையை கட்டியெழுப்புவதற்காக செயலாற்றுவர். | 02 |
| | 10.5.4 செபத்தினால் சக்தி பெற்று சோதனைகளை வெற்றி பெறுவர். | **பாடம் 25 : ஜெஸ்தமனியில் வேண்டுதல்**<br>மாற். 14:32 - 42<br>• ஜெஸ்தமனியின் அமைப்பு<br>• உன்னத குருவின் செபத்தின் மூன்று பகுதிகள்<br>• கிறிஸ்தவனின் நோக்கம் ஒரே ஜெஸ்த மனியின் அழைப்பு. மாற். 14:32 - 42<br>1. இயேசுவின் மனித சுபாவம்<br>2. இறைவனுக்கும் இயேசுவுக்கும் இடையிலுள்ள<br>3. துன்பங்கள்<br>• வேண்டுதல் மூலம் இயேசு சக்தியைப் பெறுதல்.<br>• திருத்தூதர் செபத்தின் மூலம் சக்தியைப் பெறாததால் சோதனைக்கு உட்படுதல். (காது வெட்டுதல், தப்பி ஓடுதல், புறக்கணித்தல்) | • ஜெஸ்தமனித் தோட்டத்துச் செபம் பற்றிய தகவல்களைக் கோவைப் படுத்துவர்.<br>• இயேசு ஜெஸ்தமனியில் செபித்ததன் வழியாக சவால்களை வெற்றியீட்டக் கூடிய சக்தியை பெற்றுக்கொண்டார் என்பதை ஏற்றுக்கொள்வார்.<br>• செபத்தினால் சக்தியை பெற்று சோதனைகளில் இருந்து வெற்றியீட்டும் முறையை ஆக்கமாக முன்வைப்பர்.<br>• வாழ்க்கையில் எல்லா சந்தர்ப்பங் களிலும் செபத்தினால் சக்தியை பெற்றுக்கொள்வர்.<br>• குழுக்களின் பங்களிப்போடு செயற்பாடு களில் ஈடுபடுவர். | 02 |

# கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டிற்கான வழிகாட்டல்

## பாடம் - 01

## பழைய ஏற்பாட்டு நூல்களின் வகைகள்

**தேர்ச்சி 1.0** : திருவிவிலியம் தொடர்பான விளக்கத்தைப் பெற்று அன்றாட வாழ்க்கையில் பலன் பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 10.1.1** : அன்றாட வாழ்க்கை அனுபவங்களை நம்பிக்கையுடன் ஏற்றுக்கொள்வர்.

**பாடவேளை** : 03

**கற்றல் பேறுகள்** :

- பழைய ஏற்பாட்டு நூல்களைப் பிழையின்றி வகைப்படுத்துவர்.
- பத்துக் கட்டளைக்கேற்ப வாழ வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வர்.
- பழைய ஏற்பாட்டிலுள்ள வரலாற்று நூல்களைப் பற்றிய ஆக்கம் ஒன்றை முன்வைப்பர்.
- அன்றாட வாழ்க்கைச் சம்பவங்களினூடாக இறைவனைக் கண்டுணர்வர்.
- குழுச்செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்குவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- இணைப்பு 2 ஐ செயற்படுத்திக் கீழ்க் காணப்படும் கருத்துக்களை வெளிக்கொணரக் கூடியதாக கலந்துரையாடலை நடாத்துங்கள்.
    - பழைய ஏற்பாட்டிலுள்ள நூல்கள் 46 ஆகும்.
    - அவற்றை 5 பிரிவுகளாகப் பிரிக்கலாம்.
        - சட்ட நூல்கள்
            - ஐந்து
            - அவற்றின் பெயர்கள்
        - வரலாற்று நூல்கள்
            - பதினாறு
            - அவற்றின் பெயர்கள்
        - ஞான நூல்கள்
            - ஏழு
            - அவற்றின் பெயர்கள்
        - இறைவாக்கினர் நூல்கள்
            - பதினேழு
            - அவற்றின் பெயர்கள்
        - திருவெளிப்பாடு
            - ஒன்று
            - அதன் பெயர்

(20 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1, 3 ஆகியவற்றை பகிர்ந்தளியுங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(10 நிமிடங்கள்)

படி 3

- ஓவ்வொரு குழுவினருக்கும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன் வரும் மாணவர்களுக்கு வாய்ப்பினை வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் பயன் படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.
- பழைய ஏற்பாட்டின் வரலாற்று நூல்களின் எண்ணிக்கை
- அவற்றின் பெயர்கள்
- பழைய ஏற்பாட்டின் வரலாற்று நூல்களில் சமய அல்லது மீட்பின் வரலாறு உள்ளடக்கப்பட்டுள்ளது.
- சீனாய் உடன்படிக்கைகளுக்குச் (பத்துக் கட்டளைகள்) சார்பாக இருப்பதன் மூலமாக இறைவனின் ஆசீ கிடைக்கின்றது.
- அதனை மீறுவதனால் தீமைகள் ஏற்படுகின்றன.
- திருவிவிலியத்தில் பெண்களின் பெயரால் உள்ள நூல்களில் இரண்டு.
- அன்றாட வாழ்க்கைச் சம்பவங்கள் ஊடாக இறைவனை கண்டுணரலாம். (ஆசிரியர் அவ்வாறு இறைவனைக் கண்டுணர்ந்த சந்தர்ப்பங்களை மாணவருக்கு கூறலாம்.)
- மாணவர்கள் இவ்வாறு இறைவனைக் கண்டுணர்ந்த சந்தர்ப்பங்களை கேட்டறியுங்கள்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- இணைப்பு 2 இல் காட்டப்பட்டுள்ள பிரிஸ்ட்டல் அட்டை ஒன்று
- இணைப்பு 2 இல் காட்டப்பட்டுள்ள 1∴3 அங்குள அளவிலான பழைய ஏற்பாட்டின் பெயர்கள் எழுதப்பட்ட தாள்கள் (நிறங்களுக்கேற்ப), பசை
- இணைப்பு 1, 2, 3

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடியவகையில் நியதிகளை தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

### இணைப்பு 1

### குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்

- உங்கள் குழுவுக்குத் தலைவர் ஒருவரை நியமியுங்கள். (முன்பு தலைவராக இருக்காத ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.)
- உங்கள் குழுவினர் பெற்ற ஆய்வுப் பத்திரத்தை, உங்கள் குழுவிலுள்ள அனைவருக்கும் கேட்கக்கூடிய வகையில், ஒருவர் உரத்து வாசியுங்கள்.
- அதிலுள்ள கருத்துக்களை குழு அங்கத்தவரோடு கலந்துரையாடுங்கள்.
- விளங்காத கருத்துக்களை விளங்கியவர்களிடம் கேட்டறியுங்கள்.
- நீங்கள் இச் செயற்பாட்டினூடாக கோவைப் படுத்திய விடயங்களை அடிப்படையாக் கொண்டு கீழ் காணப்படும் முன்வைப்புக்குத் தயாராகுங்கள். (கட்டுரை, பொது அறிவுப் போட்டி,

சுவரொட்டி, நாடகம், தாளலயப்பாட்டு, செருகல் அட்டை ஆகிய முறைகளைப் பயன்படுத்தலாம்.)

## இணைப்பு 2

- முன் ஆயத்தம்
  - நீல நிறத்தில் 1 x 3 அங்குளமுள்ள 5 தாள்களை வெட்டி, அவற்றில் வெவ்வேறாக (1)தொடக்க நூல், (2)விடுதலைப் பயணம், (3)லேவியர், (4)எண்ணிக்கை,(5)இணைச்சட்டம் என எழுதுங்கள்.
  - பச்சை நிறத்தில் 1 x 3 அங்குல 16 தாள்களை வெட்டி அவற்றில் வெவ்வேறாக (1) யோசுவா, (2) நீதித் தலைவர்கள், (3)ரூத்து, (4) 1 சாமுவெல், (5) 2 சாமுவெல், (6) 1 அரசர்கள், (7) 2 அரசர்கள், (8) 1 குறிப்பேடு (9) 2 குறிப்பேடு, (10)எஸ்ரா, (11) நெகேமியா, (12) தோபித்து, (13)யுதித்து, (14) எஸ்தர், (15) 1 மக்கபேயர்,(16) 2 மக்கபேயர் என எழுதுங்கள்.
  - றோஸ் நிறத்தில் 1 x 3 அங்குல 7 தாள்களை வெட்டி அவற்றில் வெவ்வேறாக (1) யோபு, (2) திருப்பாடல்கள், (3) நீதி மொழிகள், (4) சபை உரையாளர், (5) இனிமை மிகு பாடல், (6) சலமோனின் ஞானம் (7) சீராக்கின் ஞானம் என எழதுங்கள்.
  - மஞ்சள் நிறத்தில் 1 x 3 அங்குல 17 தாள்களை வெட்டி அவற்றில் வெவ்வேறாக (1) எசாயா, (2) எரேமியா, (3) புலம்பம், (4) பாருக்கு, (5) எசேக்கியல், (6) ஒசியா, (7) யோவெல், (8) ஆமோஸ், (9) ஒபதியா, (10) யோனா, (11) மீக்கா, (12) நாகூம், (13) அபக்கூக்கு, (14) செப்பனியா (15) ஆகாய், (16) செக்கரியா, (17) மலாக்கி என எழுதுங்கள்.
  - சிவப்பு நிறத்தில் 1 x 3 அங்குல தாள் ஒன்றை வெட்டி (1) தானியெல் என எழுதுங்கள்.
  - வெள்ளை நிற பிறிஸ்ரல் அட்டை ஒன்றில் கீழ்க்காணும் அட்டவணையை கீறிக் காட்டுங்கள்.




  - மேலேயுள்ள அட்டவணையில் 'சட்டநூல்கள் (5)' என்பதை "நீலநிறத்" தாளிலும், 'வரலாற்று நூல்கள் (16)' என்பதை "பச்சை நிறத்" தாளிலும், 'ஞான நூல்கள் (7)' என்பதை "றோஸ் நிறத்" தாளிலும், 'இறைவாக்கு நூல்கள் (17)' என்பதை "மஞ்சல் நிற" தாளிலும், 'திருவெளிப்பாடு' நூல் (1) என்பதை ''சிவப்பு நிறத்'' தாளிலும் ஒட்டுங்கள்.
- வகுப்பு ஆரம்பிக்கையில்
  - பிறிஸ்டல் அட்டையை வகுப்பறையில் பொருத்தமான இடத்தில் காட்சிப் படுத்துங்கள்.
  - (வகுப்பில் மாணவர்கள் ஐந்துக்கு மேல் இருப்பார்களாயின்) 5 மாணவர்களை முன்னே வரும் படி அழையுங்கள்.
  - ஒவ்வொரு மாணவருக்கும் ஒரு நிறத்தைத் தெரிவுசெய்து, நிறத்திற்கேற்ப ஒழுங்கு வரிசையில் மேலுள்ள அட்டவணையில் ஒன்றின் கீழ் ஒன்றாக ஓட்டும்படி அறிவுரை வழங்குங்கள்.
- வகுப்பின் இறுதியில்
  - சுவரொட்டியாகச் செய்த ஆக்கத்தை தொடர்ந்து காட்சிப்படுத்த ஒழுங்குச் செய்யுங்கள்.

## இணைப்பு 3

## ஆய்வுப் பத்திரம்

## திருவிவிலியத்தின் வரலாற்று நூல்கள்

திருவிலியம் வரலாற்றை உள்ளடக்கியுள்ளது. எனினும் அது தனியே வரலாற்றுச் சம்பவங்களை மட்டும் உள்ளடக்கியதல்ல. இறை நம்பிக்கையை வளர்ப்பதே அதன் நோக்கமாகும். ஆகவே அதில் நம்பிக்கையின் கண்ணோட்டத்தில் பார்க்கக் கூடிய வரலாறே உள்ளது. இஸ்ராயேல் மக்கள் பல் வேறு சம்பவங்கள் ஊடாக இறைவனைக் கண்டுணர்ந்த விதமே அதிலுள்ளது. எனவே திருவிலியத்தில் மீட்பின் வரலாறும், சமயவரலாறுமே உள்ளது.

திருவிவிலியத்தில் 16 வரலாற்று நூல்கள் உள்ளன. அவையாவெனில், யோசுவா, நீதித் தலைவர்கள், ரூத்தின் கதை, 1 சாமுவேல், 2 சாமுவேல், 1 அரசர்கள், 2 அரசர்கள், 1 குறிப்பேடு, 2 குறிப்பேடு, எஸ்ரா, நெகேமியா, தோபித்து, யுதித்து, எஸ்தர், 1 மக்கபேயர், 2 மக்கபேயர் ஆகியனவாகும். யோசுவா தொடக்கம் 2 அரசர்கள் வரையிலான நூல்களை வாசிக்கும் போது சீனாய் உடன்படிக்கைக்குச் சார்பாகச் செயற்படுமளவுக்கு, ஒரு தலைவனதும் அல்லது இஸ்ரயேல் மக்களினதும் வீழச்சி அல்லது எழுச்சி நடைபெறுகின்றது என்பதை அறியலாம். ஆகவே சீனாய் உடன்படிக்கைக்கு அதாவது பத்துக் கட்டளைகளுக்கு நாம் நம்பிக்கை உள்ளவர்களாய் இருக்கும் அளவுக்கு இறைவனுடைய ஆசீ எமக்கு உரித்தாகும்.

**வீட்டுச் சூழலில் :**

அன்றாட வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் திருவிவிலியத்தில் இருந்து பதிலைத்தேடிக்கொள்ளுங்கள்.

## பாடம் - 02

## புதிய ஏற்பாட்டு நூல்கள்

**தேர்ச்சி 1.0** : திருவிவிலியம் தொடர்பான விளக்கத்தைப் பெற்று அன்றாட வாழ்க்கையில் பலன் பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 10.1.2** : திருத்தூதர்களின் சபையின் பண்புகளைப் பின்பற்றுவர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள் :**

- புதிய ஏற்பாட்டு நூல்களை பிழையின்றி வகைப்படுத்துவர்.
- இறைவனுடைய நண்பராக வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வர்.
- திருத்தூதர் பணி நூல் பற்றிய முன் வைப்பு ஒன்றைச் செய்வர்.
- நற்செய்தியை ஏனையவர்க்கும் கொண்டு செல்வர்.
- குழுக்களுக்கிடையே அன்பாகச் செயற்படுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- இச் செயற்பாட்டிற்கு சில தினங்களுக்கு முன் இரு மாணவர்களுக்கு இணைப்பு 2 ஐ வழங்கி அதற்கான பயிற்சி பெறுமாறு அறிவுறுத்துங்கள். குறிக்கப்பட்ட தினத்துக்கு முன் ஒத்திகை ஒன்றை நடத்துங்கள். இணைப்பு 2 இற்கு இனங்க பாடத்தை ஆரம்பியுங்கள் கீழ்க காணப்படும் கருத்துக்களை வெளிக்கொணரும் வண்ணம் கலந்துரையாடலை நடாத்துங்கள்.

    - புதிய ஏற்பாட்டு நூல்களின் எண்ணிக்கை -27
    - 27 நூல்களையும் 3 பிரிவுகளாகப் பிரிக்கலாம்.
        - நற்செய்தி நூல்கள் நான்கோடு, திருத்தூதர் பணியும் - 5
        - 21 திருமுகங்கள்
            - பவுலின் 13 திருமுகங்கள் (உரோமையர், 1 கொந்தியர், 2 கொரிந்தியர், கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர், கொலோசையர், 1 தெசலோனிக்கர் , 2 தெசலோனிக்கர், 1 திமோத்தேயு, 2 திமோத்தேயு, தீத்து, பிலமோன்)
            - 08 பொது திருமுகங்கள் (எபிரேயர், யாக்கோபு, 1 பேதுரு, 2 பேதுரு, 1 யோவான், 2 யோவான், 3 யோவான், யூதா)
        - திருவெளிப்பாட்டு இலக்கியம் - திருவெளிப்பாட்டு நூல்

(15 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1, 3 ஆகியவற்றை பகிர்ந்தளியுங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(35 நிமிடங்கள்)

படி 3

- ஓவ்வொரு குழுவினருக்கும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன்வரும் குழுவிற்கு முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- மாணவர்கள் வெளிப்படுத்தும் அர்த்தமுள்ள கருத்துக்களை கரும்/வெண் பலகையில் குறித்துக் கொள்ளுங்கள்.
- அதே குழுவைச் சேர்ந்த ஏனையோரிடம் கருத்துக்களை வழங்க சந்தர்ப்பம் அளியுங்கள்.
- ஏனைய குழுவினரிடம் ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் (சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன் படுத்தியோ, பாடத்தொகுப்பினை விளக்குங்கள்.

  - திருத்தூதர் பணி நூல்
    - ஆசிரியர்
    - விழித்தல் / அர்ப்பணித்தல்
    - காலம்
    - இடம்
    - திருதூதர் பணி நூலின் கட்டமைப்பு- திருத்தூதர்களின் சபையின் பண்புகள்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திருவிவிலியம் (லூக்கா 1:1-4, திருத்தூதர் பணி 1:1-2,1:8, 2:42)
- டிமையின் தாள், பிளாற்றினம் பேனா
- இணைப்பு 1, 2, 3

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடியவகையில் நியதிகளை தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

**குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்**

- உங்கள் குழுவுக்குத் தலைவர் ஒருவரை நியமியுங்கள். (முன்பு தலைவராக இருக்காத ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.)
- உங்கள் குழுவினர் பெற்ற ஆய்வுப் பத்திரத்தை, உங்கள் குழுவிலுள்ள அனைவருக்கும் கேட்கக் கூடிய வகையில், ஒருவர் உரத்து வாசியுங்கள்.
- அதிலுள்ள கருத்துக்களை குழுவிலுள்ள அங்கத்தவரோடு கலந்துரையாடுங்கள்.
- விளங்காத கருத்துக்களை விளங்கியவர்களிடம் கேட்டறியுங்கள்.
- நீங்கள் இச் செயற்பாட்டினூடாக கோவைப் படுத்திய விடயங்களை அடிப்படையாக கொண்டு நீங்கள் பெற்ற $A_4$ தாளில் ஒரு பக்கத்தை பயன்படுத்தி தெளிவான அழகான கையெழுத்தில் கட்டுரை, கவிதை, தாளலயப் பாட்டு போன்ற ஆக்கமொன்றைத் தயாரியுங்கள்.
- உங்கள் ஆக்கத்தினை குழுவாக முன்வைக்க தயாராகுங்கள்.

## இணைப்பு 2

## உரையாடல்

புனித பவுல் : இறையாசீர் லூக்கா அவர்களே!

புனித லூக்கா : இறையாசீர் பவுல் அவர்களே! நாம் 2000 ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும் சந்திக்கின்றோம் அல்லவா?

புனித பவுல் : ஆம், ஆம் உங்களைச் சந்திப்பதில் எனக்கும் மிக்க மகிழ்ச்சி. அது சரி, நீங்கள் எங்கே செல்கின்றீர்கள்?

புனித லூக்கா : நான் இன்று ...............................(உமது பாடசாலையின் பெயரை எழுதவும்) இல் 10 ஆம் வகுப்பு மாணவர்களை பார்க்கப் போகின்றேன்.

புனித பவுல் : ஏன் திடீரென்று அந்தப் பக்கம் செல்ல நினைத்தீர்கள்?

புனித லூக்கா : அவ்வகுப்பிற்கு வருமாறு அம் மாணவர்கள் என்னை அழைத்துள்ளார்கள்.

புனித பவுல் : ஏன் இன்று அப்பாடசாலையில் ஏதும் விழாவா?

புனித லூக்கா : இல்லை, இல்லை அவ்வகுப்பு மாணவர்கள் இன்று எனது இரண்டாவது நூலாகிய ‘‘திருத்தூதர் பணி’’ நூல் பற்றிக் கற்கப் போகின்றார்களாம்.

புனித பவுல் : நீங்களும், புனித மத்தேயுவும், புனித மாற்குவும், புனித யோவானும் நற்செய்தி நான்கினை எழுதியமையால் அப்பிள்ளைகள், எங்கள் மீட்பரான இயேசு கிறிஸ்துவைப் பற்றி பல தகவல்களை அறிகின்றனர்.

புனித லூக்கா : அது மட்டுமல்ல உங்களுடைய 13திருமுகங்களும் அப்பிள்ளைகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது. கொஞ்சம் பொறுங்கள் எனக்கு அவற்றின் பெயர்களை மனப்பாடமாகக் கூற முடியுமா எனப் பார்ப்போம். உரோமர், 1 கொரிந்தியர், 2 கொரிந்தியர், கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர், கொலோசையர், 1 தெசலோனிக்கர், 2 தெசலோனிக்கர், 1 திமோத்தேயு, 2 திமேத்தேயு, தீத்து, பிலமோன்.

புனித பவுல் : சரியாகச் சொன்னீர்கள்! எனது 13 திருமுகங்களைத் தவிர வேறு 8 திருமுகங்களும் உண்டல்லவா? அவை எபிரேயர், யாக்கோபு, 1பேதுரு, 2 பேதுரு, 1 யோவான், 2 யோவான், 3 யோவான், யூதா

புனித லூக்கா : புனித யோவான் நற்செய்தியையும் 3 திருமுகங்களையும் தவிர மேலதிகமாக திருவெளிப்பாடு நூல்களையும் எழுதினாரல்லவா?

புனித பவுல் : புதிய ஏற்பாட்டு நூல்கள் 27 ஆகும். இந்நூல்களை நற்செய்தி விற்பன்னர்கள் 3 வகையாகப் பிரிக்கின்றனர். முதலாவது வகை நற்செய்தி நான்கும் திருத்தூதர்பணியும் ஆகும்.

புனித லூக்கா : 2 வது வகை திருமுகங்கள், 21 திருமுகங்கள் இருக்கின்றன.

புனித பவுல் : 3 வது வகை திருவெளிப்பாட்டு இலக்கியம்

## இணைப்பு 3
## திருத்தூதர் பணி நூல்

திருத்தூதர் பணி நூலின் எழுத்தாளர் புனித லூக்கா ஆவார். புனித லூக்கா நற்செய்தியை எழுதியவரும் அவரே ஆவார். இதனை லூக்கா நற்செய்தியின் இரண்டாவது வகையாகவும் கூறலாம். இவர் வரலாற்று ஆய்வாளரும், ஓவியரும், வைத்தியருமாவார். இவர் புனித பவுலோடு 2வது, 3வது தூதுரை பயணங்களில் கலந்து கொண்டுள்ளார்.

புனித லூக்கா தனது நற்செய்தியையும் திருத்தூதர் பணியையும் மாண்புமிகு தியோப்பிலுக்கு அர்ப்பணித்துள்ளார். (திருவிவிலியம் லூக். 1:1-4 திப, 1:1-2 ஐ வாசியுங்கள்) தியோப்பிலு என்பது இறைவனின் நண்பரென்ற அர்த்தமாகிறது. நாமும் இறைவனின் நண்பர்களாகி அந்நற்செய்தியை எமது வாழ்க்கையில் செயற்படுத்துவதற்கு எம் ஒவ்வொருவரையும் புனித லூக்கா அழைக்கிறார். லூக்கா நற்செய்தியில் தியோபிலு என்றவரை விழிக்கும் போது "மாண்புமிகு" எனப் பயன்படுத்துகிறார். ஆகையால் அவர் உயர்நிலையில் உள்ள ஒருவராவார் எனலாம்.

புனித லூக்கா திருத்தூதர் பணி நூலை கி.பி. 80-90களுக்கு இடையில் எழுதியுள்ளார். அது கிரேக்கத்திலுள்ள அக்காயா என்னும் இடத்தில் நூல்வடிவம் பெற்றுள்ளது எனலாம்.

தூய ஆவியால் நிரப்பப்பட்ட திருத்தூதர்கள் இயேசு கிறிஸ்துவின் இறுதிக் கட்டளையினால் கட்டுண்டு (திப 1:8 வாசியுங்கள்) நற்செய்தியை உலகெங்கும் கொண்டு சென்றதோடு மறைத்தூதுப்பணியில் ஈடுபட்ட விதமும் இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதற்கேற்ப எருசலேமிலும் யூதேயாவிலும் நற்செய்தியைப் போதிக்கத் தொடங்கியதோடு சமாரியாவில் பிற இனத்தவரிடமும் இறுதியாக உலகின் கடைசி எல்லை வரை நற்செய்தியை போதித்ததும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளது.

திருத்தூதர் பணி நூலின் அமைப்பு இவ்வாறுள்ளது.

1 மறை தூதுப் பணிக்கான ஆயத்தம் (திப 1)

2. எருசலேமில் சான்று பகர்தல் (திப 2.7)

3. யூதேயாவிலும் சமாரியாவிலும் சான்று பகர்தல் ( திப 8.12)

4. பவுலின் மறைதூதுப் பணி (திப 13-28)

**வீட்டுச் சூழலில் :**

வீட்டில் தினமும் செபிக்கையில் திருத்தூதர் பணி நூலிலிருந்து ஒரு பகுதியை வாசியுங்கள்.

## பாடம் - 03

## திருமுகங்கள்

**தேர்ச்சி 1.0** : திருவிவிலியம் தொடர்பான விளக்கத்தைப் பெற்று அன்றாட வாழ்க்கையில் பலன் பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 10.1.3**: ஏனையோருக்கு நற்செய்தியைக் கொண்டு செல்ல தனது எழுதும் திறனைப் பயன்படுத்துவர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- புதிய ஏற்பாட்டிலுள்ள திருமுகங்களை வகைப்படுத்துவர்.
- புனித பவுலின் எழுத்தார்வப் பங்களிப்பை பாராட்டுவர்.
- திருமுகங்கள் பற்றிய ஆக்கமொன்றை முன்வைப்பார்.
- தமது எழுத்தாற்றலை பயன்படுத்தி ஏனையோருக்கு நற்செய்தியைக் கொண்டு செல்வர்.
- குழுப் பங்களிப்போடு செயற்பாடுகளில் ஈடுபடுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- இணைப்பு 2 இல் உள்ள கடிதத்தை கடிதமெழுதும் தாளில் எழுதி கடித உறைக்குள் இட்டு, வகுப்புக்குள் கொண்டு செல்லுங்கள். வகுப்பை ஆரம்பிக்கும்போது மாணவர்களிடம் கடிதமொன்று வந்திருக்கிறதெனக் கூறுங்கள். வகுப்பிலுள்ள ஒரு மாணவனை அழைத்து கடித உறையை கொடுங்கள் அதிலுள்ள கடிதத்தை வெளியே எடுத்து வாசிக்கும்படி மாணவனுக்கு கூறுங்கள். (தேவைப்படின் வேறு ஒரு மாணவனுக்கு கடிதத்தை வாசிக்கும்படி கூறுங்கள்) இத்தோடு கீழ்க் காணப்படும் கருத்துக்களை வெளிக்கொணரக் கூடியதாக கலந்துரையாடலை நடத்துங்கள்.
    - புனித பவுல் (திருமுகங்கள்) கடிதம் எழுதிய நோக்கம்
    - பணி அதிகரித்தமையால் கிறிஸ்தவ சபைகளை தரிசிப்பதற்கு செல்ல முடியாது போனமை
    - சிறைப்பட்டிருந்தமையால் கிறிஸ்தவ சபைகளை தரிசிக்க செல்ல இயலாமை
    - புனித பவுலின் திருமுகங்களின் எண்ணிக்கை
    - 13 திருமுகங்களினதும் பெயர்கள்

(15 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1, 3 ஆகியவற்றை பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(35 நிமிடங்கள்)

படி 3

- ஓவ்வொரு குழுவினருக்கும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன்வரும் குழுவிற்கு முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் பயன் படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.

  - திருமுகங்கள் இரண்டு வகைப்படும்.

    1. புனித பவுலின் திருமுகங்கள்

    2. பொது திருமுகங்கள்

  - புனித பவுலின் திருமுகங்கள் 13 ஆகும்.

  - அவற்றை 3 பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

    1. புனித பவுல் எழுதிய திருமுகங்கள் - 7

       (1தெசலோனிக்கர், பிலிப்பியர், 1கொரிந்தியர், 2 கொரிந்தியர், கலாத்தியர், உரோமையர், பிலமோன்)

    2. புனித பவுலின் இணைத்திருமுகங்கள் - 2

       (கொலோசையர், எபேசியர்)

    3. புனித பவுலின் எழுத்தமைவைக் கொண்ட திருமுகங்கள் -4

       (2 தெசலோனிக்கர், தீத்து, 1 திமொத்தேயு, 2திமோத்தேயு)

  - வேறு திருமுகங்கள் 8

    எபிரேயர், யாக்கோபு, 1 பேதுரு, 2 பேதுரு, 1 யோவான், 2 யோவான், 3 யோவான், யூதா.

  - தமது எழுத்தாற்றலை திருமுகங்களின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்த வேண்டும்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திருவிவிலியம்
- பிரிஸ்ட்டல் அட்டை, டிமைன் தாள், மாக்கர் பேனா
- இணைப்பு 1, 2, 3

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடியவகையில் நியதிகளை தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

## இணைப்பு 1

### குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்

- உங்கள் குழுவுக்குத் தலைவர் ஒருவரை நியமியுங்கள். (முன்பு தலைவராக இருக்காத ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.)
- உங்கள் குழுவினர் பெற்ற ஆய்வுப் பத்திரத்தை, உங்கள் குழுவிலுள்ள அனைவருக்கும் கேட்கக் கூடிய வகையில், ஒருவர் உரத்து வாசியுங்கள்.
- அதிலுள்ள கருத்துக்களை குழுவிலுள்ள அங்கத்தவரோடு கலந்துரையாடுங்கள்.
- விளங்காத கருத்துக்களை விளங்கியவர்களிடம் கேட்டறியுங்கள்.
- நீங்கள் இச் செயற்பாட்டினூடாக கோவைப் படுத்திய விடயங்களை அடிப்படையாக கொண்டு "திருமுகங்கள்" பற்றிய முன்வைப்பு ஒன்றிற்கு தாயாராகுங்கள். (முன் வைப்பிற்காக, குழு கலந்துரையாடல், நாடகம், தாளலயப் பாட்டு, சுவரொட்டி ஆகிய முறைகளைப் பயன்படுத்தலாம்)

## இணைப்பு 2

புனித பவுல் அடிகள் இயேசுவின் பொறுப்பில் நிலை வாழ்வு.. (சென்ற வாரத்தின் திகதி)

இறையாசீர் அன்பின் மாணவ மாணவியரே,

எனக்கு உங்களைத் தனிப்பட்ட முறையில் சந்திப்பதற்கு வருகை தர முடியாமைக்காக நான் மிகவும் வேதனைப்படுகிறேன். எனினும் உங்களைப்போன்ற பிள்ளைகள் திருச்சபையில் இருப்பதையிட்டு நான் மிகவும் பெருமைப்படுகிறேன். நான் உங்களுக்கு இக்கடிதத்தை எழுதுவதற்குக் காரணம் உங்கள் நம்பிக்கையை வலிமைபெறச் செய்து உங்களைத் தைரியப்படுத்தவே ஆகும்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் நான் பல்வேறு இடங்களுக்குச் சென்று போதித்தேன். கிறிஸ்தவ சபைகளை நிறுவினேன். மேலும் வெவ்வேறு இடங்களுக்குச் சென்று இன்றைய காலத்தை போன்று போதிப்பதற்கு அன்று போக்குவரத்து வசதிகள் இருக்கவில்லை. ஆகவே என்னால் முன்னொரு நாள் நிறுவிய சபைக்கு ஏதாவது ஒரு செய்தியை சொல்வதற்கு நேர்ந்த போது மீண்டும் அவ்விடத்துக்கு உடனேயே செல்ல முடியாமலிருந்தது. ஏனெனில் நான் சிறைப்பட்டு இருந்ததும் எனது பணிப் பளு அதிகரித்தமையும் காரணமாகும். எனவே, நான் உங்களுக்கு இவ்வாறு எழுதியனுப்பும் வாக்கை போன்றே நான் நிறுவியிருந்த சபைகளுக்கும் கடிதம் எழுதி எனது செய்தியை அவர்களுக்கு அறிவித்தேன். புதிய ஏற்பாட்டில் இருக்கும் என கடிதங்கள் இவ்விதமாகவே எழுதப்பட்டன. இக்கடிதங்களை வாசித்து திருத்தூதர் காலத்தில் கிறிஸ்தவ சபைகளின் தேவைகளை இனங்காண்பதற்கு நான் உங்களை அழைக்கிறேன்.

இவ்வண்ணம்,

உங்களுக்கான தினமும் இறைவனிடம் மன்றாடும்

புனித பவுல் அடிகள்.

## இணைப்பு 3

### குழு ஆய்விற்கான அறிவுறுத்தல்

புதிய ஏற்பாட்டிலுள்ள 27 நூல்களில் 21 நூல்கள் திருமுகங்களேயாகும். இத்திருமுகங்கள் 21 இல் 13 இன் ஆசிரியத்துவம் புனித பவுலுக்கே உரியதாகும். இப் 13 திருமுகங்களின் ஆசிரியத்துவம் புனித பவுலுக்கு உரித்தானவை. எனினும் அவை புனித பவுலினாலேயே எழுதப்பட்டவையென்பது கருத்தல்ல. எனினும் இந்த எல்லாத் திருமுகங்களும் ஏதோவொரு வகையில் புனித பவுலோடு தொடர்புடையனவாகும். அத்தொடர்பினைக் கவனத்தில் கொண்டு இவற்றை கீழ்க்காணப்படும் விதத்தில் வகைப்படுத்தலாம்.

1. புனித பவுலால் எழுதப்பட்ட திருமுகங்கள் ஏழு அவையாவன,
   1. உரோமையர்
   2. 1 கொரிந்தியர்
   3. 2 கொரிந்தியர்
   4. கலாத்தியர்
   5. பிலிப்பியர்
   6. 1 தெசலோனிக்கர்
   7. பிலமோன் என்பனவாகும்

2. புனித பவுலின் இணைத் திருமுகங்கள்
   எபேசியர், கொலோசையர் ஆகிய இரு திருமுகங்களும் இப்பிரிவைச்சாரும்.

3. புனித பவுலின் எழுத்தமைவைக் கொண்ட திருமுகங்கள்

   இவ்வகையைச் சேர்ந்த திருமுகங்கள் நான்காகும். அவையாவன:
   1. 2 தெசலோனிக்கர்
   2. 1 திமோத்தேயு
   3. 2 திமோத்தேயு
   4. தீத்து என்பன

புனித பவுலின் திருமுகங்களைத் தவிர 8 பொதுத் திருமுகங்கள் புதிய ஏற்பாட்டில் உள்ளன. அவையாவன:

1. எபிரேயர்
2. யாக்கோபு
3. 1 பேதுரு
4. 2 பேதுரு
5. 1 யோவான்
6. 2 யோவான்
7. 3 யோவான்
8. யூதா என்பன

இவை கத்தோலிக்கத் திருமுகங்கள், உலக திருமுகங்கள், பொது திருமுகங்கள் எனும் பெயர்களிலும் அழைக்கப்படுகின்றன.

**வீட்டுச் சூழலில் :**

புனித பவுலின் திருமுகங்களை வாசியுங்கள்.

## பாடம் - 04

# திருவெளிப்பாட்டு இலக்கியம்

**தேர்ச்சி 1.0** : திருவிவிலியம் தொடர்பான விளக்கத்தைப் பெற்று அன்றாட வாழ்க்கையில் பலன் பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 10.1.4** : கிறிஸ்தவ அடையாளங்களின் மகிமையை மதிப்பர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- திருவெளிப்பாட்டு இலக்கியம் பற்றிய தகவல்களைக் கோவைப்படுத்துவர்.
- தொடர்பாடலின் போது அடையாளங்களின் முக்கியத்துவத்தை பாராட்டுவர்.
- கோவைப்படுத்திய கருத்துக்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.
- சமய அடையாளங்களை மரியாதையோடு பயன்படுத்துவர்.
- குழுக்களின் பங்களிப்போடு செயற்பாடுகளில் ஈடுபடுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- பல்வேறு வகைகளின் அடையாளங்கள் சில (சிலுவை, வரவணிக்கம், ஆலவட்டம், போக்குவரத்து, சமிக்ஞை, தேர்தல் அடையாளம் என்பன) வற்றை மாணவர்களுக்குக் காட்டி அவற்றின் கருத்து, செய்தி என்பனவற்றைக் கேட்டறியுங்கள். இதனைத்தவிர கீழ்க் காணப்படும் கருத்துகள் வெளிக்கொணரும் வண்ணம் கலந்துரையாடுங்கள்.

  - எல்லாஅடையாளங்களுக்கும் சின்னங்களுக்கும் ஏதோ ஒரு கருத்துள்ளது.
  - அடையாளத்தின் கருத்து தெரியாவிடில் அதன் செய்தியும் விளங்காதெனலாம்.
  - அடையாளமொன்றின் செய்தி தெரியாதிருப்பின் அதற்கு மரியாதையும் செலுத்த முடியாது. (உதாரணம் போக்குவரத்து சமிக்ஞை).
  - தொடர்பாடலின் போது அடையாளங்கள் முக்கியத்தும் பெறுகின்றன.
  - கிறிஸ்தவ சமய அடையாளங்கள் கிறிஸ்தவர்களாகிய எமக்கு முக்கியமாகும். அவற்றைக் கையாள வேண்டிய விதம்.

(15 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1, 2 ஆகியவற்றை பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(30 நிமிடங்கள்)

படி 3

- ஒவ்வொரு குழுவினருக்கும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன் வரும் குழுவிற்கு முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப்(சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன் படுத்தியோ, பாடத்தொகுப்பினை விளக்குங்கள்.
  - திருவெளிப்பாட்டு இலக்கியம்
  - திருவெளிப்பாட்டு இலக்கியத்தின் பண்புகள்
    1. இரட்டைக் கோட்பாடு
    2. மறு உலக வாழ்வுக் கொள்கை
    3. அடையாளங்களின் பயன்பாடு
    4. காட்சி ஊடாக செய்தியை முன்வைத்தல்

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திருவிவிலியம் (தி.வெ **6:2, 6:4-5, 6:8**)
- பல்வேறு வகைகளின் அடையாளங்கள் (சிலுவை, வரவணிக்கம், ஆலவட்டம், போக்குவரத்து சமிக்ஞை, தேர்தல் அடையாளங்கள் என்பன)
- பிரிஸ்ட்டல் அட்டை, டிமைன் தாள், பிளாற்றினம் பேனா
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளை தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

**குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்**

- உங்கள் குழுவுக்குத் தலைவர் ஒருவரை நியமியுங்கள். (முன்பு தலைவராக இருக்காத ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.)
- உங்கள் குழுவினர் பெற்ற ஆய்வுப் பத்திரத்தை, உங்கள் குழுவிலுள்ள அனைவருக்கும் கேட்கக் கூடிய வகையில், ஒருவர் உரத்து வாசியுங்கள்.
- அதிலுள்ள கருத்துக்களை குழுவிலுள்ள அங்கத்தவரோடு கலந்துரையாடுங்கள்.
- விளங்காத கருத்துக்களை விளங்கியவர்களிடம் கேட்டறியுங்கள்.
- நீங்கள் இச் செயற்பாட்டினூடாக கோவைப் படுத்திய விடயங்களை அடிப்படையாகக் கொண்டுஇறைவனின் ஒவ்வொரு நாள் படைப்பையும் ஆக்கப்பூர்வமாக முன்வைக்க தாயாராகுங்கள். (முன் வைப்பிற்காக, உரையாடல், நாடகம், தாளலயப் பாட்டு, சுவரொட்டி ஆகிய முறைகளைப் பயன் படுத்தலாம்)

## இணைப்பு 2

## ஆய்வுப் பத்திரம்

## திருவிவிலியத்தில் திருவெளிப்பாட்டு இலக்கியம்

திருவிவிலியத்தில் இரண்டு நூல்கள் திருவெளிப்பாட்டு இலக்கியத்துள் எழுதப்பட்டுள்ளன. அவை பழைய ஏற்பாட்டில் தானியேல் நூலும் புதிய ஏற்பாட்டில் திருவெளிப்பாட்டு நூலுமாகும். பழைய ஏற்பாட்டில் திருவெளிப்பாட்டு இலக்கியம் இறைவாக்கினர்கள் இஸ்ரயேல் நாட்டில் இல்லாமலிருந்த காலத்தில் தோன்றியதாகும். இறைவாக்கினர்களால் ஏற்பட்ட வெற்றிடம் திருவெளிப்பாட்டு இலக்கியத்தை முழுமையடையச் செய்தது. மேலும் விசுவாசத்திற்காக பல்வேறு துன்பங்களுக்கு உள்ளாக்கப்பட்ட விசுவாசிகளை தைரியப்படுத்துவது அதன் நோக்கமாகும். தானியேல் நூலும் திருவெளிப்பாட்டு நூலும் வெவ்வேறு துன்புறுத்தல்களின் காலங்களில் எழுதப்பட்டுள்ளன.

இவ்விலக்கியத்தின் பண்புகள் சிலவற்றை இனங்காணலாம்.

1. இரட்டைக் கோட்பாடு
   இரட்டைக் கோட்பாடு என்பது நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான மோதலாகும். நல்லவர்களுக்கும் தீயவர்களுக்கும் இடையிலான மோதலாகும்.

2. மறு உலக வாழ்வுக்கொள்கை
   துன்பங்கள் மத்தியிலும் இறைவனில் விசுவாசத்துடன் செயலாற்றுகின்றவர்களுக்கு மீட்பு உரித்தாகும்.

3. அடையாளங்களின் பயன்பாடு
   தீயவர்களின் கைகளில் இந்நூல் கிடைத்தால் அவற்றை வாசித்து விளங்கிக் கொள்வதை தவிர்ப்பதற்காக அடையாளங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனவே இந்நூலை விசுவாசிகளுக்கு எதிரானவர்கள் வாசித்தால் அது அவர்களுக்கு விளங்காது. நல்லவர்களுக்கும் இந் நூலாசிரியருக்கும் தீயவர்களால் தொல்லைகள் வருவதை தடுப்பது அதன் நோக்கமாகும். இவ்வாறான அடையாளங்கள் சிலவும் அவற்றின் கருத்துக்களும் பின்வருமாறு,

| | | | |
|---|---|---|---|
| ஆடு | - | இயேசுவாகும் | (தி.வெ. 4) |
| விலங்கு | - | தீயோன் | (தி.வெ. 13) |
| வெள்ளை | - | வெற்றி | (தி.வெ. 6-2) |
| சிவப்பு | - | யுத்தம் | (தி.வெ. 6-4) |
| கறுப்பு | - | பஞ்சம் | (தி.வெ. 6-5) |
| வெளிறிப்போன நிறம் | - | மரணம் | (தி.வெ. 6-8) |

   4 -விசுவாசம்
   7 -நிறைவு
   10 -முழு நிறைவு
   12 -இஸ்ரயேல்

4. புனைப்பெயரினால் முன்வைத்தல்
   இதன் நோக்கமானது எழுத்தாளரின் பாதுகாப்பும், நூலின் வரவேற்பை அதிகரிப்பதும் ஆகும். உதாரணமாக தானியேல் நூலும் திருவெளிப்பாட்டு நூலும் புனைப்பெயர்களால் எழுதப்பட்டிருக்கலாம்.

**வீட்டுச் சூழலில் :**

குடும்பத்தில் அனைவரும் ஆசீர்வதிக்கப்பட்ட சிலுவை ஒன்றை அல்லது வரவணிக்கம் ஒன்றை அணியுங்கள்.

## பாடம் - 05

## ஞான இலக்கியம்

**தேர்ச்சி 1.0** : திருவிவிலியம் தொடர்பான விளக்கத்தைப் பெற்று அன்றாட வாழ்க்கையில் பலன் பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 10.1.5** : ஞானம் நீதியும் நிறைந்தவர்களாய் வாழ்வர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள் :**

**(கீழ் காணும் கற்றல் பேறுகளின் வழியாகத் தயாராகுங்கள்.)**

- எபிரேய ஞானத்தைப் பற்றி தகவல்களைக் கோவைப்படுத்துவர்.
- நன்மையானவற்றை தெரிவு செய்வதில் ஞானமுள்ளவர்களாக செயலாற்ற வேண்டுமென விவாதிப்பர்.
- கோவையைப் பயன்படுத்தி தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.
- ஞானமுள்ளவர்களாக செயற்படுவர்.
- ஞானமுள்ளவர்களாக குழுவினரின் பங்களிப்போடு செயற்பாடுகளில் ஈடுபடுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- 1 அரசர்கள் 3: 4 -14 இல் உள்ள சம்பவங்களைக் கதையாக முன்வைத்து கீழ்க்காணப்படும் கலந்துரையாடலை நடத்துங்கள்.
    - சாலமோன் அரசன் இறைவனிடம் ஞானத்தை கேட்டது.
    - ஞானம் என்பது
    - ஞானம் இறைவனிடமிருந்து கிடைக்கும் ஒரு கொடை

(15 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1 ஐப் பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(30 நிமிடங்கள்)

படி 3

- ஒவ்வொரு குழுவினருக்கும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன்வரும் குழுவிற்கு முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப்(சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன் படுத்தியோ, பாடத்தொகுப்பினை விளக்குங்கள்.
    - ஞான இலக்கியம் என்றால் என்ன?
    - ஞானத்தின் பிரிவுகள்
    - ஞானம் முன்வைக்கப்பட்டுள்ள முறை
    - இலக்கிய வடிவம்
    - ஞான இலக்கியத்தின் நோக்கமும் ஆன்மீகமும்
    - அன்றாட வாழ்க்கையில் நன்மையை மட்டும் தெரிவு செய்து செயலாற்ற வேண்டியது அவசியமாகும்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திருவிவிலியம் (1 அரசர்கள் 3/4 - 14)
- பிரிஸ்ட்டல் அட்டை, டிமைன் தாள், பிளாற்றினம் பேனா
- இணைப்பு 1, 2, 3

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

### இணைப்பு 1

### குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்

- உங்கள் குழுவுக்குத் தலைவர் ஒருவரை நியமியுங்கள். (முன்பு தலைவராக இருக்காத ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.)
- உங்கள் குழுவினர் பெற்ற ஆய்வுப் பத்திரத்தை, உங்கள் குழுவிலுள்ள அனைவருக்கும் கேட்கக் கூடிய வகையில், ஒருவர் உரத்து வாசியுங்கள்.
- அதிலுள்ள கருத்துக்களை குழுவிலுள்ள அங்கத்தவரோடு கலந்துரையாடுங்கள்.
- விளங்காத கருத்துக்களை விளங்கியவர்களிடம் கேட்டறியுங்கள்.
- நீங்கள் இச் செயற்பாட்டினூடாக கோவைப் படுத்திய விடயங்களை அடிப்படையாக் கொண்டு இறைவனின் ஒவ்வொரு நாள் படைப்பையும் ஆக்கப்பூர்வமாக முன்வைக்க தாயாராகுங்கள். (முன் வைப்பிற்காக, உரையாடல், நாடகம், தாளலயப் பாட்டு, சுவரொட்டி ஆகிய முறைகளைப் பயன் படுத்தலாம்)

## இணைப்பு 2

## ஆய்வுப் பத்திரம்

## ஞான இலக்கியம்

எபிரேய ஞானமானது வாழ்க்கையை வெற்றிகரமாகவும் தார்மீகமாகவும் நடத்துவதற்கு மக்களைத் தூண்டுவதே அதன் நோக்கமாகும். அத்தோடு சமூக நிர்வாகத்தை போன்று வாழ்க்கையின் பொருளையும் எல்லைகளையும் விளக்கிக் கூறுகிறது. இறைவனுக்கு மிகவும் விருப்பமுள்ள வாழ்க்கை நடத்துவதற்கு இக்கருத்துக்கள் உதவுகின்றன.

எபிரேய ஞானத்தின் சில கூறுகள்.

1. குடும்ப மற்றும் கோத்திர ஞானம்
   குடும்ப மற்றும் கோத்திர பாதுகாப்புக்கான சம்பிரதாயங்களும் சட்ட திட்டங்களும் இதற்குரியதாகும். (சீராக்கு 3)

2. அரசவை ஞானம்
   அரச நிர்வாகம் மற்றும் ஏனைய நிர்வாகம் கோத்திரங்களை இலக்கு வைத்து இளைஞர்களை பயிற்றுவித்தல் அதன் நோக்கமாகும். (சீராக்கு 6: 1-11)

3. வாழ்வுக்கு வழிகாட்டும் ஞானம்
   வாழ்க்கையின் உட்பொருள் அங்குள்ள பிரச்சினைகள் பிரபஞ்சம் பற்றிய எண்ணக்கருவின் துணையோடு செய்யும் பகுப்பாய்வாகும். (யோபுவின் கதை)

4. மக்கள் ஞானம்
   ஒருவர் அன்றாட வாழ்விலே சந்திக்கும் நிகழ்வுகள் பற்றிய அறிவுரை இதிலடங்கும். (நீதிமொழிகள் அதிகாரங்கள் 6-25)

ஞான இலக்கியத்தில் 7 நூல்கள் உள்ளன. அவையாவன: யோபு, திருப்பாடல்கள், நீதிமொழிகள், இனிமைமிகு பாடல், சீராக்கின் ஞானம், சபை உரையாளர், சாலமோனின் ஞானம் என்பனவாகும்.

பழைய ஏற்பாட்டில் ஞானத்தை முன்வைக்கையில் பல்வேறுபட்ட தன்மைகள் காணக்கூடியதாக உள்ளன.

**வீட்டுச் சூழலில் :**

அன்றாட செபத்தில் ஞானத்தைக் கேட்டு இறைவனிடம் ஒரே குடும்பமாக செபியுங்கள்.

# பாடம் - 06

## பாஸ்கா மறைபொருள்

**தேர்ச்சி 2.0** : இறைவெளிப்பாட்டுக்குப் பதிலளித்து நம்பிக்கையோடு வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 10.2.1** : அன்றாட வாழ்க்கையில் பாஸ்கா மறைபொருளை அனுபவமாக்கி புதிய வானம் புதிய பூமியை உருவாக்க செயற்படுவர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- பாஸ்கா பற்றிய தகவல்களைக் திரட்டுவர்.
- கிறிஸ்துவைப் போல் நாமும் உயிர்ப்போம் என்பதை ஏற்றுக் கொள்வர்.
- எம்மாவுஸ் பயணம் தொடர்பான தகவல்களைத திரட்டி ஆக்க பூர்வமான செயற்பாடொன்றை முன்வைப்பர்.
- அன்றாட வாழ்வில் பாஸ்கா மறைபொருளில் பங்குதாரராவர்.
- பிறர் துன்பங்களில் பங்கெடுப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- இணைப்பு 2 இன்படி அன்றாட வாழ்க்கையில் மக்கள் அனுபவிக்கும் பல்வேறு அவலங்கள் தொடர்பான பத்திரிகைப் துண்டுகளை மாணவர் ஒருவரிடம் கொடுத்து உரத்து வாசிக்கச் செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்கள் வெளிப்படும் வகையில் அவை தொடர்பாக கலந்துரையாடுங்கள்.
    - இவ்வாறான அனுபவங்கள் தினமும் இடம் பெறுவதைக் காண்கிறோம்.
    - இன்றைய உலகில் தீமைகளும் சமூக அநீதிகளும் மலிந்து காணப்படுகின்றன.
    - இத்தகைய ஒரு சம்பவம் 2000 ஆண்டுகளுக்கு முன் இவ்வுலகில் நிகழ்ந்தது.
    - இறைமகன் இயேசு அனுபவித்த பாடுகள் மரணமே அவை.

(10 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1,.3 ஆகியவற்றையும், தர உள்ளீட்டில் குறிப்பிடப்பட்ட பொருட்களையும் பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன்படுத்தலாம்.

(40 நிமிடங்கள்)

படி 3

- ஒவ்வொரு குழுவினருக்கும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன்வரும் குழுவிற்கு முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- மாணவர்கள் வெளிப்படுத்தும் நல்ல கருத்துக்களை கரும்/வெண் பலகையில் குறித்துக் கொள்ளுங்கள்.
- அதே குழுவைச் சேர்ந்த ஏனையோருக்கு கருத்துக்களை வழங்க சந்தர்ப்பம் அளியுங்கள்.
- ஏனைய குழுவினரிடம் ஆக்கபூர்வமாக கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் (சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன்படுத்தியோ, பாடத்தொகுப்பினை விளக்குங்கள்.
  - இயேசுவின் பாடுகள் (லூக்கா 22: 54-23: 25)
  - இயேசுவின் மரணம் (லூக்கா23: 26-56)
  - இயேசுவின் உயிர்ப்பு (யோவான் 20: 1-18)
  - உயிர்த்தபின் சீடர்களுக்கு காட்சி கொடுத்தல் (யோவான் 20: 19-29)
  - எம்மாவுஸ் பயணம் (லூக்கா 24: 13-35)
  - கத்தோலிக்க திரு மறை 571-573, 595-597, 624-628, 631-635
  - புதிய வானமும் புதிய பூமியும் (தொடக்க நூல் 1: 1, திருவெளிபாடு 21: 1, 22: 1-13, க.தி.ம.1042-1050)
  - இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்பன பாஸ்கா மறைபொருளாகும்.
  - விண்ணக வாயிலைத் திறந்து அந்த வாழ்வை எமக்கு வழங்கவே இயேசு திருப்பாடுகளை ஏற்றுக் கொண்டார்.
  - திருப்பலி அருளடையாளங்கள் வழியாக நம் கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருளில் பங்கு பெறுகிறோம்.
  - பாவச் செயல்களைத் தவிர்த்து இறையாட்சி விழுமியங்களைக் கடைப்பிடித்து வாழ்வோமாகின் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு தயாராவோம்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திருவிவிலியம் / புதிய ஏற்பாடு (லூக்கா 22: 54-23:25, யோவான் 20: 1-18, 19-29, லூக்கா 24: 13-35, தொடக்க நூல் 1:1, திருவெளிபாடு 21: 1, 22: 1-13)
- கத்தோலிக்க திரு மறை 571-573, 595-597, 624-628, 631-635, 1042-1050
- பத்திரிகைப் துண்டுகள் (அன்றாட வாழ்வில் எதிர் கொள்ளும் வாழ்க்கைச் சவால்கள்)
- பிரிஸ்ட்டல் அட்டை, டிமைன் தாள், பிளாற்றினம் பேனா
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

## இணைப்பு 1

### குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்

- உங்கள் குழுவுக்குத் தலைவர் ஒருவரை நியமியுங்கள். (முன்பு தலைவராக இருக்காத ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.)
- உங்கள் குழுவினர் பெற்ற ஆய்வுப் பத்திரத்தை, உங்கள் குழுவிலுள்ள அனைவருக்கும் கேட்கக் கூடிய வகையில், ஒருவர் உரத்து வாசியுங்கள்.
- அதிலுள்ள கருத்துக்களை குழுவிலுள்ள அங்கத்தவரோடு கலந்துரையாடுங்கள்.
- விளங்காத கருத்துக்களை விளங்கியவர்களிடம் கேட்டறியுங்கள்.
- தொகுத்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு உங்கள் குழுவிற்குரிய செயற்பாட்டை ஆக்கப்பூர்வமாக வைக்க தாயாராகுங்கள்.

    - குழு 01 -
        - லூக்கா 22:54-23:25 வரை வாசித்து இயேசுவின் பாடுகள் பற்றி உரை ஒன்றை நிகழ்த்துங்கள்.
    - குழு 02 -
        - லூக்கா 23:26-56 பகுதியை வாசித்து இயேசுவின் மரணம் தொடர்பான தகவல்களை அறிக்கைப்படுத்துங்கள்.
    - குழு 03 -
        - யோவான் 20.:.1-18 பகுதியை வாசித்து இயேசுவின் உயிர்ப்பு தொடர்பான தகவல்களை விளக்கமாக முன்வையுங்கள்.
    - குழு 04 -
        - யோவான் 20:19-29 பகுதியின் படி இயேசு சீடர்களுக்கு காட்சி கொடுத்த சம்பவங்களை நடித்துக் காட்டுங்கள்.
    - குழு 05 -
        - லூக்கா 24:13-35 பகுதியின் படி எம்மாவுஸ் நிகழ்ச்சியை நடித்துக் காட்டுங்கள்.

**வீட்டுச் சூழலில் :**

தபக்கால பக்தி முயற்சிகளில் குடும்பமாக ஒன்றித்து தவறாது பங்குபற்றுவர்.

## பாடம் - 07

## தொடக்க கிறிஸ்தவ சமூகம்

**தேர்ச்சி 2.0** : இறைவெளிப்பாட்டுக்கு பதிலளித்து நம்பிக்கையோடு வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 10.2.2** : தூய ஆவியினால் நிரப்பப்பட்டு கிறிஸ்தவ வாழ்வுக்குச் சான்று பகர்வர்.

**பாடவேளை** : 03

**கற்றல் பேறுகள்** :

- தொடக்க கிறிஸ்தவர்களின் பண்புகளை விளக்கமாக எழுதுவர்.
- தூய ஆவியானவர் எம்மை சரியான பாதையில் வழி நடத்துவார் என்பதை ஏற்றுக் கொள்வர்.
- "உயிர்த்த கிறிஸ்துவுக்கு சான்று பகர்ந்த முதல் வேதசாட்சி ஸ்தேவான்" என்ற தலைப்பில் ஆக்க பூர்வமான செயற்பாடொன்றை முன்வைப்பர்.
- கிறிஸ்தவ வாழ்விற்கு சான்று பகர்வர்.
- தம்மிடம் உள்ளவற்றை இல்லாதவரோடு பகிர்ந்து கொள்வர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- பங்குக்கோட்டங்களில் நடைபெறும் செபமாலை வழிபாடு அல்லது திருப்பலி என்பவை பற்றியும், அதனூடாக மாணவர்கள் பெற்றுக் கொண்ட அநுபவங்கள் பற்றியும் கலந்துரையாடி, கீழ்க்காணப்படும் கருத்துக்களை வெளிக்கொணரக் கூடியதாக கலந்துரையாடலை நடாத்துங்கள்.

  - இச் செயற்பாடு அன்பிய வாழ்வு எனப்படுகிறது.
  - இத்தகைய வாழ்வையே தொடக்க கிறிஸ்தவர்கள் வாழ்ந்தார்கள்.
  - தூய ஆவியானவரின் துணையோடே அன்பியமாக வாழ முடியும்.

(20 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- திரு விவிலியம் அல்லது புதிய ஏற்பாட்டினை ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1, 2 ஆகியவற்றையும் தர உள்ளீட்டில் குறிப்பிடப்பட்ட பொருட்களையும் பகிர்ந்தளியுங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(30 நிமிடங்கள்)

படி 3

- ஒவ்வொரு குழுவினருக்கும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன்வரும் குழுவிற்கு முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- மாணவர்கள் வெளிப்படுத்தும் அர்த்தமுள்ள கருத்துக்களை கரும்/வெண் பலகையில் குறித்துக் கொள்ளுங்கள்.
- அதே குழுவைச் சேர்ந்த ஏனையோரிடம் கருத்துக்களை வழங்க சந்தர்ப்பம் அளியுங்கள்.
- ஏனைய குழுவினரிடம் ஆக்கபூர்வமாக கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்
- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் (சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன் படுத்தியோ, பாடத்தொகுப்பினை விளக்குங்கள்.

  - பெந்தக்கோஸ்து தினம் (தி.ப. 2:1-13) (யூத இனத்தைச் சேர்ந்த சீடர்கள் தூய ஆவியின் வரத்தைப் பெறுதல்)
  - பெந்தக்கோஸ்து தினத்தில் பேதுருவானவரின் அருளுரையும், அதன் பெறுபேறுகளும் (தி.ப. 2: 14-41)
  - கொர்னேலியு வீட்டில் புற இனத்தார் பரிசுத்த ஆவியைப் பெறுதல் (தி.ப. 10:1-8, 44-48)
  - தொடக்கக் கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறை (தி.ப. 2: 42-47, 4: 32-37)
  - திருத் தொண்டர்களை நியமித்தல் (தி.ப. 6:1-7)
  - தூய ஸ்தேவானின் மரணம் (தி.ப. 6: 8-15, 7: 54-60 ) (முதல் வேதசாட்சி)
  - திருத்தூதர்கள் மீது தூய ஆவி பொழியப்பட்ட போது அவர்களது வாழ்வு மாற்றமடைந்தது.
  - அவர்கள் துணிவுடன் நற்செய்தியை போதித்தமை இன்று கிறிஸ்துவுக்கு சான்று பகர தயங்கும் மக்களுக்கு சவாலாக உள்ளது.
  - கிறிஸ்தவ மதம் அனைவருக்கும் பொதுவான மதமாகும்.
  - மக்களின் இகபர நலன்களில் அக்கறையோடு திருச்சபை செயற்பட வேண்டும் என்பது திருத்தொண்டர் நியமனத்தின் ஊடாக தெளிவாகின்றது.
  - கிறிஸ்துவின் போர்வீரர்களாக, கிறிஸ்துவின் சாட்சிகளாக எப்பொழுதும் நாம் செயற்பட வேண்டும்.

(40 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திருவிவிலியம் / புதிய ஏற்பாடு (திருத்தூதர் பணி 2:1-13, 2:14-41, 10: 1-18, 44-48, 2:42-47, 4: 32-37, 6: 1-15, 7: 54-60, 12: 1-2)
- பிரிஸ்ட்டல் அட்டை, டிமைன் தாள், பிளாற்றினம் பேனா
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

## இணைப்பு 1

### குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்

- உங்கள் குழுவுக்குத் தலைவர் ஒருவரை நியமியுங்கள். (முன்பு தலைவராக இருக்காத ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.)
- உங்கள் குழுவினர் பெற்ற ஆய்வுப் பத்திரத்தை, உங்கள் குழுவிலுள்ள அனைவருக்கும் கேட்கக் கூடிய வகையில், ஒருவர் உரத்து வாசியுங்கள்.
- அதிலுள்ள கருத்துக்களை குழுவிலுள்ள அங்கத்தவரோடு கலந்துரையாடுங்கள்.
- விளங்காத கருத்துக்களை விளங்கியவர்களிடம் கேட்டறியுங்கள்.
- தொகுத்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு உங்கள் குழுவிற்கரிய செயற்பாட்டை ஆக்கப்பூர்வமாக வைக்க தயாராகுங்கள்.

## இணைப்பு 2

### ஆய்வுப் பத்திரம்

குழு 1 : தி.ப. 2:1-13 பகுதியை வாசித்து திருத்தூதர் மீது தூய ஆவி பொழியப்பட்டபோது ஏற்பட்ட நிகழ்வுகளை ஆக்கம் ஒன்றின் மூலமாக முன்வையுங்கள்.

குழு 2 : தி.ப. 2: 14-41 பகுதியின் படி பேதுருவானவரின் அருளுரையை வாசித்து சொற்பொழிவொன்றை ஆற்றுங்கள்.

குழு 3 : தி.ப. 10.ֹ.1-18,44-48 பகுதியை வாசித்து கொர்னேலியுவின் மனமாற்ற நிகழ்வை நாடகமாக நடித்துக் காட்டுங்கள்.

குழு 4 : தி.ப. 2: 42-47, 4: 32-37 பகுதியின் படி தொடக்க கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறையில் காணப்பட்ட பண்புகனை தொகுத்துக் காட்சிப்படுத்துங்கள்.

குழு 5 : தி.ப. 6: 1-7 பகுதியின் படி இன்றைய சமூகத்தில் மக்களின் நலன்களில் அக்கறையோடு செயற்பட வேணடும் என்பதை போஸ்ரர் ஒன்று தயாரித்து காட்சிப்படுத்துங்கள்.

குழு 6 : தி.ப. 6: 8-15, 7: 54-60, 12: 1-2 பகுதிகளை வாசித்து, இன்று கிறிஸ்துவின் சாட்சிகளாக எவ்வாறு செயற்படுவீர் என்பதை ஆக்கம் ஒன்றின் மூலம் முன்வைப்பர்.

**வீட்டுச் சூழலில் :**

குடும்பமாக அன்பியங்களில் பங்குகொள்ள வேண்டும் என்பதை ஏற்றுச் செயற்படுங்கள்.

## பாடம் - 08

## தூய பவுல்

**தேர்ச்சி 2.0** : இறைவெளிப்பாட்டுக்கு பதிலளித்து நம்பிக்கையோடு வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 10.2.3** : உண்மையான மனமாற்றத்தினூடாக நற்செய்தியின் தூதுவர்களாக செயற்படுவர்.

**பாடவேளை** : 03

**கற்றல் பேறுகள் :**

- தூய பவுல் பற்றிய தகவல்களைப் பட்டியல் படுத்துவர்.
- நற்செய்தியின் தூதுவராகச் செயற்பட உளமாற்றம் அவசியம் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- தூய பவுலின் தமஸ்கு நிகழ்வை நாடகமாக நடித்துக் காட்டுவர்.
- தமது பங்கில் குழு ஒற்றுமையை வளர்ப்பர்.
- தமது திறமைகளை திருச்சபையின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்துவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- இணைப்பு 2க் கேற்ப, மாணவர்களை வட்டமாக நிறுத்தி விளையாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- தூய பவுலின் படத்தைக் காட்டி, கீழ்க்காணும் கருத்துக்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை நடாத்துங்கள்.
    - கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தவே சவுல் தமஸ்கு நோக்கிப் பயணமானார்.
    - உண்மையை உணர்ந்து அதற்கு சாட்சியம் கூறும் போது உண்மை பரவுகின்றது.
    - நாம் எப்போதும் இறைவனின் திட்டத்தை அறிந்து அதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

(28 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- திருவிவிலியம் அல்லது புதிய ஏற்பாட்டினை ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1, 2 ஆகியவற்றையும், தர உள்ளீட்டில் குறிப்பிடப்பட்ட பொருட்களையும் பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(35 நிமிடங்கள்)

படி 3

- ஒவ்வொரு குழுவினருக்கும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன்வரும் குழுவிற்கு முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.

- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் (சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன் படுத்தியோ, பாடத்தொகுப்பினை விளக்குங்கள்.

  - யூதநெறியில் அவருக்கிருந்த அளவு கடந்த பற்றின் காரணமாக பவுல் திருச்சபையைத் துன்புறுத்தினார். (திருதூதர் பணி 8: 1-3)
  - அழைத்தலுக்கு முன் பவுல் திருச்சபையைத் துன்புறுத்தினார். (தி.பணி 8: 1-3)
  - பவுல் அழைப்பு பெறல் (திருதூதர் பணி 9: 1-19)
  - திருச்சபையைப் பரம்பச் செய்யும் கருவியாக தூய பவுல் கிறிஸ்துவினால் தயாரிக்கப்பட்ட முறை
  - பவுலின் தூதுரைப் பயணங்கள்
    - முதலாம் தூதுரைப் பயணம்
    - இரண்டாம் தூதுரைப் பயணம்
    - மூன்றாம் தூதுரைப் பயணம்

    (தூய பவுலின் தூதுரை பயணங்களின் போது பயணித்த முக்கிய நகரங்கள் மாத்திரம் போதுமானது)
  - தூய பவுல் மேற் கொண்ட பயணங்கள் இறைவனால் திட்டமிடப்பட்டு திருச்சபையால் அனுப்பப்பட்டு தூய ஆவியினால் வழி நடத்தப்பட்டவை ஆகும்.
  - தூய பவுலின் இறுதிக்கால வாழ்வு
  - தலத்திருச்சபைகளை நிறுவி தமக்கிருந்த பொறுப்பையும் நெருக்கமான உறவையும் வெளிப்படுத்தும் முகமாக திருமடல்களை எழுதி நெறிப்படுத்தினார்.
  - ஏதிர்கொண்ட சவால்கள் மத்தியில் மனந்தளராது செயற்பட்டு வெற்றி பெற்றார்.

(32 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திருவிவிலியம் / புதிய ஏற்பாடு (திருத்தூதர் பணி 8:1-3, 9:1-19)
- தூய பவுலின் படம்
- தூய பவுல் பற்றிய இறுவட்டு
- தூய பவுல் பற்றிய சஞ்சிகைகள்
- தூய பவுலின் தூதுரைப் பயணம் பற்றிய வரைபடங்கள்
- கடத்தல் பொருள் (பந்து)
- பிரிஸ்ட்டல் அட்டை, டிமைன் தாள், பிளாற்றினம் பேனா
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினைக் கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

## இணைப்பு 1

### குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்

- உங்கள் குழுவுக்குத் தலைவர் ஒருவரை நியமியுங்கள். (முன்பு தலைவராக இருக்காத ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.)
- உங்கள் குழுவினர் பெற்ற ஆய்வுப் பத்திரத்தை, உங்கள் குழுவிலுள்ள அனைவருக்கும் கேட்கக் கூடிய வகையில், ஒருவர் உரத்து வாசியுங்கள்.
- அதிலுள்ள கருத்துக்களை குழுவிலுள்ள அங்கத்தவரோடு கலந்துரையாடுங்கள்.
- விளங்காத கருத்துக்களை விளங்கியவர்களிடம் கேட்டறியுங்கள்.
- தொகுத்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு உங்கள் குழுவிற்குரிய செயற்பாட்டை ஆக்கப்பூர்வமாக வைக்கத் தயாராகுங்கள்.
    - குழு 01 -
        - தி.ப. 8: 1-13 பகுதியை வாசித்து பவுலின் அழைப்பைப் பற்றி நாடகம் ஒன்றைத் தயாரித்து முன்வையுங்கள்.
    - குழு 02 -
        - தூய பவுலின் முதலாம் தூதுரைப் பயணத்தை நன்கு அவதானித்து அதனூடாக அவர் சென்ற நகரங்களைப் பற்றி அறிக்கை ஒன்று தயாரியுங்கள்.
    - குழு 03 -
        - தூய பவுலின் இரண்டாம் தூதுரைப் பயணத்தை நன்கு அவதானித்து அதனூடாக அவர் சென்ற நகரங்களைப் பற்றி அறிக்கை ஒன்று தயாரியுங்கள்.
    - குழு 04 -
        - தூய பவுலின் மூன்றாம் தூதுரைப் பயணத்தை நன்கு அவதானித்து அதனூடாக அவர் சென்ற நகரங்களைப் பற்றி அறிக்கை ஒன்று தயாரியுங்கள்.

## இணைப்பு 2

### உட்பிரவேசத்திற்கான அறிவுறுத்தல்

- மாணவர்களை வட்டமாக நிற்க வையுங்கள்.
- கடத்தும் பொருள் ஒன்றை (உம்: பந்து) தயார் செய்யுங்கள்.
- பின்வரும் செயல்கள் அடங்கிய தாளை தமது பாதுகாப்பில் வைத்துக்கொள்ளுங்கள்.
    - அன்னை தெரேசா நோயாளி ஒருவரை தாங்கிச் செல்லல்.
    - தூய ஸ்தேவானின் இறுதி வேண்டல்.
    - தூய பேதுரு இயேசுவை மறுதலித்த நிகழ்வு.
    - பவுல் வேகமாக தமஸ்கு நோக்கிப் பயணித்தலும் தடுமாறிக் கீழே விழுதலும்.
- கடத்தும் பொருளை மாணவர்களிடம் கடத்தும் போது ஏதாவது ஒலியை எழுப்பி நிறுத்துகையில் கடத்தும் பொருள் யார் கையில் உள்ளதோ அவர் முதல் நிகழ்வை நிகழ்த்திக் காட்டுவார்.
- தொடர்ந்து இவ்விளையாட்டில் ஈடுபடுத்தி சவுலின் நிகழ்ச்சியுடன் விளையாட்டை நிறுத்தி பவுல் பற்றி கலந்துரையாடுவர்.

**வீட்டுச் சூழலில்** :

தூய பவுல் பற்றிய நூல்களை மேலதிகமாக வாசித்து தகவல்களை அறிந்துகொள்ளுங்கள்.

# பாடம் - 09

## அருளடையாளங்கள்

**தேர்ச்சி 2.0** : இறைவெளிப்பாட்டுக்கு பதிலளித்து நம்பிக்கையோடு வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 10.2.4** : கத்தோலிக்க திருச்சபையின் தலைமைத்துவத்திற்கு மதிப்பளிப்பர், கீழ்ப்படிவர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- திருச்சபையின் தலைமைத்துவம் தொடர்ந்து நடைபெற்று வருவது பற்றிய தகவல்களைத் திரட்டுவர்.
- இறை அழைத்தலுக்கு பதிலளிக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- தொகுக்கப்பட்ட தகவலுக்கேற்ப ஆக்கப் பூர்வமான நாடகமொன்றைச் சமர்பிப்பர்.
- திருச்சபையின் தலைமைத்துவத்திற்கு கீழ்ப்படிவர்.
- திருச்சபையின் தலைமைத்துவத்திற்கு மதிப்பளிப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்** :

படி 1

- தற்போதைய திருத்தந்தையின் படத்தைக் காண்பித்து, அதைப் பற்றி கேட்டறிந்து, கீழ்க் காணப்படும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடலை நடாத்துங்கள்.
  - தற்போதைய திருத்தந்தை முதலாம் பிரான்சிஸ் ஆவார்.
  - கத்தோலிக்க திருச்சபையின் முதலாவது திருத்தந்தை தூய பேதுரு.

(18 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1 ஐயும், தர உள்ளீட்டில் குறிப்பிடப்பட்டப் பொருட்களையும் பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(40 நிமிடங்கள்)

படி 3

- ஒவ்வொரு குழுவினரும் தமது செயற்பாடுகளின் இறுதி ஆக்கத்தை வகுப்பில் முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன்வரும் குழுவிற்கு முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.

- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் (சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன் படுத்தியோ, பாடத்தொகுப்பினை விளக்குங்கள்.

  - பேதுருவின் அழைத்தல் (லூக்கா 5:1-11)
  - தூய பேதுரு அனைத்தையும் விட்டுவிட்டு ஆண்டவரின் வார்த்தையில் நம்பிக்கை கொண்டார்.
  - இயேசுவைப் பற்றிய பேதுருவின் அறிக்கை (மத்தேயு 16:13-20)
  - சற்றும் தயங்காமல் ஆண்டவரை இறைமகன் என் அறிக்கையிட்டார்.
  - பேதுருவிடம் தலைமைப் பொறுப்புக்களைக் கையளித்தல் (மத்தேயு 16:18)
  - இயேசு பேதுருவிடம் மூவித பொறுப்புக்களைக் கையளித்தல் (யோவான் 21.'.15-19, க.தி.ம. 551-553, 765, 816, 862)
  - திருத்தந்தை முதலாம் பிரான்சிஸ் பற்றிய சிறு விளக்கம்
  - நாம் பலவீனராக இருந்த போதும் இறைவன் எமக்குத் தரும் பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டிய சக்தியையும் தருகிறார்.
  - தூய பேதுவின் வழிவந்தவர்களே திருத்தந்தையர்களாக நியமிக்கப்படுவர்.
  - தற்போதைய திருத்தந்தை முதலாவது பிரான்சிஸ் 266வது பாப்பரசராவார்.
  - இறைவனின் திருவுளப்படியே தூய ஆவியின் துணையுடன் நியமிக்கப்படுகிறார்கள்.
  - திருச்சபையின் தலைமைத்துவத்திற்டு மதிப்பளித்து கீழ்ப்படிந்து செயற்படுவது எமது கடமையாகும்.

(22 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திருவிவிலியம் / புதிய ஏற்பாடு (லூக்கா 5:1-11, மத்தேயு 16:13-20, யோவான் 21:15-19)
- க.தி.ம 551-553, 765, 816, 862
- திருத்தந்தை முதலாவது பிரான்சிஸ் அவர்களின் படம்
- எழுதும் தாள், டிமைன் தாள், நிறப்பேனா
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

## இணைப்பு 1

### குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்

- உங்கள் குழுவுக்குத் தலைவர் ஒருவரை நியமியுங்கள். (முன்பு தலைவராக இருக்காத ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.)
- உங்கள் குழுவினர் பெற்ற ஆய்வுப் பத்திரத்தை, உங்கள் குழுவிலுள்ள அனைவருக்கும் கேட்கக் கூடிய வகையில், ஒருவர் உரத்து வாசியுங்கள்.
- அதிலுள்ள கருத்துக்களை குழுவிலுள்ள அங்கத்தவரோடு கலந்துரையாடுங்கள்.
- விளங்காத கருத்துக்களை விளங்கியவர்களிடம் கேட்டறியுங்கள்.
- தொகுத்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு உங்கள் குழுவிற்கரிய செயற்பாட்டை ஆக்கப்பூர்வமாக வைக்கத் தாயாராகுங்கள்.
- நீங்கள் இச் செயற்பாட்டினூடாக கோவைப் படுத்திய விடயங்களை அடிப்படையாக் கொண்டு கீழ் காணப்படும் முன்வைப்புக்குத் தயாராகுங்கள்.
- உமது குழுவினர் பெற்ற திருவிவிலியப் பகுதியை வாசித்து அதனை நாடகமாக நடித்துக் காட்டுங்கள்.
    - குழு 01 - லூாக்கா 5:1-11
    - குழு 02 - மத்தேயு 16:13-20
    - குழு 03 - யோவான் 21:15-19
    - குழு 04 - இணைப்பு 2ஐ வாசித்து 'திருத்தந்தை முதலாம் பிரான்சிஸ்' பற்றி ஆக்கமொன்றை முன்வையுங்கள்.

## இணைப்பு 2

### திருத்தந்தை முதலாம் பிரான்சிஸ்

திருத்தந்தை முதலாம் பிரான்சிஸ் கத்தோலிக்த் திருச்சபையின் 266வது பாப்பரசராக 2013ம் ஆண்டு பங்குனி மாதம் 13ம் திகதி தேர்ந்தெடுக்கப் பட்டார். இவர் தென் அமெரிக்காவின் ஆர்ஜன்டினா நாட்டின் தலைநகராகிய புவனஸ் அய்ரஸ் (இதன் பொருள் 'சுத்தமான காற்று') அதிமேற்றாசனத்தின் பேராயராகக் கடமையாற்றியவர். இவரது இயற்பெயர் ஜோர்ஜ் மரியோ பெர்கோக்லியொ என்பதாகும். 1936ம் ஆண்டு மார்கழி 17ம் திகதி பிறந்த இவரே, அமெரிக்க கண்டத்தினதும், இயேசு சபையினதும் முதல் பாப்பரசர் ஆவார். நீண்ட காலங்களுக்குப் பின் ஐரோப்பாவிற்கு வெளியே தெரிவு செய்யப்பட்ட முதல் பாப்பரசருமாவார். இவரது தாயாரின் பெயர் ரெஜினா மாரியா, தந்தையின் பெயர் மாரியோ ஜோசே பெர்கோக்லியோ. பாப்பரசராக நியமனம் பெறும் போது இவருக்கு வயது 76. அயிரஸ் நகரில் வில்லா டெவோட்டா எனும் குருமடத்தில் கல்வி பயின்ற இவர் 1969ல் குருவானவராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். பின்னர் இறையியல் பேராசிரியராகக் கடமையாற்றினார்.1973 முதல் 1979 வரை ஆர்ஜென்டினா நாட்டின் இயேசு சபை மாகாணத் தலைவராக நியமிக்கப்பட்டார்.1986ம் ஆண்டு தாம் கற்ற குருமடத்தில் முதல்வராக நியமனம் பெற்றார்.1988ம் ஆண்டு தனது தாயகத்தின் கருதினாலாக நியமனம் பெற்றார்.

**வீட்டுச் சூழலில் :**

திருதந்தையின் படம் ஒன்றை வீட்டில் காட்சிப்படுத்துங்கள்.

## பாடம் - 10

## திருச்சபையின் பண்புகள்

**தேர்ச்சி 2.0** : இறைவெளிப்பாட்டுக்கு பதிலளித்து நம்பிக்கையோடு வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 10.2.5** :திருத்தூதரின் வழிவந்த ஒரே திருச்சபையின் செயலூக்கமுள்ள உறுப்பினராகச் செயற்படுவர்.

**பாடவேளை** : 03

**கற்றல் பேறுகள்** :

- திருச்சபையின் பண்புகளை தொகுப்பர்.
- திருச்சபை உறுப்பினரிடையே எந்தப் பாகுபாடும் காட்டாது வாழவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- திருச்சபையை கிறிஸ்துவின் மறையுடல் என்பதை நாடமாக நடித்துக் காட்டுவர்.
- கிறிஸ்துவின் மறையுடலின் அங்கத்தவர் என்ற வகையில் தத்தமது பொறுப்புகளை நிறைவேற்றுவர்.
- அயலவரின் தேவைகளில் முன்னின்று உதவுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- செஞ்சிலுவைச் சங்கத்தின் கொடியைக் காண்பித்து (ICRC), கீழ்க்காணும் கருத்துக்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை நடாத்துங்கள்.
    - திருச்சபை அனைத்து அமைப்புகளிலிருந்து வேறுப்பட்டது.
    - இது இறையாட்சியை நோக்கிப் பயணம் செய்கின்றது.
    - திருமுழுக்கின் வழியாக பெற்ற திருச்சபையின் உறுப்புரிமை மூலம் இறை மனித உறவுகளின் சங்கமமாக திருச்சபை விளங்குகின்றது.

(04 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1யையும், தர உள்ளீட்டில் குறிப்பிடப்பட்டப் பொருட்களையும் பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களைக் குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன்படுத்தலாம்.

(20 நிமிடங்கள்)

படி 3

- ஒவ்வொரு குழுவினருக்கும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன்வரும் குழுவிற்கு முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப்(சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன் படுத்தியோ, பாடத்தொகுப்பினை விளக்குங்கள்.
    - திருச்சபையின் பண்புகள்
        - ஏகம்
        - பரிசுத்தம்
        - கத்தோலிக்கம்
        - அப்போஸ்தலிக்கம்
    - திருச்சபை கிறிஸ்துவின் மறையுடலாகும்.(1கொரி 12: 12-30, திருச்சபை எண் 09)
    - திருச்சபையின் தலை கிறிஸ்து, நாம் அனைவரும் அவரின் உடல் உறுப்புக்களாக உள்ளோம்.
    - திருச்சபையின் உறுப்பினர்களாகிய நாம் அனைவரும் ஒற்றுமையுடனும் அன்புடனும் செயற்பட வேண்டும்.
    - திருச்சபை உறுப்பினர் ஒவ்வொருவரும் தனித்துவமான திறமையுடையவர்கள், எனவே அனைவரும் சமமாக மதிக்கப்பட வேண்டும்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திருவிவிலியம் / புதிய ஏற்பாடு (1 கொரிந்தியர் 12:12-30)
- கத்தோலிக்க திருமறை 813, 831, 857, 861, 862
- இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு (திருச்சபை எண் 09)
- சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கொடி (படம்)
- டிமைன் தாள், நிறப்பேனா
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

## இணைப்பு 1

### குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்

- உங்கள் குழுவுக்குத் தலைவர் ஒருவரை நியமியுங்கள். (முன்பு தலைவராக இருக்காத ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.)
- உங்கள் குழுவினர் பெற்ற ஆய்வுப் பத்திரத்தை, உங்கள் குழுவிலுள்ள அனைவருக்கும் கேட்கக் கூடிய வகையில், ஒருவர் உரத்து வாசியுங்கள்.
- 1 கொரிந்தியர் 12: 12-30, க.தி.ம 813, 831, 857, 861, 862, இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு (திருச்சபை எண் 09) ஆகியவற்றை நன்றாக வாசியுங்கள்.
- அதனை குழு அங்கத்தவரோடு கலந்துரையாடுங்கள்.
- உங்கள் குழு வாசித்து கோவைப் படுத்திய விடயங்களை அடிப்படையாக் கொண்டு குழு ஆக்கமொன்றை முன்வைப்பதற்குத் தயாராகுங்கள்.
    - குழு 01 -
        - திருச்சபையின் இரண்டு பண்புகள் (ஏகம், பரிசுத்தம்) என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று தயாரியுங்கள்.
    - குழு 02 -
        - கத்தோலிக்கம், அப்போஸ்தலிக்கம் என்ற பதங்களை விளக்கி, உங்கள் பங்கிலுள்ள சஞ்சிகைக்கு ஆக்கம் ஒன்றை எழுதுங்கள்.
    - குழு 03 -
        - திருச்சபை கிறிஸ்துவின் மறையுடலாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை விளக்க, நாடகம் ஒன்று தாயாரித்து நடித்துக் காட்டுங்கள்.

**வீட்டுச் சூழலில் :**

பங்குச் சபைகளில் அங்கத்தவராகி பணியாற்றுங்கள்.

# பாடம் - 11

## இலங்கைத் திருச்சபை

**தேர்ச்சி 2.0** : இறைவெளிப்பாட்டுக்கு பதிலளித்து நம்பிக்கையோடு வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 10.2.6** : இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் ஒருமைப்பாட்டினை வினைத்திறன் மிக்க வகையில் தேசிய பாதுகாப்பினையும் பிணைப்பினையும் ஒருமைப் பாட்டினையும் ஒற்றுமையையும் கட்டியெழுப்புவர்.

**பாடவேளை** : 03

**கற்றல் பேறுகள்** :

- இலங்கைத் திருச்சபையின் வரலாற்றுத் தகவல்களைத் திரட்டுவர்.
- எமது நாட்டு கத்தோலிக்கரின் தனித்துவத்தைப் பாதுகாக்க வேண்டு மென்பதை ஏற்றுக்கொள்வர்.
- தொகுத்த தகவல்களை ஆக்கபூர்வமாக முன் வைப்பர்.
- சவால்களை எதிர் கொண்டு கத்தோலிக்க விசுவாசத்தைப் பாதுகாப்பர்.
- தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்க உதவுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- இணைப்பு 2ல் உள்ள அருளாளர் யோசவ்வாஸ் அடிகளின் பாடலை ஆசிரியர் மாணவர்களுடன் சேர்ந்து பாடுவர். (வசதியிருப்பின் அப் பாடலை இருவட்டு மூலம் வகுப்பறையில் செவிமடுக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.)
- இப்பாடல் யாரைப்பற்றிக் கூறுகின்றது என்பதனை அறிந்து, பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரக் கூடிய வகையில் கலந்துரையாடலை நடாத்துங்கள்.
    - யோசவ்வாஸ் அடிகளார்
        - பிறப்பு - இந்தியா
        - பணி - இலங்கை
        - காலம் - ஒல்லாந்தர்
        - துன்புறுத்தப்பட்ட காலத்தில் இலங்கைக்கு சமூமகளித்தார்

(20 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1யையும், தர உள்ளீட்டில் குறிப்பிடப்பட்டப் பொருட்களையும் பகிர்ந்தளியுங்கள்
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(35 நிமிடங்கள்)

படி 3

- ஒவ்வொரு குழுவினரும் தமது செயற்பாடுகளின் இறுதி ஆக்கத்தை வகுப்பில் முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன்வரும் குழுவிற்கு முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப்(சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன் படுத்தியோ, பாடத்தொகுப்பினை விளக்குங்கள்.

  - போத்துகேயரின் வருகைக்கு முன்
    - திருத்தூதர் தோமாவின் இலங்கை வருகை
    - நொஸ்தோரிக்க கிறிஸ்தவர்கள் இலங்கையில் வாழ்ந்திருந்தார்கள்
    - காசியப்பன் காலத்தில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்தமைக்கான சான்றுகள்
    - 1912 இல் அனுராதபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட நொஸ்தோரிக்க சிலுவை

  - போத்துகேயர் காலம்
    - 1505 இல் போத்துகேயர் இலங்கைக்கு வருகை தந்தனர்.
    - 1543 இல் 7வது புவனேகபாகுவின் அழைப்பின் பேரில் பிரான்சிஸ்கள் மறைதூதர்கள் இலங்கைக்கு வருகை தந்தனர்.
    - கி.பி. 1602 இல் இயேசு சபை மறைத் தூதர்கள் இலங்கைக்கு வருகை தந்தனர்.
    - மேற் கூறப்பட்ட மறைத் தூதர்களின் பணி சுருக்கமான விளக்கம்

  - ஒல்லாந்தர் காலம்
    - ஒல்லாந்தர் காலத்தில் கத்தோலிக்கரைத் துன்புறுத்தினர்.
    - அருளாளர் யோசவ்வாஸ் அடிகள் - அவரது பணி சுருக்கமாக
    - அருட்.பணி கொன்சால்வேஸ் அடிகள் - அவரது பணி சுருக்கமாக

  - பிரித்தானியர் காலம்
    - கத்தோலிக்கர் சுதந்திரம் பெறல்
    - பல்வேறு துறவற சபைகளின் வருகையும் பணியும்

  - சுதந்திர காலம்

  - இலங்கையின் மறைமாவட்டங்களும் ஆயர்களும்

(40 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- இலங்கைத் திருச்சபை வரலாறு எழுதப்பட்ட நூல்கள்.
- அருளாளர் யோசவ் வாஸ் அடிகள், அருட்.பணி கொன்சால்வேஸ் அடிகள் ஆகியோரின் படங்கள்.
- மறை மாவட்டங்களைக் காட்டும் இலங்கையின் வரைப்படம்.
- இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் மறைமாவட்டங்கள் - ஆயர்களது பெயர்கள்.
- இணைப்பு 1, 2, 3

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

## இணைப்பு 1

### குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்

- உங்கள் குழுவுக்குத் தலைவர் ஒருவரை நியமியுங்கள். (முன்பு தலைவராக இருக்காத ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.)
- உங்கள் குழுவினர் பெற்ற ஆய்வுப் பத்திரத்தையும், 11ம் பாடத்தில் உமது குழுவிற்கு கிடைத்த பகுதியையும், உங்கள் குழுவிலுள்ள அனைவருக்கும் கேட்கக் கூடிய வகையில், ஒவ்வொருவரும் ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தி உரத்து வாசியுங்கள். ஏனையோர் அவற்றை செவிமடுங்கள்.
- அதனை குழு அங்கத்தவரோடு கலந்துரையாடுங்கள்
- உங்கள் குழு வாசித்து கோவைப்படுத்திய விடயங்களை அடிப்படையாக்கொண்டு குழு ஆக்கமொன்றை முன்வைப்பதற்குத் தயாராகுங்கள்.
    - குழு 01 - போர்த்துக்கேயரின் வருகைக்கு முன்
    - குழு 02 - போர்த்துக்கேயர் காலம்
    - குழு 03 - அருளாளர் யோசவ்வாஸ் அடிகள்
    - குழு 04 - அருட்.பணி கொன்சால்வேஸ் அடிகள்
    - குழு 05 - பிரித்தானியர் காலமும், சுதந்திர காலமும்.

### கோவை நகர்க் கோமகன்

கோவை நகர்க் கோமகனே
யோசேவாஸ் தலைமகனே
ஏவை செய்த பாவமகல
இறைவனை நாம் இறைஞ்சிடுவோம் - யோசேவாஸ்

கிறிஸ்து ஒளிவீசச் சிலுவை கரமேந்திக்
கண்டி நகர் வேதம் பொழிந்தவரே - 2
கொடிய ரொல்லாந்தரிட்ட கடிய தடைகள் வென்று
விடிய விடியச் சேவை புரிந்தவரே - யோசேவாஸ்

உலக சுகபோகம் வெறுத்தவரே
இகழுந் தரித்திரங் கைப்பிடித்தவரே - 2
அவல நிலையிலிருந்த இலங்கை அலைமோதச்
சகல உயிர்க்கும் அன்பு சொரிந்தவரே - கோவை நகர்

பக்திப் பணிவோடு பலருந் துதிபாட
முத்திப்பேறு பட்டம் மலர்ந்துவரும் 2
சக்தி மரிசூசை சுதனார் துணைகூட
எத்திசைக்கும் உந்தன் புகழ் வளருமே - யோசேவாஸ்

மாறு வேடங்கொண்டு மணம் பரப்பி
ஏறுநடை போட்டுப் புகழ் நிரப்பி 2
கூறும் பன்மொழிகள் போகுந்துறை கண்டு
ஆகுந் தை மாதம் கண்டி அமரரானீர் - கோவை நகர்

**வீட்டுச் சூழலில் :**

அருட்.பணி கொன்சால்வேஸ் அடிகளாரின் வியாகுல பிரசங்கம் அடங்கியஇறுவட்டுகளை செவிமடுங்கள்.

# பாடம் - 12

## பணி வாழ்வின் அருளடையாளங்கள்

**தேர்ச்சி 3.0** : அருளடையாளங்கள் வழியாக கிறிஸ்துவுடன் இணைந்து பெற்றுக்கொண்டு புதுவாழ்வுக்கு சான்று பகர்வர்.

**தேர்ச்சி மட்டம் 10.3.1** : கிறிஸ்தவ வாழ்வில் ஊட்டம் பெற நிதமும் நற்கருணையை உட்கொள்வர்.

**பாடவேளை** : 03

**கற்றல் பேறுகள்** :

- நற்கருணையின் பண்புகளை விளக்குவர்.
- நற்கருணையில் கிறிஸ்து உயிருள்ள பிரசன்னமாக இருக்கிறார் என்பதை ஏற்றுக் கொள்வர்.
- நற்கருணையைப் பற்றிக் கோவைப் படுத்திய தகவல்களை ஆக்கங்களாக முன் வைப்பர்.
- திருப்பலியில் ஆர்வத்தோடு பங்கேற்பர்.
- நற்கருணையில் உயிரோடு உயிருள்ள பிரசன்னமாக இருக்கின்ற இயேசு கிறிஸ்துவிடம் தமது நண்பர்களோடு சேர்ந்து செபிப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- நற்கருணைப் புதுமைகள் அடங்கிய இறுவட்டை காட்சிப்படுத்துங்கள். (இலன்சியானோ நகரின் புதுமை அடங்கிய பகுதி).
- இவ்வாறு செய்ய இயலாத சந்தர்ப்பங்களில் இணைப்பு 2 இல் உள்ள இலன்சியானோ நகர் புதுமையை கதையாகக் கூறுங்கள்.
- இதன் வழியாக கீழ்க் காணப்படும் கருத்துக்கள் வெளிக்கொணரக் கூடிய வகையில் கலந்துரையாடலை நடாத்துங்கள்.
    - இலன்சியானோ நகர் புதுமை
    - அப்புதுமையின் வழியாகக் கூறப்படுபவை
    - மாணவர்கள் அறிந்த இதுபோன்ற வேறு புதுமைகள்

(20 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்
- எல்லாக் குழுக்களுக்கும் திருவிவிலியம், இணைப்பு 1, 2 ஐப் பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(60 நிமிடங்கள்)

படி 3

- ஓவ்வொரு குழுவினரும் தமது செயற்பாடுகளின் இறுதி ஆக்கத்தை வகுப்பில் முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன் வரும் குழுவுக்கு, முதல் வாய்ப்பினை மாணவர்களுக்கு வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் முன் வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப்(சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன் படுத்தியோ, பாடத்தொகுப்பினை விளக்குங்கள்.
  - நற்கருணையின் பண்புகள்.
  - புதிய ஏற்பாட்டில் திருப்பலி பற்றிக் கூறப்பட்ட பெயர்கள்.
  - நற்கருணையை பற்றி பழைய ஏற்பாட்டில் காணப்படும் முன்னடையாளங்கள்

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திரு விவிலியம் அல்லது புதிய ஏற்பாடு
- இறுவட்டு (DVD)
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

**குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்**

- நீங்கள் பெற்றுள்ள ஆய்வுப் பத்திரத்தை வாசியுங்கள்.
- அதில் உள்ள கருத்துக்களை குழுவிலுள்ள ஏனையோருடன் கலந்துரையாடுங்கள்.
- உங்கள் குழு பெற்றுள்ள ஆக்கத்தை வகுப்பில் முன்வைப்பதற்குத் தயாராகுங்கள்.
  - நற்கருணையை எடுத்துக்காட்டுகின்ற பண்புகளை உள்ளடக்கி தாளலயப் பாட்டொன்றை ஆக்குங்கள்.
  - திருப்பலியைப் பற்றி புதிய ஏற்பாட்டில் கூறப்படுகின்ற பெயர்களை உள்ளடக்கி சுவரொட்டியொன்றை ஆக்குங்கள்.
  - நற்கருணையின் பழைய ஏற்பாட்டு அடையாளங்களை உள்ளடக்கி சுவர்ப்பத்திரிக்கை ஒன்றை ஆக்குங்கள்.

**இணைப்பு 2**

**ஆய்வுப் பத்திரம்**

- நற்கருணையின் பண்புகள்
  - ஓர் அருளடையாளம்
  - ஓர் உணவு (யோவான் 6: 53-56)
  - ஒரு பலி (லூக்கா 22: 19-20)
  - ஓர் உடன்படிக்கை (எரேமியா 31: 31-34, விடுதலை பயணம் 24: 4-8 எபிரேயர் 9: 14-22, 1 கொரிந்தியர் 11: 25)
  - ஒரு நன்றிகூறல் (லூக்கா 22: 17, 22: 19)
  - நினைவுப்பலி (லூக்கா 22: 19, 1கொரிந்தியர் 11: 24)

- திருப்பலிக்கு புதிய ஏற்பாட்டில் குறிக்கப்பட்டுள்ள பெயர்கள்
  - அப்பம் பிடுதல் (லூக்கா 24: 35, திருத்தூதர் பணி 2: 42)
  - இயேசுவின் இறுதி உணவு (1 கொரிந்தியர் 11: 20)
  - புதிய பாஸ்கா விழா (1 கொரிந்தியர் 5: 8)
  - இயேசுவின் உடலில் பங்கேற்றல் (1 கொரிந்தியர் 10: 16)

- நற்கருணையின் பழைய அடையாளங்கள்
  - மெல்கிசேதேக்கின் பலி (தொடக்க நூல் 14: 18-20)
  - மன்னா உணவினால் ஊட்டம் பெறுதல் (விடுதலை பயணம் 16)
  - புளிப்பற்ற அப்பமும் திராட்சை இரசமும் பருகுதல் (விடுதலை பயணம் 12: 15-20)
  - அப்பம் பலுகச் செய்தல் (லூக்கா 9: 12-14)
  - வாழ்வு தரும் உணவு பற்றிய படிப்பினைகள் (யோவான் 6: 26-27,35)

## இணைப்பு 3

## இலஞ்சியானோ நகரின் நற்கருணை பற்றிய புதுமை

கி.பி. 800 ஆம் ஆண்டளவில் இலஞ்சியானோ நகரில் புனித லொகோன்சியன் அடிகளாருக்கு அர்ப்பணிக்கப்பட்ட சிறிய ஆலயத்தில் பணியாற்றிய துறவற குருவானவர் ஒருவருக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கும் வேளையில் அப்பமும் இரசமும் கிறிஸ்துவின் திரு உடலாகவும், திரு இரத்தமாகவும் மாறுகின்றதென்பதில் சந்தேகம் ஏற்பட்டது. ஒரு நாள் அவர் திருப்பலியில் எழுந்தேற்றம் சடங்கு நடைபெறும் வேளையில் அப்பம் ஒரு இறைச்சி துண்டாகவும், இரசம் திரு இரத்தமாகவும் மாறியதைக் கண்டார். அந்த இறைச்சி துண்டும் இரத்தமும் இலஞ்சியானோ நகரில் விசேட நற்கருணை பேழையொன்றில் வைக்கப்பட்டுள்ளது.1574 இல் இந்த இறைச்சித் துண்டும் இரத்தமும் பற்றி விஞ்ஞானப் பரிசோதனைச் செய்யப்பட்டது. இந்த விஞ்ஞானப் பரிசோதனையின் போது, உறைந்திருந்த பல்வேறு வடிவங்களைக் கொண்ட பல்வேறு அளவிலான, சம அளவற்ற 5 இரத்தப் பகுதிகள் நிறுக்கப்பட்டன. அப்போது சமமற்ற எல்லா துண்டுங்களினதும் நிறை சமமானது மட்டுமல்ல, ஒவ்வொரு துண்டினது நிறையும், எல்லாத் துண்டுகளும் ஒன்று சேர்த்து நிறுக்கும் போது வரும் நிறைக்கு சமமானது. 1970 இல் இந்த இறைச்சி துண்டைப் பற்றி மேலும் ஒரு விஞ்ஞான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் போது கீழ்க் காணப்படும் கருத்துக்கள் வெளிக்கொணரப்பட்டன.அவையாவெனில்,இந்த இறைச்சித் துண்டும் இரத்தமும் உண்மையிலேயே ஒரு மனிதனுடையதாகும்.இது மனித இதயத்திலிருந்து எடுக்கப்பட்ட ஒன்றாகும்.இவ்விறைச்சித் துண்டிலும் இரத்தத்திலும் உள்ளது ஒரே வகையிலான இரத்தமாகும். அது AB பொசிட்டிவ் வகையாகும்.இந்த இரத்தத்தில், இப்போது உடலில் இருந்து எடுக்கப்பட்ட இரத்தத்தில் இருப்பது போல், புரதமும், கனிப்பொருளும் உள்ளது. உடலிலிருந்து வெளியேற்றப்படும் இரத்தத்தில் புரதமும் கனிப்பொருளும் 20 - 30 நிமிடங்கள் வரையிலையே நிறைத்திருக்கும். ஆயினும் இவ்வாறானவை இந்த இரத்தத்தில் தொடர்ந்து வெளியேறாமல் காணப்படுகின்றது.இந்த இறைச்சித் துண்டுக்கும் இரத்திற்கும் எவ்வித பாதுகாப்பிற்கான இராசயன பொருட்களும் போடப்படவில்லை.இவ்விறைச்சித் துண்டும் இரத்தமும் 12 நுற்றாண்டுகளுக்கு மேல் மூடப்படாமல் இருந்த போதும், அவை பழுதடையவில்லை.1978 ஆம் ஆண்டளவில் நாசா நிறுவனம் டியுரின் நகர் புனித மேலாடையைப் பற்றிய ஆய்வில் ஈடுப்பட்டது. அப்போது புனித மேலாடையில் AB பொசிட்டிவ் வகையிலான இரத்தம் அதில் பதியப்பட்டுள்ளதாகக் காணப்பட்டது. டியுரின் நகர் புனித மேலாடையிலும் இவ் இறைச்சித் துண்டிலும் ஒரே வகையிலான இரத்தம் இருப்பது கண்டுப்பிடிக்கப் பட்டமை ஒரு முக்கிய காரணியாகும்.

**வீட்டுச் சூழலில் :**

குடும்பமாக ஒன்று சேர்ந்து ஞாயிறு திருப்பலியில் பங்கேற்கவும்.

## பாடம் - 13

## பாஸ்கா விருந்து

**தேர்ச்சி 3.0** : அருளடையாளங்கள் வழியாக கிறிஸ்துவுடன் இணைந்து பெற்றுக்கொண்டு புதுவாழ்வுக்கு சான்று பகர்வர்.

**தேர்ச்சி மட்டம் 10.3.2** : இயேசுவின் நற்கருணை உணவில் பங்கேற்று அன்பில் வாழ்வர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- பழைய ஏற்பாட்டில் பாஸ்கா உணவு
- முறையான முன்னாயத்தங்களோடு நற்கருணையைப் பெற வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வர்.
- இறுதி இராவுணவு நிகழ்ச்சியை ஆக்கப்பூர்வமாக முன்வைப்பர்.
- பணிவான தலைவனாக வகுப்பில் செயற்படுவர்.
- ஆன்ம, உடல் ரீதியாக ஆயத்தமாகி நற்கருணையைப் பெறுவதற்கு நண்பர்களுக்கு உதவுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 2

- முன்பு பயிற்றப்பட்ட மாணவர் குழுவின் மூலம் இறுதி இரவுணவு நிறைவேற்றப்பட்ட சந்தர்ப்பத்தை நடித்துக் காட்டும்படி செய்யுங்கள்.
- அதன் வழியாக கீழ்க்காணப்படும் கருத்துக்கள் வெளிக்கொணரக் கூடிய வகையில் கலந்துரையாடலை நடாத்துங்கள்.
    - இறுதி இராணவும் பாதங்களை கழுவுதலும்
        - பங்கு பற்றியவர்கள் யார்?
        - நிறைவேற்றிய நாள் எது?
        - விருந்து நடந்த இடம் எது?
        - அங்கு நடைபெற்ற நிகழ்வுகள் எவை?
    - இறுதி இராவுணவின் போது ஸ்தாபிக்கப்பட்ட அருளடையாளங்கள் இரண்டு.

(15 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1 ஐப் பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(35 நிமிடங்கள்)

படி 3

- ஓவ்வொரு குழுவினரும் தமது செயற்பாடுகளின் இறுதி ஆக்கத்தை வகுப்பில் முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன்வரும் குழுவிற்கு முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் முன் வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப்(சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன் படுத்தியோ, பாடத்தொகுப்பினை விளக்குங்கள்.
    - பழைய ஏற்பாட்டில் பாஸ்கா உணவு
    - இறுதி இராவுணவும் நற்கருணையை ஸ்தாபித்தலும்
    - நற்கருணையைப் பெற ஆன்ம, உடல் ஆயத்தங்கள்
    - பாதங்களைக் கழுவுதலும், அன்பின் கட்டளையும்

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திருவிவிலியம்
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

**குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்**

- கீழ்க்காணப்படும் திருவிவிலியப் பகுதிகளை வாசியுங்கள்.
    - விடுதலைப் பயணம் 12:1-14
    - யோவான் 13:1-20, 34
    - லூக்கா 22:19-20
    - 1 கொரிந்தியர் 11:23-26, 11:27-30
- அவற்றின் ஊடாக வெளிக்கொணரப் படுக்கின்ற கருத்துக்களை குழுவிலுள்ள ஏனையோருடன் கலந்துரையாடுங்கள்.
- நீங்கள் இச் செயற்பாட்டினூடாக கோவைப் படுத்திய விடயங்களை அடிப்படையாக் கொண்டு கீழ் காணப்படும் முன்வைப்புக்குத் தயாராகுங்கள்.
    - குழு 01 -
        - பழைய ஏற்பாட்டில் பாஸ்கா உணவை நிறைவேற்றிய விதத்தினை நடித்துக் காட்டுங்கள்.
    - குழு 02 -
        - இறுதி இராவுணவு நிகழ்ச்சியை ஒவ்வொரு சந்தர்ப்பமாக (தோரணை வடிவில்) படங்கள் மூலம் காட்டும் ஆக்கமொன்றைத் தயாரியுங்கள்.
    - குழு 03 -
        - நற்கருணைப் பெற முன் ஆயத்தங்களை எவ்வாறு செய்ய வேண்டுமென்பதை உரையாடல் மூலம் முன்வையுங்கள்.
    - குழு 04 -
        - அன்பின் கட்டளையின் படி வாழும் விதத்தினை பங்கேற்று நடித்தல் மூலம் முன் வைப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.

**வீட்டுச் சூழலில் :**

வருடத்தில் ஒரு முறையாவது குடும்பத்தில் அனைவரும் ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

# பாடம் - 14

# கல்வாரி பலி

**தேர்ச்சி 3.0** : அருளடையாளங்கள் வழியாக கிறிஸ்துவுடன் இணைந்து பெற்றுக்கொண்டு புதுவாழ்வுக்கு சான்று பகர்வர்.

**தேர்ச்சி மட்டம் 14.3.3** : அன்றாட வாழ்வில் பிறருக்காக எம்மைப் பலியாக்கி வாழ்வர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள் :**

- பழைய ஏற்பாட்டில் பல்வேறு பலிகளை விபரிப்பர்.
- அன்றாட வாழ்வில் பலியாக வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வர்.
- பழைய ஏற்பாட்டுப் பலிகளையும் கல்வாரிப் பலியையும் ஆக்கங்களாக முன்வைப்பர்.
- பாவம் செய்த போது தமது பிழைகளை ஏற்றுக்கொண்டு குற்ற நீக்கற் பலியாக பாவப்பரிகாரம் செய்வர்.
- பிறரின் துன்பங்களின் போது தாமும் கவலைப்படுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- தரவிருத்தி உள்ளீட்டில் கூறப்பட்டுள்ள படத்தைக் காட்டுங்கள்.
- இணைப்பு 3 இல் உள்ள பாடலை மாணவர்களோடு பாடுங்கள்.
- இதன் வழியாக கீழ்க் காணப்படும் கருத்துக்கள் வெளிக்கொணரக் கூடிய வகையில் கலந்துரையாடலை நடாத்துங்கள்.
    - படத்தில் காணப்படும் கருத்துக்கள்
    - பாட்டில் காணப்படும் கருத்துக்கள்

(15 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1, 2 ஐப் பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(35 நிமிடங்கள்)

படி 3

- ஓவ்வொரு குழுவினரும் தமது செயற்பாடுகளின் இறுதி ஆக்கத்தை வகுப்பில் முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன்வரும் குழுவிற்கு முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்க பூர்வமான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் முன் வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் (சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன்படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.

    - பழைய ஏற்பாட்டில் பல்வேறு பலிகளும், அவற்றின் நோக்கங்களும)
    - பலியின் வகைகள்
        - எரி பலி
        - நல்லுறவுப் பலி
    - எரி பலி நான்கு வகைப்படும்
        - முழுமையான பலி
        - பங்குபற்றுதலின் பலி
        - பாவப் பரிகாரப் பலி
        - குற்ற நீக்கற் பலி
    - எரி பலிகளுக்காகப் பயன்படுத்தப்படும் மிருகங்கள்
        - மாடுகள்
        - ஆடுகள்
        - பறவைகள்
    - கல்வாரிப் பலி

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திருவிவிலியம்
- சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் படம்
- இணைப்பு 1, 2, 3

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினைக் கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

**குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்**

- ஆய்வுப் பத்திரத்தை நன்றாக வாசியுங்கள்.
- அதனூடாக பெறுகின்ற கருத்துக்களை குழு அங்கத்தவரோடு கலந்துரையாடுங்கள்.
- உங்கள் குழு பெற்றுள்ள ஆக்கத்தை வகுப்பின் முன் வைப்பதற்குத் தயாராகுங்கள்.

    - குழு 01 -
        - பழைய ஏற்பாட்டின் பல்வேறு பலிகள், பலிகளின் நோக்கம், பலி வகைகள் ஆகியன உள்ளடக்கப்பட்ட சுவரொட்டி ஒன்றை தயாரியுங்கள்.
    - குழு 02 -
        - எரிபலியின் 4 வகைகளையும் படமாக வரைந்து காட்டுங்கள்.
    - குழு 03 -
        - பழைய ஏற்பாடு பலிகளுக்கும் கல்வாரிப் பலிக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அட்டவணைப் படுத்துங்கள்.

## இணைப்பு 2

## குழு ஆய்வுப் பத்திரம்

## பழைய ஏற்பாட்டின் பல்வேறு பலிகள்

இஸ்ரயேலரின் வழிபாடுகள் பலியை மையமாகக் கொண்டதாகவே அமைந்தன. பலிகளுக்காக மிருகங்களையும் உணவு வகைகளையும் பயன்படுத்திய போதும் அவற்றுள் மிருகங்களின் பலியே மிக முக்கியமாக அமைந்தது. மிருகங்களுள் உயிர் இருப்பதே அதற்கு காரணமானது. உயிர் இறைவனுக்கே உரித்தானது. பலியை செலுத்துபவர் மிருகத்தின் உரிமையாளராக இருக்க வேண்டும். பழுதற்ற, எட்டு நாட்களுக்கு குறையாத மிருகங்களின் ஆண்களை பலிக்காக பயன்படுத்தினர்.

- பலி முக்கியமாக இரண்டு வகைப்படும்.
  1. எரி பலி
  2. நல்லுறவுப்பலி

- எரி பலி நான்கு வகைப்படும்.
  1. முழுமையான பலி
     பலியை எரிக்கும் போது நறுமணம் வீசும் புகை மேலே செல்லும். அதனூடாக பலி செலுத்துபவரின் வேண்டுதல் இறைவனை நோக்கிச் செல்லுமென கருதப்படும். இது இறைவனை கௌரவிப்பதற்காக செய்யும் உன்னத பலியாகும்.

     இஸ்ரயேலர் எரி பலி செலுத்திய சந்தர்ப்பங்கள்:
     - காலையும் மாலையும் சந்திப்புக் கூடாரத்தில்
     - பிரசவத்திற்கு பின்னர் ஒரு பெண்ணை தூய்மைப் படுத்த
     - தொழு நோயால் பீடிக்கப்பட்டு சுகமடைந்த பின்
     - குருக்களையும் நசரேத்தினரையும் அர்ப்பணிக்கும் போது

  2. சாதாரண பலி
     இறைவனுடன் நல்லுறைவைக் காட்டுவதற்காக இப் பலி ஒப்புக் கொடுக்கப்படும். அவற்றினால் தற்போது உள்ள உறவை வெளிப்படுத்தியது மட்டுமல்ல, அவ்வுறவு மிக ஆழமாக்கப்பட்டது. இப் பலியின் போது, பலியின் ஒரு பகுதி இறைவனுக்கும், இன்னுமொரு பகுதி குருவுக்கும், மற்றைய பகுதி காணிக்கையைக் கொண்டு வந்தவருக்குமாகப் பிரிக்கப்படும். குருக்களினதும் காணிக்கையைக் கொண்டு வந்தவரினதும் பகுதிகளை, தேவாலயத்தின் புனித ஸ்தலத்தினுள், பங்குப் பற்றிய ஏனையோருடன் பகிர்ந்து உண்ணுவர்.பலியின் இவ் உணவு, “இறைவனின் முன் உண்டு குடித்து மகிழ்வது” என குறிப்பிடப் படுகிறது. சாதாரண பலி மகிழ்ச்சியான சூழலில் நடைபெற்றது.

  3. பாவப் பரிகாரப் பலி
     பாவப் பரிகாரப் பலி இரண்டு வகைப்படும்.

     1. தூய்மையாக்கும் பலி
        ஒருவர் தூய்மையாவதற்காக ஒப்புக்கொடுக்கப்படும் பலி இப்பெயரில் அழைக்கப்படுகின்றது.

        உதாரணம் :
        பிரசவத்திற்கு பின்
        தொற்றும் தொழு நோயினால் பீடிக்கப்பட்டவர் குணமடைந்த பின்

     2. பாவப் பலி
        இப்பலி ஊடாக பாவங்களில் இருந்து மீட்பு பெறுதல் அல்லது தூய்மை பெறுதல் நடைபெறும்.

     3. குற்ற நீக்கற்பலி
        அறியாமல் செய்த தேவ நிந்தனைக்குப் பின் அல்லது அறியாமல் இறைவனுக்கோ அல்லது சற்று அறிந்து தம் சகோதரனுக்கோ எதிராகச் செய்த பாவங்களுக்காக, இப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

- எரி பலிக்குப் பயன் படுத்தப்பட்ட மிருகங்கள்
  1. காளை (லேவியர் 1:3-9)
  2. செம்மறியாடுகள், ஆடுகள் (லேவியர் 1:10-13)
  3. பறவைகள் (லேவியர் 1:4-17)

- நல்லுறவுப் பலிக்காக
  1. மா
  2. தானியங்கள்
  3. திராட்சை இரசம்
  4. எண்ணை வகைகள்
  5. அப்பம் ஆகியன பயன்படுத்தப்பட்டன.

இப் பலிகள் அனைத்தும் பல வேளைகளில் இறைவனுக்கு நன்றி செலுத்துவதற்காகவே செலுத்தப்பட்டன.

**இணைப்பு 3**

பாடுகளின் பாதையிலே தேவ மகன் ஊர்வலமோ
பாவங்களின் பாரமெல்லாம் திருச்சிலுவை வடிவல்லவோ

மக்களுக்காய் இரங்கி நின்றார்
மக்கள் மனம் இரங்கவில்லை
பக்கமெல்லாம் பறந்ததம்மா
பார்த்த கண்கள் சிவந்ததம்மா

முடிதாங்கும் சிரசினிலே!
முள்தாங்கும் நிலையல்லவா
அணைத்திருக்கும் கரங்களுக்கு
பிணைந்திருக்கும் முடிவல்லவா

**வீட்டுச் சூழலில் :**

குடும்பத்தில் ஏனையோரின் துன்ப துயரங்களில் பங்கெடுங்கள்.

## பாடம் - 15

# தியாக வாழ்வின் முன்மாதிரிகை

**தேர்ச்சி 3.0** : அருளடையாளங்கள் வழியாக கிறிஸ்துவுடன் இணைந்து பெற்றுக்கொண்ட புதுவாழ்வுக்கு சான்று பகர்வர்.

**தேர்ச்சி மட்டம் 10.3.4** : தியாக வாழ்வின் முன்மாதிரிகையை தமது வாழ்வாக்கிக் கொள்வர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள் :**

- பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்களின் வாழ்க்கைக் கதை பற்றிய தகவல் அடங்கிய அறிக்கையொன்று தயாரிப்பர்.
- தமது பெற்றோரும் தியாக வாழ்வு வாழ்கின்றனரென்பதை ஏற்றுக்கொள்வர்.
- தயாரிக்கப்பட்ட அறிக்கையை ஆக்கபூர்வமாக முன்வைப்பர்.
- பிறரின் முன்னேற்றத்திற்காக தியாகத்துடன் செயற்படுவர்.
- எல்லோரையும் அன்பு செய்வர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- இணைப்பு 2 இல் உள்ள சம்பவத்தை ஆசிரியர் வாசிக்கும் போது மாணவர்கள் அதனை அவதானத்தோடு கேட்பதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுங்கள்.
- இதன் வழியாக கீழ்க்காணப்படும் கருத்துக்கள் வெளிக்கொணரக் கூடிய வகையில் கலந்துரையாடலை நடாத்துங்கள்.
  - அச் சம்பவத்தில் நடந்தவை
  - நண்பர்களுக்காகத் தமது வாழ்வை அர்ப்பணித்த பீடப் பணியாளர் சங்கத்தின் மாணவனைப் பற்றி
  - மாணவர்கள் அறிந்த வேறு சம்பவங்கள்

(15 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1 ஐப் பகிர்ந்தளியுங்கள்.
- கீழ்க் காணப்படும் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள தியாக வாழ்வின் கதை உள்ள புத்தகங்கள் ஒவ்வொன்றை ஒவ்வொரு குழுவுக்கும் பெற்றுக்கொடுங்கள்.
  - ○ முத்திப்பேறுபெற்ற திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர்
  - ○ முத்திப்பேறுபெற்ற அன்னை திரேசா
  - ○ புனித மாக்சி மில்லியன் கோல்பே
  - ○ அருட்பணி மைக்கல் ரொட்றிகோ அமதி
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(35 நிமிடங்கள்)

படி 3

- ஓவ்வொரு குழுவினரும் தமது செயற்பாடுகளின் இறுதி ஆக்கத்தை வகுப்பில் முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன்வரும் குழுவிற்கு முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கப் பூர்வமான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் முன் வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் (சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன்படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.

    - முத்திப்பேறுபெற்ற திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர்
        - பிறப்பு
        - ஆற்றிய பணி
        - வாழ்க்கையின் முக்கிய சம்பவங்கள்
        - நாம் கற்றுக்கொள்ளும் படிப்பினைகள்
    - முத்திப்பேறுபெற்ற அன்னை திரேசா
        - பிறப்பு
        - ஆற்றிய பணி
        - வாழ்க்கையின் முக்கிய சம்பவங்கள்
        - நாம் கற்றுக்கொள்ளும் படிப்பினைகள்
    - புனித மாக்சி மில்லியன் கோல்பே
        - பிறப்பு
        - ஆற்றிய பணி
        - வாழ்க்கையின் முக்கிய சம்பவங்கள்
        - நாம் கற்றுக்கொள்ளும் படிப்பினைகள்
    - அருட்பணி மைக்கல் ரொட்றிகோ
        - பிறப்பு
        - ஆற்றிய பணி
        - வாழ்க்கையின் முக்கிய சம்பவங்கள்
        - நாம் கற்றுக்கொள்ளும் படிப்பினைகள்

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- பொருத்தமான தியாக வாழ்வின் கதை உள்ள புத்தகம்
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

**குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்**

- நீங்கள் பெற்றுள்ள தியாக வாழ்வு தொடர்பான நூல்களை வாசியுங்கள்.
- அவற்றின் வழியாக வெளிவரும் கருத்துக்களையும், ஏனைய கருத்துக்களையும் உள்ளடக்கி அறிக்கையொன்றை தயாரியுங்கள்.
    - குழு 01 - அருளாளர் திருத்தந்தை இரண்டாம் யோண் பவுல்.
    - குழு 02 - அருளாளர் அன்னை திரேசா
    - குழு 03 - புனித மாக்சி மில்லியன் கோல்பே
    - குழு 04 - அருட்பணி மைக்கல் ரொட்றிகோ அமதி
  - தயாரிக்கப்பட்ட அறிக்கையை வகுப்பில் முன் வையுங்கள்.

**இணைப்பு 2**

**தியாக வாழ்வு பற்றிய ஒரு சம்பவம்**

ஒரு நாள் ஒரு பாடசாலையில் 9 ஆம் வகுப்பு மாணவர்கள் ஆசிரியருடன் சேர்ந்து, தம் பாடசாலையில் விழாவொன்றை முடித்து விட்டு, வீடு செல்ல ஆயத்தமாயினர். இம் மாணவர்களுள் மூவர் தம் நண்பர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றனர். அங்கு சென்ற அவர்கள், அருகில் இருந்த ஓர் ஆற்றில் நீராடச் சென்றனர். அவர்களுடன் ஆலயத்தின் பீடப் பரிசாரகர் ஒருவரும் இருந்தார். அவர் திறமையாக நீந்தக்கூடியவராக இருந்த போதும், நீராடச் செல்லவில்லை. அவர் அருகில் இருந்த ஒரு கல்லின் மேல் ஏறி தனது நண்பர்கள் நீராடுவதைப் பார்த்து இரசித்தார். திடீரென தமது நண்பர்கள் நீரில் மூழ்குவதை அவர் கண்டார். உடனே ஆற்றில் குதித்த அவர் தனது ஒரு நண்பரை தலை முடியினால் பிடித்துக் கொண்டு வந்து கரையில் விட்டு விட்டு மீண்டும் அடுத்த இரு நண்பர்களையும் காப்பாற்ற நீந்திச் சென்றார். அவர்கள் மரணபயத்தினால் அவரை தாவி அணைத்துக் கொண்டமையால் அவரும் நீரில் மூழ்கி தன் உயிரை நீத்தார். (உண்மைச் சம்பவம்)

**வீட்டுச் சூழலில் :**

புனிதர்களின் வாழ்க்கைக் கதைகளடங்கிய நூல்களை வாசிப்பதற்கும் இறுவட்டுகளைப் பார்ப்பதற்கும் ஊக்குவியுங்கள்.

## பாடம் - 16

## இறையன்பு

**தேர்ச்சி 4.0** : இறை கட்டளைகளைக் கடைப்பிடித்து அன்பாக வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 10.4.1** : முழு இருதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு ஆற்றலோடும் முழு மனதோடும் கடவுளாகிய ஆண்டவரை அன்பு செய்வர்.

**பாடவேளை** : 03

**கற்றல் பேறுகள் :**

- இறைவனின் அன்பு பற்றிய தகவல்களை கோவைப் படுத்துவர்.
- இறைவனுடைய பெயரை மரியாதையுடன் உச்சரிக்க வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வர்.
- இறைவனின் அன்புக்குப் பிரதி அன்பு காட்டும் விதத்தினை ஆக்கங்களாக முன் வைப்பர்.
- முழு இருதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு ஆற்றலோடும், முழு மனதோடும் இறைவனை அன்பு செய்வர்.
- ஒடுக்கப்பட்டவர்களை இறையன்பினால் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- இணைப்பு 2ஐ செயற்படுத்தி, பின்வரும் கருத்துக்கள் வெளிக்கொணரக் கூடிய வகையில் கலந்துரையாடலை நடாத்துங்கள்.
    - இறைவனது அன்பு அளவில்லாதது.
    - இறைவனே அன்பின் ஊற்றாவார்.
    - இறைவனின் அன்பு நிலையானதாகும்.
    - இறைவனின் அன்புக்கு நிபந்தனை இல்லை.
    - இறைவன் அன்புள்ளவர் என்பதால் மனிதனை உன்னதமாகப் படைத்துள்ளார்.
    - இறைவன் அன்புள்ளவர் என்பதால் இயேசுக் கிறிஸ்துவை இவ்வுலகிற்கு அனுப்பினார்.
    - இறைவன் மனித தேவைகள் அனைத்தையும் அன்பினால் முழுமையடையச் செய்கிறார்.
    - இறையன்பில் நிலைத்திருப்பதே கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படையாகும்.
    - இறையன்பில் மனிதன் என்றென்றும் நிலைத்திருக்க வேண்டும்.

(20 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1, 2 ஆகியவற்றை பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளைக் கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(55 நிமிடங்கள்)

படி 3

- ஓவ்வொரு குழுவினரும் தமது செயற்பாடுகளின் இறுதி ஆக்கத்தை வகுப்பில் முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன்வரும் குழுவிற்கு முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் முன் வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் (சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன்படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.

  - இறையன்பும் தேவபுண்ணியங்களும்
    - நம்பிக்கை
    - எதிர்நோக்கு
    - அன்பு
  - இறைவனுக்கு அன்பு செலுத்தக் கடைப்பிடிக்க வேண்டியவை
    - ஆராதனை
    - செபம்
    - பலி
    - வாக்குறுதி, நேர்த்தி
  - இறைவனின் பெயரை மரியாதையுடன் பயன்படுத்தலும், கிறிஸ்தவ பெயர்களை உபயோகிப்பதன் முக்கியத்துவமும்.
  - ஞாயிறு திருப்பலியின் முக்கியத்துவம்.
  - இறைவன் என்னை அன்பு செய்தது போல் நானும் இறையன்பில் நிலைத்திருக்க வேண்டும்.
  - இறையன்பில் நிலைத்திருக்க இறைக்கட்டளைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.
  - ஒரே இறைவனை மட்டும் ஆராதிக்க வேண்டும்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திருவிவிலியம் அல்லது புதிய ஏற்பாடு
- கத்தோலிக்க திருமறை 2087-2103, 2150-2199, 2178-2179
- டிமைன் தாள், மாக்கர் பேனா, பிரிஸ்ட்டல் அட்டை
- இணைப்பு 1, 2, 3

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

## இணைப்பு 1

### குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்

- உங்கள் குழுவுக்குத் தலைவர் ஒருவரை நியமியுங்கள். (முன்பு தலைவராக இருக்காத ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.)
- உங்கள் குழுவினர் பெற்ற ஆய்வுப் பத்திரத்தை, உங்கள் குழுவிலுள்ள அனைவருக்கும் கேட்கக்கூடிய வகையில், ஒருவர் உரத்து வாசியுங்கள்.
- அதிலுள்ள கருத்துக்களை குழுவிலுள்ள அங்கத்தவரோடு கலந்துரையாடுங்கள்.
- விளங்காத கருத்துக்களை விளங்கியவர்களிடம் கேட்டறியுங்கள்.
- நீங்கள் இச் செயற்பாட்டினூடாக கோவைப் படுத்திய விடயங்களை அடிப்படையாக் கொண்டு கீழக் காணப்படும் முன்வைப்புக்குத் தயாராகுங்கள்.
    - இறையன்பும், தேவபுண்ணியங்களும் (நம்பிக்கை, எதிர்நோக்கு, இறையன்பு)
    - இறைவனுக்கு அன்பு செலுத்துவதற்காகச் செய்ய வேண்டியவை (ஆராதனை, செபம், பலி, நேர்த்தி)
    - இறைவனின் பெயரை மரியாதையுடன் பயன்படுத்தலும், கிறிஸ்தவ பெயர்களை உபயோகிப்பதன் முக்கியத்துவமும்.
    - ஞாயிறு திருப்பலியின் முக்கியத்துவம்

## இணைப்பு 2

### உட்பிரவேசத்திற்கான உரையாடல்

(முற் பயிற்சியுடன் இவ்வுரையாடலை முன் வைப்பதற்கு இரு மாணவர்களைத் தயார்படுத்துங்கள்.)

ஜோசப் : மைக்கல் உனக்கு வேறு வேலை இல்லையா? தினமும் திருப்பலிக்குச் செல்கின்றாய், ஒவ்வொரு நாளும் வீட்டில் செபமும் கேட்கிறது.

மைக்கல் : ஐயா, அந்த பலத்தினால் தானே, மற்ற வேலைகள் எல்லாம் செய்கிறேன்.

ஜோசப் : எப்படி அவ்வாறு கூறுவது? என்னைப் பாருங்கள். நான் மற்றவர்களுக்கு இடையூறு இல்லாமல் வாழ்கின்றேன் தானே, ஆலயத்துக்குச் செல்லும் நேரத்தையும் எனது வேலைகளுக்கே பயன்படுத்துகின்றேன்.

மைக்கல் : இறையன்பு இல்லாமல் என்னால் ஒன்றும் முறையாக ஒழுங்காகச் செய்ய முடியாது ஐயா. நான் எவ்வளவு ஏழையாக இருந்த போதும் மகிழ்ச்சியோடு இருக்கின்றேன்.

ஜோசப் : சரி அப்படியானால், திருத்தந்தையின் பெயரைக் கூறுங்கள் பார்க்கலாம்.

மைக்கல் : எனக்குத் தெரியாது ஐயா!

ஜோசப் : எமது நாட்டில் மறை மாவட்டங்கள் எத்தனை உள்ளன?

மைக்கல் : அதுவும் எனக்குத தெரியாது ஐயா.

ஜோசப் : அப்படியானால் எமது ஆயரின் பெயரைச் சொல்லுங்கள் பார்க்கலாம்.

மைக்கல் : ஐயோ! ஐயா, இவை ஒன்றும் எனக்குத் தெரியாது.

ஜோசப் : உமக்கு சமயத்தைப் பற்றி என்ன தான் தெரியும். உம்மை கத்தோலிக்கர் என்று எவ்வாறு கூறுவது?

மைக்கல் : இவை ஒன்றும் எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் நன்றாகத் தெரியும்.

ஜோசப் : அது என்ன மைக்கல்? என்னையும் விட உமக்கு தெரிந்தது என்ன?

மைக்கல் : மரண தருவாயில் இருந்த எனது மகனை குணமாக்கியது இறைவன், எனக்குத் தினமும் கூலி வேலையென்றாலும் தருபவர் இறை தந்தை, எனது பசியைப் போக்குபவரும் இறை தந்தை, நாம் மகிழ்வோடும் ஒற்றுமையோடும் இருக்க அருள் மழை பொழிவதும் இறைவனே, நான் எக்கணமும் நிலையான அவ்வன்பை அனுபவிக்கின்றேன். எனது குழந்தைகளுக்கு கத்தோலிக்கப் பெயர்களை வைத்திருப்பதும் அதனாலேயே தான். அந்தப் பெயர்களிலும் பெரும் வல்லமை இருக்கு நான் நன்றாக அறிவேன். இதுவே இறைவனின் அளவற்ற அன்பு.

ஜோசப் : மைக்கல் உம்மிடமிருந்து நான் அறியாத அருமையான விடயங்களை அறிந்தேன். மிக்க நன்றி. என்னிடம் இல்லாத மகிழ்ச்சியை அறிந்துக் கொள்ள உதவினீர்.

## இணைப்பு 3

## ஆய்வுப் பத்திரம் தயாரிப்பதற்கான அறிவுரை

கத்தோலிக்க திருமறை இலக்கம் 2087-2103, 2150-2199, 2178-2179 ஆகியவற்றை வாசித்து, அதிலுள்ள கருத்துக்களை மாணவர்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் இலகுவான மொழியில் எழுதி ஆய்வுப் பத்திரத்தை தயார்படுத்துங்கள்.

**வீட்டுச் சூழலில் :**

- வீட்டில் செபிக்கும் இடத்தை மரியாதையுடன் வைத்திருங்கள்.
- ‘‘முழு இருதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு ஆற்றலோடும், முழு மனதோடும் இறைவனை அன்பு செய்வோம்.’’ என எழுதிய ஓர் அட்டையை அனைவருக்கும் தெரியும் வண்ணமாக வையுங்கள்.

# பாடம் - 17

## அன்பின் சமூகம்

**தேர்ச்சி 4.0** : இறை கட்டளைகளைக் கடைப்பிடித்து அன்பாக வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 10.4.2** : ஒருவருக்கொருவர் ஆழ்ந்த, முறிவுபடாத, அக்கறை உணர்வுடன் அன்பின் சமூகத்தை கட்டியெழுப்புவர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள் :**

- நான்காம் கட்டளைக்கேற்ப ஒவ்வொருவரினது பொறுப்புக்களையும் கடமைகளையும் கோவைப்படுத்துவர்.
- தமது பொறுப்புக்களைச் சரியாகச் செய்ய வேண்டுமென விவாதிப்பர்.
- நான்காம் கட்டளைக் கேற்ப கோவைப் படுத்திய கருத்துக்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.
- ஒருவரையொருவர் தொடர்ந்து, ஆழ்ந்த அக்கறையுடன் கவனிப்பர்.
- தலைவனும் பணியாளனுமாக செயலாற்றுவதற்கு, ஏனையோரையும் ஊக்குவியுங்கள்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- இணைப்பு 2 இன்படி செயற்பட்டு கீழ்க்காணப்படும் கருத்துக்கள் வெளிக்கொணரக் கூடிய வகையில் கலந்துரையாடலை நடாத்துங்கள்.
    - பெற்றோர் பிள்ளைகளுக்காகச் செய்பவை.
    - பிள்ளைகள் பெற்றோருக்காகச் செய்பவை.
    - நான்காம் கட்டளையை எழுதுதல்.

(15 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1, 2 இன் வழியாகத் தயாரிக்கப்பட்ட ஆய்வுப் பத்திரத்தையும் பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களைக் குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(35 நிமிடங்கள்)

படி 3

- ஒவ்வொரு குழுவினரும் தமது செயற்பாடுகளின் இறுதி ஆக்கத்தை வகுப்பில் முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன்வரும் குழுவிற்கு முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கப் பூர்வமான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் முன் வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் (சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன்படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.
    - அன்பின் சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காக ஏனையோரைத் தொடர்ந்து, ஆழமாக கவனிப்பதன் முக்கியத்துவம்
    - பிள்ளைகளின் பொறுப்புக்களும் கடமைகளும்
    - கிறிஸ்தவ பெற்றோரின் பொறுப்புக்கள்
    - அரச ஆட்சியாளர்களின் பொறுப்புக்கள்
    - நாட்டுப் மக்களின் பொறுப்புக்கள்

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- கத்தோலிக்க திருமறை 2214-2231, 2235-2243
- பாடல் எழுதப்பட்ட சுவரொட்டி
- டிமைன் தாள், மாக்கர் பேனா, பிரிஸ்ட்டல் அட்டை
- இணைப்பு 1, 2, 3

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினைக் கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

**குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்**

- உங்கள் குழுவுக்குத் தலைவர் ஒருவரை நியமியுங்கள். (முன்பு தலைவராக இருக்காத ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.)
- உங்கள் குழுவினர் பெற்ற ஆய்வுப் பத்திரத்தை, உங்கள் குழுவிலுள்ள அனைவருக்கும் கேட்கக்கூடிய வகையில், ஒருவர் உரத்து வாசியுங்கள்.
- அதிலுள்ள கருத்துக்களை குழுவிலுள்ள அங்கத்தவரோடு கலந்துரையாடுங்கள்.
- விளங்காத கருத்துக்களை விளங்கியவர்களிடம் கேட்டறியுங்கள்.
- நீங்கள் இச் செயற்பாட்டினூடாக கோவைப் படுத்திய விடயங்களை அடிப்படையாக் கொண்டு கீழ் காணப்படும் முன்வைப்புக்குத் தயாராகுங்கள். (கட்டுரை, பொது அறிவுப் போட்டி, சுவரொட்டி, நாடகம், தாளலயப்பாட்டு, செருகல் அட்டை ஆகிய முறைகளைப் பயன்படுத்தலாம்.)
    - பிள்ளைகளின் பொறுப்புக்கள்
    - பெற்றோரின் பொறுப்புக்கள்
    - அரச ஆட்சியாளர்களின் பொறுப்புக்கள்
    - மக்களின் பொறுப்புக்கள்

## இணைப்பு 2

### உட்பிரவேசத்திற்கான பாடல்

(சுவரொட்டி, ஒலிநாடா, இறுவட்டு என்பவற்றைப் பயன்படுத்தி சொற்கள், தாளம் என்பவற்றோடு இப் பாடலை கேட்பதற்கும், பாடுவதற்கம் மாணவர்களை ஈடுபடுத்துங்கள்.)

இன்னமுதூட்டி எனை வளர்த்த அம்மா
எந்த வேளையிலும் அவள் என்னோடு கண்விழிப்பாள்
என்ன துன்பத்திலும் என்னோடு பங்கெடுப்பாள்
என் தேவனே எந்தன் அன்பு அன்னையைக் காத்திடுவாய்

வியர்வை சிந்தி என்னை வளர்த்திட உழைப்பார்
எனது வாழ்வு சிறந்திட உயிர்த் தியாகம் செய்திடுவார்
எனது எதிர்காலம் ஒளிமயமாக்கும்
என் தேவனே எந்தன் அன்பு தந்தையைக் காத்திடுவாய்

## இணைப்பு 3

### ஆய்வுப் பத்திரம் தயாரிப்பதற்கான அறிவுரை

கத்தோலிக்க திருமறை இலக்கம் 2214-2231, 2235-2243 ஆகியவற்றை வாசித்து, அதிலுள்ள கருத்துக்களை மாணவர்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் இலகுவான மொழியில் எழுதி ஆய்வுப் பத்திரத்தை தயார்படுத்துங்கள்.

**வீட்டுச் சூழலில் :**

தினமும் காலையில் ‘‘கடவுள் துணை’’ எனக்கூறி, பெற்றோரை பிள்ளைகளுக்கு முத்தங்கொடுத்து அணைப்பதற்கு ஊக்கப்படுத்துங்கள்.

## பாடம் - 18

# மனித மாண்பினைப் பேணுவோம்

**தேர்ச்சி 4.0** : இறை கட்டளைகளைக் கடைப்பிடித்து அன்பாக வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 10.4.3** : இறை உருவாகவும், சாயலாகவும் படைக்கப்பட்ட மனிதனின் உயிரைப் பாதுகாக்கத் தம்மை அர்ப்பணிப்பர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- ஐந்தாம் கட்டளைக்கு ஏற்ப நிறைவேற்ற வேண்டியனவும் அதற்கு எதிரானவற்றையும் அட்டவணைப்படுத்துவர்.
- மனித உயிர் இறைவனுக்கு மட்டும் சொந்தமானது என்பதை ஏற்றுக் கொள்வர்.
- ஐந்தாம் கட்டளைக்கேற்ப கோவைப்படுத்திய கருத்துக்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.
- மனித உயிரை மதிப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- இணைப்பு 2 ஐச் செயற்படுத்தி கீழ்க் காணப்படும் கருத்துக்கள் வெளிக்கொணரக் கூடிய வகையில் கலந்துரையாடலை நடாத்துங்கள்.
  - பாடலினூடாகப் பெறும் செய்திகள்.
  - படைப்புகளுள் உன்னதப் படைப்பு மனிதனாவான்.
  - மனிதன் இறைச் சாயலாகப் படைக்கப்பட்டான்.
  - இதனாலேயே மனித வளத்தைப் பாதுகாக்க வேண்டும்.
  - ''உயிரை அழிக்க வேண்டாம்'' என்பது ஐந்தாம் கட்டளையில் கூறப்பட்டுள்ளது.

(25 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1, 3 இன் வழியாகத் தயாரிக்கப் பட்ட ஆய்வுப் பத்திரத்தையும் பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களைக் குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(50 நிமிடங்கள்)

படி 3

- ஒவ்வொரு குழுவினரும் தமது செயற்பாடுகளின் இறுதி ஆக்கத்தை வகுப்பில் முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன்வரும் குழுவிற்கு முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் (சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன்படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.

  - மனிதனின் உன்னதத் தன்மை
    - இறைச் சாயலாக படைத்துள்ளமை - (தொடக்க நூல் 1: 27-28)
    - உயிர் மூச்சை பெறுதல் - (தொடக்க நூல் 2:7)
  - வாழ்வை மதிப்பதன் முக்கியத்துவம் (க.தி.ம.2259-2262)
  - மதுபானம், போதைவஸ்து, புகைத்தல் (க.தி.ம. 2288-2291) ஆகியவற்றை தவிர்க்க வேண்டும்.
  - ஐந்தாம் கட்டளைக்கு எதிராகச் செயற்படும் சந்தர்ப்பங்கள்
    - மனித கொலை, இனப்படுகொலை, கற்பழித்தல், தற்கொலை, உடல் உள வதைகள், சிறைப்படுத்துதல், நாடு கடத்தல், பெண்களையும் சிறுவர்களையும் விற்றல், விபசாரம், அடிமைத்தனம், உழைப்பைச் சுரண்டுதல், நற்பெயரைக் கெடுத்தல்.
  - கருக்கலைப்பு (க.தி.ம. 2270-2275)
  - தற்கொலை (க.தி.ம. 2280-2283)
  - மனித உயிர் இறைவனுக்கு மட்டும் சொந்தமானது.
  - எல்லாவற்றையும் பொறுமையோடு ஏற்று இறை சித்தத்திற்கு கீழ்ப்படிய வேண்டும்.
  - மனித வளங்களைப் பாதுகாக்க உண்மையான கிறிஸ்தவனாக அர்ப்பணிப்போடு செயற்பட வேண்டும்.

(25 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- பெரிய குறிப்பிடம் 373, 379 - 384
- திருவிவிலியம் (தொடக்க நூல் 1:27-28, 2:7)
- கத்தோலிக்கத் திருமறை 2259-2262, 2270-2275, 2280-2283, 2288-2291
- பாடல் எழுதப்பட்ட சுவரொட்டி, இறுவட்டு, பாடல் புத்தகம்
- பிரிஸ்டல் அட்டை, டிமைன் தாள், பிளாற்றினம் பேனா
- இணைப்பு 1, 2, 3

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

**குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்**

- உங்கள் குழுவுக்குத் தலைவர் ஒருவரை நியமியுங்கள். (முன்பு தலைவராக இருக்காத ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.)
- உங்கள் குழுவினர் பெற்ற ஆய்வுப் பத்திரத்தை, உங்கள் குழுவிலுள்ள அனைவருக்கும் கேட்கக்கூடிய வகையில், ஒருவர் உரத்து வாசியுங்கள்.
- அதிலுள்ள கருத்துக்களை குழுவிலுள்ள அங்கத்தவரோடு கலந்துரையாடுங்கள்.
- விளங்காத கருத்துக்களை விளங்கியவர்களிடம் கேட்டறியுங்கள்.
- நீங்கள் இச் செயற்பாட்டினூடாக கோவைப் படுத்திய விடயங்களை அடிப்படையாக் கொண்டு கீழ் காணப்படும் முன்வைப்புக்குத் தயாராகுங்கள். (கட்டுரை, பொது அறிவுப் போட்டி, சுவரொட்டி, நாடகம், தாளலயப்பாட்டு, செருகல் அட்டை ஆகிய முறைகளைப் பயன்படுத்தலாம்.)

## இணைப்பு 2

## குழு ஆய்வுப் பத்திரம்

(குறிக்கப்பட்ட சுவரொட்டியைக் காட்சிப்படுத்தி, ஒலிநாடா அல்லது இறுவட்டு ஆகியவற்றை பயன்படுத்தி சொற்கள் பிழையின்றி தாளத்தோடு பாடுங்கள்.)

**பாடல்**

ஆண்டவர் எனதாயன்
எனக்கு வேண்டிய தொன்றுமில்லை

ஆண்டவர் எனது ஆயன் - எனக்கு
வேண்டிய தொன்றும் இல்லை
பசும்புல் மேய்ச்சல் நிலத்தில் - என்னைப்
படுக்கச் செய்கின்றாரே - என்னைப்
படுக்கச் செய்கின்றாரே

காரிருட் கணவாயில் நான் நடந்தும்
தீமையெதற்கும் அஞ்சேன்
ஏனெனில் நீரென்னோடிருக்கையில் - உம்
தண்டும் கோலும் தேற்றும் - உம்
தண்டும் கோலும் தேற்றும்

## இணைப்பு 3

## குழு ஆய்வுப் பத்திரம்

இறைவனின் படைப்புகளுள் உன்னத படைப்பு மனிதன்.

- மனிதன் இறைவனின் உருவிலும் சாயலிலும் படைக்கப்பட்டுள்ளான் (தொடக்க நூல் 1: 27-28)
- மனிதனின் நாசிகளில் உயிர்மூச்சை ஊத அவன் உயிருள்ளவன் ஆனான். (தொடக்க நூல் 2:7)
- வேறு எந்தவொரு படைப்புக்கும் இவ்வாறான மகத்துவ நிலை கிடையாது.

ஆகவே நாம் அனைவரும் இறைவனின் உயர்ந்த படைப்பைப் பாதுகாத்து மதிக்க வேண்டும்.முதலில் நாம் நமது உயிரைப் பாதுகாக்க வேண்டும். மதுபானம், போதைவஸ்து என்பனவற்றைப் பாவிப்பதனால் எமது உயிர் படிப்படியாக அழிவை நோக்கிச் செல்கின்றது. எனவே நாம் எமக்குள்ள இறை உருவையும் சாயலையும் அழித்துக்கொள்கிறோம். உயிர் மூச்சை நாம் எம்மிடமிருந்து அகற்றிக்கொள்கிறோம். போதை வஸ்து பாவிப்பதானது, மதுபானத்தையும், புகைபிடித்தலையும் விட மிக விரைவாக அழிவின் வாயிலை நோக்கிப் பயணிக்கின்றது. மதுபானத்துக்கும், புகைப்பிடித்தலுக்கும் ஒரே முறையில் அடிமையாகாவிடினும், போதைவஸ்தைப் பாவித்த ஒருவருக்குத் தொடர்ந்தும் அது தேவைப்படுகிறது. ஆகவே மதுபானம், புகைபிடித்தல் போன்று போதைவஸ்தையும் முழுமையாகக் கைவிட வேண்டும். வாடகை வீட்டின் உரிமை வாடகைக்கு எடுத்தவருக்கல்ல, வீட்டுச் சொந்தக்காரனுக்கே உரியதாகும். ஆகவே வாடகைக்கு இருப்பவருக்கு வீட்டை அழகாக, ஒழுங்காக வைத்திருக்கவே அனுமதியுள்ளதுடன் அதனை உடைத்து நாசம் செய்வதற்கு எவ்வித உரிமையும் இல்லை. இவ்வாறே இறைவன் எமக்களித்த உயிரும் நாம் வாடகைக்கு எடுத்தது போன்றது. இதன் உரிமையாளர் இறைவன். இறைவனுக்குரித்தான இவ்வுயிரை நாம் கவனமாய்ப் பேணி பாதுகாத்து, வளர்த்து மீண்டும் இறைவனிடம் கையளிக்க வேண்டும். “ உன்னை நீ அன்பு செய்வது போல் உன் அயலானை நீ அன்பு செய்வாயாக” என இயேசு கிறிஸ்து கூறியுள்ளார். தனது உயிரை அன்பு செய்தல் முதலாவது நிபந்தனையாகும். இந் நிபந்தன்னயை மீறினால் சகோதரனுக்கு அன்பு செய்ய எம்மால் முடியாது. எனவே எமது உயிரை நாசம் செய்வதற்கு எமக்கு எந்தவித உரிமையும் கிடையாது.இறைவன் இறைவாக்கினர் எரேமியாவை அழைக்கும் போது “தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கு முன்பே அறிந்திருந்தேன். நீ பிறக்கு முன்பே உன்னைத திருநிலைப்படுத்தினேன்.” எனக் கூறினார். (எரேமியா 1:5) இதனைப் போன்று இறைவன் தாய் வயிற்றில் உருவாவதற்கு முன்பே எல்லோரையும் அறிந்துள்ளதோடு, திருநிலைப்படுத்தியும் உள்ளார். எனவே தாயின் கருவறையில் உள்ள விந்துக்களை(கருவை) அழிப்பது இறைவிருப்பத்திற்கு புறம்பான தமது குறுகிய நோக்கினை நிறைவேற்றும் செயலாகும்.

**ஐந்தாம் கட்டளைக்கு எதிராகச் செயற்படும் சந்தர்ப்பங்கள் :**

மனித படுகொலை, இனப் படுகொலைகள், தற்கொலை, உடல் - உள வதைகள், அநீதியான முறையில் சிறையிலிடுதல், நாடுகடத்தல், பெண்களையும் குழந்தைகளையும் விற்பனை செய்தல், விபசாரம், அடிமைத்தனம், வேதனத்திற்கு மிஞ்சிய வேலைகளைச் செய்வித்தல், நற்பெயரைக் கெடுத்தல்.

**வீட்டுச் சூழலில் :**

இறை சாயலுடைய பிற உயிர்களைக் கவனியுங்கள், மதிப்பளியுங்கள்.

# பாடம் - 19

## தூய உள்ளத்தோர் பேறுபெற்றோர்

**தேர்ச்சி 4.0** : இறை கட்டளைகளைக் கடைப்பிடித்து அன்பாக வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 10.4.4** : உடலாலும் உள்ளத்தாலும் தூய்மையாக வாழ்வர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- 6ம், 9ம் கட்டளைகளின் படி எவ்வாறு வாழவேண்டுமென்பதை கோவைப்படுத்துவர்.
- 6ம், 9ம் கட்டளைகளைப் கடைப்பிடிக்க மனதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வர்.
- 6ம், 9ம் கட்டளைகளுக்கேற்ப வாழும் முறையை ஆக்கமொன்றினால் முன்வைப்பர்.
- தூய்மையாக வாழ்வர்.
- பிறர் தூய்மையான வாழ்வு வாழ உதவுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- இணைப்பு 2ஐச் செயற்படுத்தி கீழ்க் காணப்படும் கருத்துக்கள் வெளிக்கொணரக் கூடிய வகையில் கலந்துரையாடலை நடாத்துங்கள்.
  - புனித மரியா கொறற்றியின் வாழ்க்கை வரலாறு தூய்மைக்கு ஓர் எடுத்துகாட்டாக அமைகின்றது.
  - ‘‘தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர்’’ எனத் திருவிவிலியம் கூறுகின்றது.
  - முறை தவறிய உறவுகளை மேற்கொள்ள வேண்டாம், பிறர் தாரத்தை விரும்ப வேண்டாம் என ஆறாம், ஒன்பதாம் கட்டளைகள் கூறுகின்றன.
  - உடலாலும் உள்ளத்தாலும் தூய்மையாக வாழ முடியும்.
  - உடலானது நன்மையைச் செய்வதற்கன்றோ, தீயதை செயவதற்கல்ல.

(15 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1, 3 இன் வழியாகத் தயாரிக்கப் பட்ட ஆய்வுப் பத்திரத்தையும் பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(50 நிமிடங்கள்)

படி 3

- ஓவ்வொரு குழுவினரும் தமது செயற்பாடுகளின் இறுதி ஆக்கத்தை வகுப்பில் முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன்வரும் குழுவிற்கு முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும் / வெண் பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் (சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன்படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.

    - கற்பு
    - தூய்மைக்கு எதிரான செயல்கள்
        - மோகம்
        - சுய இன்ப அனுபவித்தல்
        - தகாத காம உறவு
        - விபச்சாரம்
        - கற்பழிப்பு
        - ஓரினச் சேர்க்கை
        - திருமண உடன்படிக்கையை மீறுதல்
        - தகாத படங்கள் பார்த்தல், பாலுணர்வைத் தூண்டக்கூடிய நூல்களைவாசித்தல், தகாத சொற்பிரயோகம்.
    - ஆறாம் ஒன்பதாம் கட்டளைகளுக்கேற்ப நடந்தால் தூய்மையான உள்ளத்தைப் பெறலாம்.
    - அதனூடாக பேறு பெற்றவராகலாம்.
    - தூய உள்ளத்தைப் பெறத் தடையாக இருக்கும் செயற்பாடுகள்.
        - தகாத படங்கள் பார்த்தல், பாலுணர்வைத் தூண்டக்கூடிய நூல்களைவாசித்தல், தகாத சொற்பிரயோகம்.
    - பாவ எண்ணங்களைக் கொண்டவர்களைத் தூய்மையான வாழ்க்கை நிலைக்கு மாற்றலாம்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- கத்தோலிக்கத் திருமறை 2337-2345, 2351-2359, 2364-2365
- புனிதர்களின் வாழ்க்கை வரலாறு உள்ள நூல் (மரியா கொரற்றி)
- இணைப்பு 1, 2, 3

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

**குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்**

- உங்கள் குழுவுக்குத் தலைவர் ஒருவரை நியமியுங்கள். (முன்பு தலைவராக இருக்காத ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.)
- உங்கள் குழுவினர் பெற்ற ஆய்வுப் பத்திரத்தை, உங்கள் குழுவிலுள்ள அனைவருக்கும் கேட்கக்கூடிய வகையில், ஒருவர் உரத்து வாசியுங்கள்.
- அதிலுள்ள கருத்துக்களை குழுவிலுள்ள அங்கத்தவரோடு கலந்துரையாடுங்கள்.
- விளங்காத கருத்துக்களை விளங்கியவர்களிடம் கேட்டறியுங்கள்.
- நீங்கள் இச் செயற்பாட்டினூடாக கோவைப்படுத்திய விடயங்களை அடிப்படையாக் கொண்டு கீழ்க்காணப்படும் முன்வைப்புக்குத் தயாராகுங்கள். (கட்டுரை, பொது அறிவுப் போட்டி, சுவரொட்டி, நாடகம், தாளலயப்பாட்டு, செருகல் அட்டை ஆகிய முறைகளைப் பயன்படுத்தலாம்.)

## இணைப்பு 2

## உட்பிரவேசத்திற்கான புனிதரின் வரலாறு

## புனித மரியா கொறற்றி

(புனித மரியா கொறற்றியின் வாழ்க்கை வரலாற்றை ஒரு கதையாக மாணவர்களுக்கு கூறுங்கள்.)

- இத்தாலியில் ஆறகோத்தா பிராந்தியத்தில் கொரினால்டோ கிராமத்தில் வாழ்ந்த லுயிஜி கொறற்றி அசுந்தா கர்லினி ஆகியோரின் மூன்றாம் மகளாக 1890 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 16 ஆம் திகதி பிறந்தார்.

- ஏழ்மை காரணமாக தமது கிராமத்தை விட்டு வேலை தேடி உரோமாபுரிக்கு போனர்கள். அங்கே காணிகள் பல தம்வசமிருந்த ஒரு செல்வந்தரிடம் வேலை செய்து அவரது வீட்டிற்கருகே இருந்த கட்டிடத்தில் வாழ்ந்தனர். ஒரே சமையலறையில் சமைத்தனர். சில காலங்களுக்குப் பின் மலேரியா காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு தந்தை இறந்தார்.

- தனது படிப்பினையும் கைவிட்டு விட்டு கொறற்றி தாய்க்கு உதவினார். வீட்டில் தனியாக இருந்த வேளையில் வீட்டுரிமையாளரின் மகனான அலெக்சாண்டர் அவரைப் பாவத்திற்கு ஈர்க்க முயற்சி செய்தார். தனது 12 வயதில் நற்கருணை அருட்சாதனத்தைப் பெற்ற அவர், பாவச் செயலில் ஈடுப்பட்டு முழு ஆன்மாவையும் அழித்துக் கொள்வதைவிட தன் வாழ்க்கையை அழித்துக் கொள்வது மேல் என நினைத்து, அவனின் ஆசைக்கிணங்காமையால் மரணத்தை தழுவ நேரிட்டது.

- 14 கத்திக் குத்துகளைப் பெற்ற அவர், பலவீனமான நிலையில் இருக்கையில் அயலவர்கள் அவரைச் சூழ்ந்தனர். அப்போது அவர், ''நான் அலெக்சான்டரை மன்னிக்கிறேன்'' என்று கூறினார்.

- மரணத்தருவாயில் அவருக்கு நோயில் பூசுதல், நற்கருணை அருட்சாதனங்களைப் பெறும் வாய்ப்பும் கிட்டியது. 1802 ஆம் ஆண்டு ஆடி மாதம் 06 ஆம் திகதி அவர் இறைபதமடைந்தார்.அவரது உடல் அழியாமல் இருப்பதுடன் 1950 ஆம் ஆண்டு ஆனி மாதம் 25 ஆம் திகதி அவர் புனிதையாக உயர்த்தப்பட்டார்.

## இணைப்பு 3

கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி இலக்கம் 2337-2345, 2351-2359, 2364-2365 ஆகியவற்றை வாசித்து, அதிலுள்ள கருத்துக்களை மாணவர்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் இலகுவான மொழியில் எழுதி ஆய்வுப் பத்திரத்தை தயார்படுத்துங்கள்.

**வீட்டுச் சூழலில் :**

தகாத படங்கள், பாலுணர்வைத் துண்டக் கூடிய நூல்கள் ஆகியவற்றை தவிர்க்கவும், திருமண உடன்படிக்கைகளுக்கு பிரமாணிக்கமாக வாழுங்கள்.

## பாடம் - 20

## தனியார் உடைமைகள் விண்ணரசுக்காக

**தேர்ச்சி 4.0** : இறை கட்டளைகளைக் கடைப்பிடித்து அன்பாக வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 10.4.5** : தேசிய, சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக விளங்குகின்ற மனித வளங்களை அபிவிருத்தியடையச் செய்யும் போது தனியார் சொத்துக்களைச் செயற்திறன் மிக்க வகையில் பயன்படுத்துவர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள் :**

- தனியார் உடைமைகள் பற்றிய திருச்சபையின் படிப்பினைகளைக் கோவைப்படுத்துவர்.
- மனிதன் உடைமைகளுக்காக அல்ல, மனிதனுக்குப் பணியாற்றவே இறைவன் இவற்றைப் பெற்றுக் கொடுத்துள்ளார் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- திருச்சபையின் படிப்பினைகளுக்கேற்ப தனியார் உடைமைகளை உரிய முறையில் பயன் படுத்தலும் அவற்றின் தீய விளைவுகள் பற்றியும் ஆக்கமொன்றை முன் வைப்பர்.
- தனியார் உடைமைகளைப் பயன்படுத்தும் போது, பொது நலத்தோடு செயற்படுவர்.
- தனியார் உடைமைகளால் பிறருக்கு உதவி செய்வர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- இணைப்பு 2ஐக் காட்சிப்படுத்தி அங்குள்ள ஒவ்வொரு தலைப்புகளையும், ஒவ்வொரு மாணவருக்கும் உரத்து வாசிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்னர் அவற்றினூடாக மீறப்படும் கட்டளைகளைக் கேட்டறிந்து, பின்வரும் கருத்துக்கள் வெளிக்கொணரக்கூடிய வகையில் கலந்துரையாடலை நடாத்துங்கள்.
    - ஏழாம் கட்டளை - களவு செய்யாதே
    - பத்தாம் கட்டளை - பிறர் உடமைகளை விரும்பாதே
    - இக்கட்டளைகளுக்கிணங்க செய்ய வேண்டியவை, செய்யத்தகாதவை

(10 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1, 3 இன் வழியாகத் தயாரிக்கப்பட்ட ஆய்வுப் பத்திரத்தையும் பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களைக் குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(15 நிமிடங்கள்)

படி 3

- ஓவ்வொரு குழுவினரும் தமது செயற்பாடுகளின் இறுதி ஆக்கத்தை வகுப்பில் முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன் வரும் குழுவுக்கு, முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்க பூர்வமான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் முன் வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கரும் / வெண் பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் (சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன்படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.
    - தனியார் உடைமைகள் பற்றிய திருச்சபையின் படிப்பினைகள்.
    - பிறர் உடைமைகளைப் பாதுகாக்க வேண்டும்.
    - ஏழைகளுக்கு உதவிசெய்தல் கிறிஸ்தவ கடப்பாடாகும்.

(15 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திருவிவிலியம் / புதிய ஏற்பாடு (யோவான் 3: 17)
- கத்தோலிக்கத் திருமறை 2402-2406, 2408-2414, 2443-2449, 2534
- பாடல் எழுதப்பட்ட சுவரொட்டி, இறுவட்டு, பாடல் புத்தகம்
- பிரிஸ்டல் அட்டை, டிமைன் தாள், பிளாற்றினம் பேனா
- இணைப்பு 1, 2, 3

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

**குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்**

- உங்கள் குழுவுக்குத் தலைவர் ஒருவரை நியமியுங்கள். (முன்பு தலைவராக இருக்காத ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.)
- உங்கள் குழுவினர் பெற்ற ஆய்வுப் பத்திரத்தை, உங்கள் குழுவிலுள்ள அனைவருக்கும் கேட்கக்கூடிய வகையில், ஒருவர் உரத்து வாசியுங்கள்.
- அதிலுள்ள கருத்துக்களை குழுவிலுள்ள அங்கத்தவரோடு கலந்துரையாடுங்கள்.
- விளங்காத கருத்துக்களை விளங்கியவர்களிடம் கேட்டறியுங்கள்.
- உங்கள் குழு வாசித்து கோவைப் படுத்திய விடயங்களை அடிப்படையாக் கொண்டு கீழ் காணப்படும் கருத்துக்களுக்கமைய முன்வைப்பொன்றுக்குத் தயாராகுங்கள்.
    - தனியார் உடமைகள் பற்றிய திருச்சபையின் படிப்பினைகள்
    - பிறர் உடமைகளைப் பாதுகாத்தல்

**இணைப்பு 2**

ஏழாம், பத்தாம் கட்டளைகளை மீறுதல் தொடர்பான பத்திரிகைத் தலைப்புகளடங்கிய சுவரொட்டி

**இணைப்பு 3**

கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி இலக்கம் 2402-2406, 2408-2414, 2443-2449, 2534, யோவான் 3: 17 ஆகியவற்றை வாசித்து, அதிலுள்ள கருத்துக்களை மாணவர்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் இலகுவான மொழியில் எழுதி ஆய்வுப் பத்திரத்தை தயார்படுத்துங்கள்.

**வீட்டுச் சூழலில் :**

உங்களால் இயன்ற போதெல்லாம் ஏழைகளுக்கு உதவிச் செய்யுங்கள்.

## பாடம் - 21

## நேர்மையான வாழ்வு

**தேர்ச்சி 4.0** : இறை கட்டளைகளைக் கடைப்பிடித்து அன்பாக வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 10.4.6** : உண்மைக்குச் சான்று பகர்ந்து நேர்மையாக வாழ்வு வாழ்வர்.

**பாடவேளை** : 01

**கற்றல் பேறுகள்** :

- நிறை உண்மையுள்ள சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்காக பங்களிப்புச் செய்யக்கூடிய விதத்தினைப்பற்றி தகவல்களை கோவைப்படுத்துவர்.
- எப்பொழுதும் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வர்.
- கோவைப் படுத்திய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.
- உண்மைக்குச் சான்று பகர்வர்.
- பிறருடைய இரகசியங்களைப் பேணுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- இணைப்பு 2இன் படி முற் பயிற்சியுடன் வகுப்பின் முன்னிலையில் நடித்துக் காட்டுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். கீழ்க் காணப்படும் கருத்துக்களை வெளிக் கொணரக் கூடியதாக கலந்துரையாடலை நடாத்துங்கள்.
    - எட்டாம் கட்டளை - பொய் சாட்சி சொல்லாதிருப்பாயாக
    - அக்கட்டளைக்கேற்ப செய்ய வேண்டியவை செய்யத் தகாதவை

(10 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1 ஐப் பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களைக் குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(15 நிமிடங்கள்)

படி 3

- ஒவ்வொரு குழுவினரும் தமது செயற்பாடுகளின் இறுதி ஆக்கத்தை வகுப்பில் முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன் வரும் குழுவுக்கு, முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கப் பூர்வமான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் முன் வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் (சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன்படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.
  - உண்மையுள்ளவர்களாக வாழ்வர்
  - உண்மைக்கு சான்று பகர்தல்
  - எட்டாம் கட்டளைக்கு எதிரான பாவங்கள்
  - இரகசியம் காப்பதன் முக்கியத்துவம்
  - உண்மைக்கு சான்று பகர தைரியத்துடன் முன்வரவேண்டும்.
  - உண்மையையும் நீதியையும் அடிப்படையாகக் கொண்ட சமூகத்தினால் இறையாட்சியை அனுபவிக்க முடியும்.
  - இறைவார்த்தையின் வழியாகவும் திருச்சபையின் படிப்பினைகள் வழியாகவும் எட்டாம் கட்டளை மேலும் பொருளுள்ளதாய் அமைகின்றது.

(15 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி இலக்கம் 2465-2487,2491
- பிறிஸ்டல் அட்டை, டிமைன் தாள், பிளாட்டினம் பேனா
- இணைப்பு 1, 2, 3

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

**குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்**

- உங்கள் குழுவுக்குத் தலைவர் ஒருவரை நியமியுங்கள். (முன்பு தலைவராக இருக்காத ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.)
- உங்கள் குழுவினர் பெற்ற ஆய்வுப் பத்திரத்தை, உங்கள் குழுவிலுள்ள அனைவருக்கும் கேட்கக்கூடிய வகையில், ஒருவர் உரத்து வாசியுங்கள்.
- அதிலுள்ள கருத்துக்களை குழுவிலுள்ள அங்கத்தவரோடு கலந்துரையாடுங்கள்.
- விளங்காத கருத்துக்களை விளங்கியவர்களிடம் கேட்டறியுங்கள்.
- நீங்கள் இச் செயற்பாட்டினூடாக கோவைப்படுத்திய விடயங்களை அடிப்படையாக் கொண்டு கீழ்க்காணப்படும் முன்வைப்புக்குத் தயாராகுங்கள். (கட்டுரை, பொது அறிவுப் போட்டி, சுவரொட்டி, நாடகம், தாளலயப்பாட்டு, செருகல் அட்டை ஆகிய முறைகளைப் பயன்படுத்தலாம்.)

## இணைப்பு 1

## உட்பிரவேசத்திற்கான உரையாடல்

(நீதிமன்றக் காட்சி)

முதலியார் : நீதிபதி அவர்கள் வருகிறார். நீதி மன்றம் அமைதியாகட்டும்.
(நீதியரசர் வருகிறார். எல்லோரும் எழுந்து நிற்கின்றனர்.)

முதலியார் : வழக்கு எண் 210. வாதியும் பிரதிவாதியும் முன்னே வாருங்கள்.

முதலியார் : கடந்த டிசெம்பர் மாதத்தில் 16ஆம் திகதி அந்தமான் தீவின் சுந்தரம் என்பவரின் கொலை தொடர்பாக வழக்கு விசாரணை இப்போது கேட்கப்படும்.

(பிரதிவாதிக்கு குற்றப்பத்திரிகை ஒப்படைக்கப்பட்டு நீதியரசர் பிரதிவாதியின் வழக்கறிஞரிடம் விசாரிக்கின்றார்.)

நீதிபதி : மேற்கூறப்பட்ட கொலையில் நீர் குற்றவாளியா? சுற்றவாளியா?

பிரதிவாதியின் வழக்கறிஞர் : சுற்றவாளி கனம் நீதிபதி அவர்களே

முதலியார் : சாட்சிக்காரர் முன்னே வாருங்கள்.

சாட்சி 1 : கனம் நீதிபதி அவர்களே, பிரதிவாதி மேசையின் மேல் இருந்த கத்தியால் குத்தினான். நான் எனது இரு கண்களாலும் கண்டேன்.

சாட்சி 2 : ஆண்டவரே, பிரதிவாதி இந்த மேசையின் மேல் இருக்கும் கத்தியால் குத்தினான். நானும் எனது இரு கண்களால் கண்டேன்.

நீதிபதி : சாட்சிகளின் படி பிரதிவாதி குற்றவாளி எனவே ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஒரு தினத்தில் இவரை தூக்கிலிட்டு கொலை செய்யும் படி கட்டளையிடுகிறேன்.

முதலியார் : நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவடைந்தன.

(சாட்சி 1, சாட்சி 2 ஐ நோக்கி நீதிமன்றத்திலிருந்து வெளியேறும்போது இவ்வாறு கூறுகிறார்.)

சாட்சி 1 : நாமிருவரும் சொன்ன பொய்ச்சாட்சியினால் எமக்கு ஒரு இலட்சப்படி கிடைக்கும் தானேடா!

## இணைப்பு 3

## ஆய்வுப் பத்திரம் தயாரிப்பதற்கான அறிவுரை

கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி இலக்கம் 2465-2487 ஆகியவற்றை வாசித்து, அதிலுள்ள கருத்துக்களை மாணவர்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் இலகுவான மொழியில் எழுதி ஆய்வுப் பத்திரத்தை தயார்படுத்துங்கள்.

**வீட்டுச் சூழலில் :**

குடும்பத்தில் ஒருவருக்கொருவர் நேர்மையுள்ளவர்களாக இருங்கள்.

## பாடம் - 22

# திருவழிபாட்டு ஆண்டு

**தேர்ச்சி 5.0** : செபத்தின் மூலம் ஊட்டம் பெற்று இறைவனுடனும் மனிதனுடனும் ஆழமான உறவை வளர்த்துக்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 10.5.1** : திருவழிபாட்டு ஆண்டினூடாக மறையுண்மைகளை நினைவுகூர்ந்து வாழ்வர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- திருவழிபாட்டு ஆண்டு பற்றிய தகவல்களை கோவைப்படுத்துவர்.
- திருவழிபாட்டு ஆண்டுச் சக்கரத்திலுள்ள திருநாட்களை பொருளுள்ள முறையில் நடாத்த வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வர்.
- திருவழிபாட்டு ஆண்டில் உள்ள திருநாட்களை அட்டவணைப்படுத்தி ஆக்கமாக முன்வைப்பர்.
- திருவழிபாட்டு ஆண்டிலுள்ள மறை உண்மைகளை பொருளுள்ள முறையில் கொண்டாடுவர்.
- குழுக்களுடன் அன்புடன் செயற்படுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- கத்தோலிக்க திருவழிபாட்டு ஆண்டைக் காட்டுகின்ற சுவரொட்டியை எல்லோருக்கும் தெரியும் படி காட்சிப்படுத்துங்கள்.
- அந்த சுவரொட்டியில் உள்ளவை பற்றி மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- கீழ்க்காணப்படும் கருத்துக்களை வெளிக்கொணரும்படியாக கலந்துரையாடலை நடத்துங்கள்.
  - திருவழிப்பாட்டு ஆண்டை திருச்சபையானது திருவருகைக்காலம், நத்தார் காலம், தவக்காலம், பாஸ்கா காலம், பொதுக்காலம் எனப் பிரித்துள்ளது.
  - திருவழிபாட்டு ஆண்டிலே அந்த அந்த காலத்துக்குக்குரிய நிறம் பயன்படுத்தப்படுகின்றது. (குரு அணியும் உடை, பீடத்தில் விரிக்கப்படும் விரிப்பு போன்றன)

(08 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் திருவிவிலியம் அல்லது புதிய ஏற்பாடு, இணைப்பு 1ஐப் பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களைக் குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(15 நிமிடங்கள்)

படி 3

- ஒவ்வொரு மாணவருக்கும் அல்லது ஒவ்வொரு குழுவினருக்கும் தமது செயற்பாடுகளின் இறுதி ஆக்கத்தை வகுப்பில் முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன் வரும் குழுவுக்கு, முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் முன் வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் (சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன்படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.
    - கிறிஸ்துவை தலையாகக் கொண்டதும் விசுவாசிகளை உறுப்புகளாகக் கொண்டதுமான கிறிஸ்துவின் மறையுடலின் வழியாக இறை தந்தைக்கு ஒப்புக் கொடுக்கப்படும் வழிபாடே திருவழிபாடாகும். (இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பொது வழிபாடு பற்றிய விதித்தொகுப்பு)
    - திருவழிபாட்டு ஆண்டுச் சக்கரத்தில் கிறிஸ்துவின் மீட்பு மறைபொருள் நினைவு கூரப்படுகின்றது.
    - திருவழிபாட்டு ஆண்டிலே ஒவ்வொரு காலம் பற்றிய சிறு விளக்கம்.
    - திருச்சபையினால் திருவழிபாட்டு ஆண்டின் ஐந்து காலங்களுக்கும் நாட்கள் குறிப்பிட்டு அவற்றுக்கேற்ப செபங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.
    - திருவழிபாட்டு ஆண்டுச் சக்கரத்திலுள்ள திருநாட்கள் நடாத்தப்பட வேண்டும்.
    - பங்கிலுள்ள திருவழிபாட்டுக் குழுவினரோடு திருவழிபாட்டில் செயற்பாட்டுடன் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

(15 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- கத்தோலிக்க திருவழிபாட்டு ஆண்டைக்காட்டுகின்ற சுவரொட்டிகள்
- கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி (இலக்கம் 1168, 1169)
- திருவழிபாடு பற்றிய விதித் தொகுப்பு (இலக்கம் 07)
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

## இணைப்பு 1

## குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்

- உங்கள் குழுவுக்குத் தலைவர் ஒருவரை நியமியுங்கள். (முன்பு தலைவராக இருக்காத ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.)
- உங்கள் குழுவினர் பெற்ற ஆய்வுப் பத்திரத்திலுள்ள திருவிவிலியப் பகுதியையும், ஏனைய கருத்துக்களையும் நன்றாக வாசியுங்கள்.
- அதிலுள்ள கருத்துக்களை குழுவிலுள்ள அங்கத்தவரோடு கலந்துரையாடுங்கள்.
- விளங்காத கருத்துக்களை விளங்கியவர்களிடம் கேட்டறியுங்கள்.
- நீங்கள் இச் செயற்பாட்டினூடாக கோவைப் படுத்திய விடயங்களை அடிப்படையாக் கொண்டு கீழ்க்காணப்படும் முன்வைப்புக்குத் தாயாராகுங்கள். (கட்டுரை, பொது அறிவுப் போட்டி, சுவரொட்டி, நாடகம், தாளலயப் பாட்டு, செருகல் அட்டை ஆகிய முறைகளைப் பயன்படுத்தலாம்)

## இணைப்பு 2

## ஆய்வுப் பத்திரம்

- திருச்சபையின் தாய் பாங்கான மறை பொருளை கொண்டாடுவதற்காக திருவழிபாட்டு செயற்பாடுகளில் உன்னத குருவான இயேசு கிறிஸ்து தமது பாங்கான மறைபொருளுக்கு எம்மை முழுதுமாக பங்கேற்க வைக்கின்றார். (திருவழிபாடுபற்றிய வெளியீடு இலக்கம் 07)
- கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி இலக்கம் 1168, 1169 வழியாக திருவழிபாட்டு ஆண்டு பற்றிய திருச்சபையின்படிப்பினைகளில் வெளியிட்டுள்ளது.
- பொதுவாக ஒரு வருடத்துக்கு 52 வாரங்கள் உள்ளது போன்று திருவழிபாட்டு ஆண்டுக்கும் உள்ளது. திருவழிபாட்டு ஆண்டு திருவருகைக் கால முதலாம் ஞாயிறு தினத்தில் ஆரம்பமாகிறது. இது கிறிஸ்து அரசர் திருவிழாவின் பின் வரும் சனிக்கிழமை முடிவடைகிறது.

| காலம் | நிறம் | நோக்கம் | தொடக்கம் | முடிவு |
|---|---|---|---|---|
| திருவருகைக் காலம் | ஊதா | இயேசுக்கிறிஸ்து மனுவுரு எடுத்தல், அவரின் இரண்டாம் வருகை மற்றும் எம் உள்ளங்களுக்கு அவரின் நிரந்தர வருகை ஆகியவற்றிற்கு எதிர்பார்த்து ஆயத்தமாகும் காலம். | கார்த்திகை மாதம் இறுதி ஞாயிறு அல்லது மார்கழி மாதம் முதல் ஞாயிறு. | நத்தார் தினத்துக்கு முதல் நாள் (மார்கழி 24) |
| நத்தார் காலம் | வெள்ளை | கிறிஸ்துவின் பிறப்பையும் இளமைக்காலத்தையும் ஞாபகப்படுத்துகிறோம். | நத்தார் திருநாள் அன்று (மார்கழி 25) | இயேசுவின் திருமுழுக்குத் திருநாளைக் கொண்டாடும் நாளுக்கு முன் ஞாயிறு வரை (திருக்காட்சி திருநாளுக்குப் பின் வரும் சனி) |

| | | | | |
|---|---|---|---|---|
| பொதுக்காலம் | பச்சை | இயேசுக்கிறிஸ்துவின் பகிரங்க வாழ்வு, அவர் செய்த அருங்குறிகள், குணமாக்குதல் மற்றும் போதனைகள் ஆகியவை நினைவுகூரும் காலம். | இயேசுவின் திருமுழுக்குத் திருநாள் | விபூதிப் புதனுக்கு முன் செவ்வாய்க் கிழமை |
| தவக்காலம் | ஊதா | கிறிஸ்து நோன்பிருந்த 40 நாட்களை ஞாபகப்படுத்துவதுடன் அவரது பாஸ்கா மறைபொருளைக் கொண்டாட ஆயத்தமாகுதல். மேலும் வளர்ந்தோரின் திருமுழுக்கு ஆயத்தத்திற்கான இறுதிக் காலம். | விபூதிப் புதன் | பரிசுத்த வாரத்தில் ஆண்டவரின் இறுதி இராப் போசனத்தை நினைவுகூரும் மாலை ஆராதனைக்கு முன் (பெரிய வியாழனன்று திருப் பலிக்கு முன்) |
| பாஸ்கா காலம் | வெள்ளை | இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு, சீடர்களுக்குத் தரிசனம் கொடுத்தல், அவரின் விண்ணேற்பு மற்றும் தூய ஆவியானவரின் வருகை ஆகியவற்றை ஞாபகப் படுத்துகின்றது. | பாஸ்கா ஞாயிறு (இயேசுக்கிறிஸ்து உயிர்த்த பெரு விழா) | பெந்தகோஸ்து |
| பொதுக்காலம் | பச்சை | இயேசுக்கிறிஸ்துவின் பகிரங்க வாழ்வு, அவர் செய்த அருங்குறிகள், குணமாக்குதல் மற்றும் போதனைகள் ஆகியவை நினைவுகூரும் காலம். | பெந்தக்கோஸ்து திருநாளுக்குப் பின் வரும் திங்கட்கிழமை | திருவருகைக் காலத்தின் முதலாவது ஞாயிற்றுக் கிழமைக்கு முன் சனிக் கிழமை |

## பாடம் - 23

# திருப்பலி

**தேர்ச்சி 5.0** : செபத்தின் மூலம் ஊட்டம் பெற்று இறைவனுடனும் மனிதனுடனும் ஆழமான உறவை வளர்த்துக்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 10.5.2** : திருப்பலியை கிறிஸ்தவ வாழ்வின் மையமாக்கிக் கொள்வர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள் :**

- திருப்பலியின் 4 பகுதிகளையும் கோவைப்படுத்துவர்.
- தகுந்த ஆயத்தத்தோடு திருப்பலியில் பங்கேற்க விருப்பத்தைத் தெரிவிப்பர்.
- திருப்பலியின் ஒவ்வொரு வழிபாட்டினதும் உப பிரிவுகள் பற்றி தயாரிக்கப்பட்ட அறிக்கையை ஆக்கங்களாக முன் வைப்பர்.
- திருப்பலியில் பக்தியோடு பங்கேற்பர்.
- குழுக்களின் பங்களிப்போடு செயற்பாடுகளில் ஈடுபடுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- ஞாயிறு திருப்பலிக்குச் செல்லும் குடும்பத்தின் படத்தைக் காட்சிப்படுத்தி படத்தில் என்ன காண்கிறீர்கள் எனக் கேட்டவாறே கீழ்க்காணப்படும் கருத்துக்களை வெளிக் கொணரக்கூடியதாக கலந்துரையாடலை நடத்துங்கள்.
  - திருவழிபாட்டில் உச்சமான வழிபாட்டு திருப்பலியாகும்.
  - எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் கடன் திருநாட்களிலும் தவறாது திருப்பலியில் பங்கேற்க வேண்டும். முழுத் திருப்பலியிலும் பங்கேற்க வேண்டும்.
  - குடும்பமாகத் திருப்பலியில் பங்கேற்க வேண்டியதன் முக்கியத்துவம்.

(18 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்தோ அல்லது பிரிக்காமலே இணைப்பு 1, 2 இல் உள்ள செயற்பாட்டுப் பத்திரத்தையும் திருவிவிலியம் அல்லது புதிய ஏற்பாட்டையும் கொடுங்கள்.
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன்படுத்தலாம்.

(30 நிமிடங்கள்)

படி 3

- ஒவ்வொரு குழுவினருக்கும் தமது செயற்பாடுகளின் இறுதி ஆக்கத்தை வகுப்பில் முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன் வரும் குழுவுக்கு, முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் முன் வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் (சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன்படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.

  - இறைவன் கிறிஸ்துவின் வழியாக நிறுவிய தூய உன்னத மறை பொருளே திருப்பலியாகும்.
  - ஆகையால் அதன் தூய்மையையும், மதிப்பையும், உண்மைத்தன்மையையும் பாதுகாப்பதற்கு நாம் கடப்பாடு உடையவர்களாவோம்.
  - திருப்பலியின் முக்கிய பகுதிகள் நான்காகும்.

    1. ஆரம்ப வழிபாடு
    2. இறைவார்த்தை வழிபாடு
    3. நற்கருணை வழிபாடு
    4. இறுதி வழிபாடு

(மேற்குறிப்பிட்ட நான்கு பிரிவுகளினதும் உப பிரிவுகளையும் எடுத்துக்கூறுங்கள்)

(32 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திருவிவிலியம் அல்லது புதிய ஏற்பாடு (லூக் 22:19-20)
- ஞாயிறு தின திருப்பலிக்குச் செல்லும் ஒரு குடும்பத்தின் பாடம்
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

**குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்**

- உங்கள் குழுவுக்குத் தலைவர் ஒருவரை நியமியுங்கள். (முன்பு தலைவராக இருக்காத ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.)
- உங்கள் குழுவினர் பெற்ற ஆய்வுப் பத்திரத்திலுள்ள திருவிவிலியப் பகுதியையும், ஏனைய கருத்துக்களையும் நன்றாக வாசியுங்கள்.
- அதிலுள்ள கருத்துக்களை குழுவிலுள்ள அங்கத்தவரோடு கலந்துரையாடுங்கள்.
- விளங்காத கருத்துக்களை விளங்கியவர்களிடம் கேட்டறியுங்கள்.
- நீங்கள் இச் செயற்பாட்டினூடாக கோவைப்படுத்திய விடயங்களை அடிப்படையாக் கொண்டு கீழ்க்காணப்படும் முன்வைப்புக்குத் தாயாராகுங்கள். (கட்டுரை, பொது அறிவுப் போட்டி, சுவரொட்டி, நாடகம், தாளலயப் பாட்டு, செருகல் அட்டை ஆகிய முறைகளைப் பயன்படுத்தலாம்)

## இணைப்பு 2

## ஆய்வுப் பத்திரம்

திருவழிபாடு கிறிஸ்தவ சபையின் உயிர் நாடியாகும். திருவழிபாட்டின் சிகரம் திருப்பலியாகும். திருப்பலியில் செயலாற்றலோடும் பக்தியோடும் பங்கேற்க வேண்டும். திருப்பலியின் பிரிவுகள் பின்வருமாறு:

1. ஆரம்பப் பிரிவு
    - வருகைப்பாடல்
    - வாழ்த்துரை
    - அறிமுகம்
    - மனத்துயர் வழிபாடு
    - ஆண்டவரே இரக்கமாயிரும்
    - வானவர் கீதம்
    - சபை மன்றாட்டு
2. இறைவார்த்தை வழிபாடு
    - முதலாம் வாசகம்
    - பதிலுரைப்பாடல்
    - இரண்டாம் வாசகம்
    - அல்லேலூயா புகழ் கீதம்
    - நற்செய்தி வாசகம்
    - மறையுரை
    - விசுவாசப் பிரமாணம்
    - விசுவாசிகளின் மன்றாட்டு
3. நற்கருணை வழிபாடு
    - காணிக்கைப் பவனி
    - காணிக்கை மீது மன்றாட்டு
    - புகழுரைப் பாடல்
    - நன்றி மன்றாட்டு
    - நன்றி மன்றாட்டின் இறுதியில் புகழுரை (great Amen)
    - திருவிருந்து
4. இறுதி வழிபாடு

**வீட்டுச் சூழலில் :**

திருப்பலியை ஒழுங்கு படுத்துவதற்கு வினைத்திறனுடன் செயலாற்றுங்கள்.

## பாடம் - 24

## உன்னத குருவின் செபம்

**தேர்ச்சி 5.0** : செபத்தின் மூலம் ஊட்டம் பெற்று இறைவனுடனும் மனிதனுடனும் ஆழமான உறவை வளர்த்துக்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 10.5.3** : கிறிஸ்தவ சபையின் ஒற்றுமைக்காகத் தம்மை அர்ப்பணிப்பர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள் :**

**(கீழ் காணும் கற்றல் பேறுகளின் வழியாகத் தயாராகுங்கள்.)**

- உன்னத குருவின் செபம் பற்றிய தகவல்களைக் கோவைப்படுத்துவர்.
- கிறிஸ்தவ சபைகளின் ஒருமைப்பாட்டிற்காகத் தம்மை அர்ப்பணிக்க வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வர்.
- கிறிஸ்தவ சபைகளின் ஒருமைப்பாடு பற்றிய ஆக்கமொன்றை முன்வைப்பர்.
- ஏற்றுக்கொள்ளப்பட்ட சபைகளின் ஒற்றுமைக்காக செயற்படுவர்.
- ஒரே சபையை கட்டியெழுப்புவதற்காக செயலாற்றுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- இயேசு செபிக்கும் விதத்தைக் காட்டும் படத்தைக் காட்சிப் படுத்துங்கள். படத்தில் உள்ளவர் யார்? ஏன்ன செய்கிறார்? எனக் கேட்டறிந்து கீழ்க்காணப்படும் கருத்துக்களை வெளிக்கொணரக் கூடியதாக கலந்துரையாடலை நடத்துங்கள்.
    - நாம் இறைவனின் பிள்ளைகளாதலல் எமது பெற்றோரோடு கதைப்பதை போன்று இறைவனோடும் நாம் கதைக்கலாம்.
    - இறைமகனாகிய இயேசு கிறிஸ்து எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இறைவனிடம் செபித்தார்.
    - செபம் கிறிஸ்தவ வாழ்வின் கட்டாயமான ஒரு செயலாக இருத்தல் வேண்டும்.

(18 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்தோ அல்லது பிரிக்காமலோ இணைப்பு 1, 2 இல் உள்ள செயற்பாட்டுப் பத்திரத்தையும் திருவிவிலியம் அல்லது புதிய ஏற்பாட்டையும் கொடுங்கள்.
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(32 நிமிடங்கள்)

படி 3

- ஒவ்வொரு குழுவினருக்கும் தமது செயற்பாடுகளின் இறுதி ஆக்கத்தை வகுப்பில் முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன் வரும் குழுவுக்கு, முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் முன் வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் (சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன்படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.

  - யோவான் 17 ஆம் அதிகாரத்தில் உன்னத குருவின் செபம் குறிப்பிடப்பட்டுள்ளது.
  - உன்னத குருவின் செபத்தில் இயேசு தனது தூதுப்பணியை முன்வைத்துள்ளார்.
  - உன்னத குருவின் செபம் 3 பகுதிகளைக் கொண்டதாகும்.
    - 1ம் பகுதி தனக்காக வேண்டுதல் (யோவா 17:1 – 5)
    - 2ம் பகுதி திருத்தூதர்களுக்காக வேண்டுதல் (யோவா 17:6-9)
    - 3ம் பகுதி எதிர்கால சபையின் ஒற்றுமைக்கான வேண்டுதல் (யோவா17:20–26)
  - கிறிஸ்தவ சபைகளின் ஒற்றுமைக்காகச் செயற்படுவதன் அவசியம்
  - ஏற்றுக்கொள்ளப்பட்ட சபைகள் 7 ஆகும்.
  - இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தில் ஒன்றிப்பு பற்றிக் கூறப்பட்டுள்ளது.
  - கிறிஸ்தவ சபைகளின் ஒற்றுமை ( ஒன்றிப்பு வாரம் -ஜனவரி 18-25)
  - ஒரே சபையைக் கட்டியெழுப்புவதே கிறிஸ்தவர்களாகிய எமது நோக்கமாகும்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- புதிய ஏற்பாடு (யோவான் 17 ஆம் அதிகாரம்)
- இயேசு செபிக்கும் விதத்தை காட்டும் படம்
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

**குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்**

- உங்கள் குழுவுக்குத் தலைவர் ஒருவரை நியமியுங்கள். (முன்பு தலைவராக இருக்காத ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.)
- உங்கள் குழுவினர் பெற்ற ஆய்வுப் பத்திரத்திலுள்ள திருவிவிலியப் பகுதியையும், ஏனைய கருத்துக்களையும் நன்றாக வாசியுங்கள்.
- அதிலுள்ள கருத்துக்களை குழுவிலுள்ள அங்கத்தவரோடு கலந்துரையாடுங்கள்.
- விளங்காத கருத்துக்களை விளங்கியவர்களிடம் கேட்டறியுங்கள்.
- நீங்கள் இச் செயற்பாட்டினூடாக கோவைப்படுத்திய விடயங்களை அடிப்படையாக் கொண்டு கீழ்க்காணப்படும் முன்வைப்புக்குத் தாயாராகுங்கள். (கட்டுரை, பொது அறிவுப் போட்டி, சுவரொட்டி, நாடகம், தாளலயப் பாட்டு, செருகல் அட்டை ஆகிய முறைகளைப் பயன்படுத்தலாம்)

## இணைப்பு 2

## ஆய்வுப் பத்திரம்

உன்னத குருவாம் இயேசுவின் செபம் யோவான் 17 ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் நோக்கம் ஒருமைப்பாடாகும். இயேசு தனக்காகவும் (யோவா17:1-5) தனது திருத்தூதர்களுக்காகவும் (யோவான்17:6-9) எதிர்கால சபையின் ஒற்றுமைக்காகவும் (யோவா 17:20 – 26) இறைத்தந்தையிடம் செபித்தார்.

இறை ஆட்சியை நோக்கி செல்லும் பயணத்தின்போது கிறிஸ்தவ சபையின் ஒருமைப்பாட்டிற்காகச் செயலாற்ற வேண்டியதன் தேவை ஏற்பட்டுள்ளது. ஏற்றுக்கொள்ளப்பட்ட சபைகள் ஏழு ஆகும். அவையாவன:

1. இலங்கை சபை (இங்கிலாந்து சபை, அங்கிலிக்கன் சபை)
2. மெதடிஸ்த சபை
3. பப்டிஸ்ட்
4. ஒல்லாந்து சீர்திருத்தச் சபை
5. பிரஸ்பிடேரியன் சபை
6. தென்னிந்தியத் திருச்சபை
7. கிரேக்க ஒத்தடொக்ஸ் சபை

இரண்டாவது வத்திக்கான் பொதுச் சங்கத்தில் கிறிஸ்தவ ஒருமைப்பாட்டிற்காக இரு தொகுப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. எல்லா வருடங்களிலும் ஜனவரி 18-25 வரை மேற்கூறப்பட்ட சபைகள் அனைத்தும் சேர்ந்து கிறிஸ்தவ சபைகளின் ஒருமைப்பாட்டிற்காகச் செபிப்பர்.

**வீட்டுச் சூழலில் :**

ஏற்றுக்கொள்ளப்பட்ட சபையின் அங்கத்தவர்களோடு ஒற்றுமையாக செயற்படுங்கள்.

## பாடம் - 25

## கெத்சமனியில் வேண்டுதல்

**தேர்ச்சி 5.0** : செபத்தின் மூலம் ஊட்டம் பெற்று இறைவனுடனும் மனிதனுடனும் ஆழமான உறவை வளர்த்துக்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 10.5.4** : செபத்தினால் சக்தி பெற்று சோதனைகளை வெற்றி பெறுவர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள் :**

- கெத்சமனித் தோட்டத்துச் செபம் பற்றிய தகவல்களைக் கோவைப்படுத்துவர்.
- இயேசு கெத்சமனியில் செபித்ததன் வழியாக சவால்களை வெற்றியீட்டக் கூடிய சக்தியை பெற்றுக்கொண்டார் என்பதை ஏற்றுக்கொள்வார்.
- செபத்தினால் சக்தியை பெற்று சோதனைகளில் இருந்து வெற்றியீட்டும் முறையை ஆக்கமாக முன்வைப்பர்.
- வாழ்க்கையில் எல்லா சந்தர்ப்பங்களிலும் செபத்தினால் சக்தியை பெற்றுக் கொள்வர்.
- குழுக்களின் பங்களிப்போடு செயற்பாடுகளில் ஈடுபடுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- இணைப்பு 2இன் படி தெரேசாவின் கனவின் முக்கிய கருத்துக்கள் வழியாக, கீழ்க் காணப்படும் கருத்துக்களை வெளிக் கொணரக் கூடியதாக கலந்துரையாடலை நடாத்துங்கள்.
- இயேசு கெத்சமனியில் மூன்று திருத்தூதர்களோடு தனிமையிலிருந்து செபித்தல்.
- அவர் மும்முறை செபித்தார். அவ்வேளை திருத்தூதர்கள் மூவரும் செபிக்காமல் நித்திரை செய்தனர்.
- தெரேசா செபத்தை கைவிட்டு நித்திரை செய்தார்.
- கனவினால் பயந்து மீண்டும் எழுந்து செபித்தார்.
- எல்லா சந்தர்ப்பங்களிலும் காலம் தாழ்த்தாமல் செபத்தில் ஈடுபடுதல் இறைவனுடைய பிள்ளையின் பண்பாடாகும்.

(20 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் திருவிவிலியம் அல்லது புதிய ஏற்பாடு, இணைப்பு 1ஐப் பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களைக் குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(30 நிமிடங்கள்)

படி 3

- ஒவ்வொரு மாணவருக்கும் அல்லது ஒவ்வொரு குழுவினருக்கும் தமது செயற்பாடுகளின் இறுதி ஆக்கத்தை வகுப்பில் முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன் வரும் குழுவுக்கு, முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் முன் வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் (சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன்படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.

  - கெத்சமனியில் வேண்டுதல் (மாற்கு 14: 32–42) வழியாக எமக்கு முன்வைக்கப்படும் முக்கிய செய்தி வாழ்கையின் எல்லா சந்தர்ப்பங்களிலும் செபம் சொல்ல ஆயத்தமாக இருக்க வேண்டும் என்பதாகும்.
  - கெத்சமனியின் அமைப்பு
  - கெத்சமனி தோட்டத்தின் செபம் 3 பகுதிகளைக் கொண்டது.

    1. இயேசுவின் உண்மையான மனித சுபாவம்.
    2. இறைவனுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையிலுள்ள உறவு.
    3. அவருடைய துன்ப வேதனைகள்

  - இயேசு கெத்சமனியில் செபித்ததன் வழியாக சக்தியைப் பெற்றுக் கொண்டார்.
  - திருத்தூதர்கள் செபத்தினால் சக்தியை பெறாதபடியால் சோதனைக்கு உட்பட்டனர். (பயந்து ஓடியது,காதை வெட்டியது, மறுதலித்தது)
  - இயேசுவின் துன்ப வேதனைகளின் விளக்கத்தில் உள்ள முக்கிய இடம் கெத்சமனி அனுபவத்துக்கேயுரியதாகும்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திருவிவிலியம், புதிய ஏற்பாடு (மாற்கு 14: 32 –42)
- பிறிஸ்டல் அட்டை, டிமைன் தாள், பிளாறிறினம் பேனா
- இணைப்பு 1, 2, 3

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

## இணைப்பு 1

## குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்

- உங்கள் குழுவுக்குத் தலைவர் ஒருவரை நியமியுங்கள். (முன்பு தலைவராக இருக்காத ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.)
- உங்கள் குழுவினர் பெற்ற ஆய்வுப் பத்திரத்திலுள்ள திருவிவிலியப் பகுதியையும், ஏனைய கருத்துக்களையும் நன்றாக வாசியுங்கள்.
- அதிலுள்ள கருத்துக்களை குழுவிலுள்ள அங்கத்தவரோடு கலந்துரையாடுங்கள்.
- விளங்காத கருத்துக்களை விளங்கியவர்களிடம் கேட்டறியுங்கள்.
- நீங்கள் இச்செயற்பாட்டினூடாக கோவைப்படுத்திய விடயங்களை அடிப்படையாக் கொண்டு ‘‘செபத்தினால் சக்திப் பெற்று சோதனையில் வெற்றி பெறுவோம்’’ என்பதனை பற்றி முன்வைப்பொன்றுக்குத் தாயாராகுங்கள். (முன் வைப்பிற்காக, உரையாடல், நாடகம், தாளலயப் பாட்டு, சுவரொட்டி ஆகிய முறைகளைப் பயன்படுத்தலாம்)

## இணைப்பு 2

## உட்பிரவேசத்திற்கான கதை

தெரேசா 15 வயதுடைய சிறுமியாவாள். ஒரு நாள் அவள் தனது வீட்டில் உணவுண்ட பின் தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவ்விடத்திலேயே அவள் நித்திரையானாள். அவர் நித்திரையாக இருக்கும் போது கனவொன்று கண்டார். ஓலிவ மரங்கள் வளர்க்கப்பட்ட பழத்தோட்டமொன்று தெரிந்தது. அது மலைப் பிரதேசமாகவிருந்தது. அங்கு ஒரு குன்றின் மீது இயேசு முகங்குப்புற விழுந்து செபிப்பதில் ஈடுபட்டிருந்ததோடு, குன்றின் ஓரங்களில் இடத்திற்கிடம் மூவர் நித்திரை செய்த விதம் காணக்கூடியதாகவிருந்தது.

இதில் ஒருவர் பேதுரு ஆவார். ஏனைய இருவரும் யாக்கோபும் யோவானுமாவார்கள். பின்னர் இயேசு அவர்களிடத்துக்கு வந்து அவர்கள் நித்திரை செய்வதை கண்டு பேதுருவை நோக்கி “சீமோனே நீ உறங்குகின்றாயா? ஒரு மணி நேரமாவது விழித்திருக்க உன்னால் முடியாது போனதா? சோதனைக்கு உட்படாதபடி செபிக்கவும், உங்கள் மனம் ஆர்வமுள்ளது எனினும் உடல் வலுவற்றது” எனக் கூறினார். அவர் மீண்டும் சென்று செபித்தார். பின்னர் வந்து அவர்கள் உறங்குவதை கண்டார். அவர்களது கண்கள் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தன. அவர்கள் மூவரும் மௌனமாக ஒருவரையொருவர் பார்த்தவாறு இருந்தனர். இயேசு மீண்டும் சென்று செபித்தார்.

அவர் மூன்றாம் முறையும் அவர்களிடம் வந்து அவர்களை நோக்கி “இன்னும் உறங்குகின்றீர்களா? எழுந்திருங்கள் நாம் போவோம்” எனக் கூறினார். அத்தருணத்தில் யூதாஸ் வந்து முத்தமிட்டு அணைத்துக் கொண்டு அவரை எதிரிகளுக்குக் காட்டிக் கொடுத்தான். அவ்வேளையே தெரேசா “ஐயோ இயேசுவே” எனக் கூறியவாறே விழித்தாள். அவள் பயத்துக்குள்ளாகி தொலைக்காட்சி இயங்கிக் கொண்டிருக்க இயேசுவின் சுரூபத்தின் முன் முழந்தாள்படியிட்டு திருமணித்தியாலத்தில் ஈடுபட்டாள்.

**வீட்டுச் சூழலில் :**

தினமும் குடும்பமாக செபியுங்கள்.

- **கணணி பதிப்பு :** செல்வி. நா.வி. இராஜயோகினி
  செல்வி பிலிசியா பர்னாந்து
  திரு. டயஸ் அமரசிங்க
  திருமதி. டொறின் செல்வகுமார்